# பகுதி III

# பகுதி III

## 2015ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்


| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| | **வங்கி மேற்பார்வைத் திணைக்களம்** | | |
| 1. | 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான திரவத்தன்மை காப்பீடு விகிதம் | | 1 |
| 2. | வங்கித்தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வசதியை விரிவுபடுத்துதல் | 02/04/002/0015/002 | 16 |
| 3. | ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களின் அறவிடல் | 02/17/600/0002/002 | 17 |
| 4. | ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களின் அறவிடல் | 02/17/600/0002/002 | 17 |
| 5. | வங்கித்தொழில் கிளைகளின் தொழிற்பாடுகள் மீதான வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்களின் அறிமுகம் | 02/01/006/0200/002 | 18 |
| 6. | கொடுகடன் தரமிடல் முகவரொருவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட லங்கா ரேடிங் முகவர் லிமிடெட்டினை இடைநிறுத்துதல் | 02/17/500/0063/001 | 18 |
| 7. | 2015ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உந்து ஊர்திகள் தொட-ர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதி விகித அடிப்படையில் கடன்வழங்கல் | | 18 |
| 8. | 2015ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உந்து ஊர்திகள் தொட-ர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதி விகித அடிப்படையில் கடன்வழங்கல் | | 19 |
| 9. | கம்பனி ஆளுகை தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் | 02/17/550/0002/003 | 19 |
| 10. | கம்பனி ஆளுகை தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மீதான வழிகாட்டல்கள் | 02/17/550/0002/003 | 19 |
| | **உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்** | | |
| 11. | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/01/005/0006/35 | 20 |
| 12. | உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/19 | 20 |
| 13. | ஒதுக்குத் தேவைப்பாடுகள் | 35/01/005/0007/09 | 20 |
| | **செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களம்** | | |
| 14. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது | 1947/13 ஆம் இலக்கம் | 21 |
| 15. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது | 1947/14 ஆம் இலக்கம் | 21 |

| | | | |
|---|---|---|---|
| 16. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது | 1947/15 ஆம் இலக்கம் | 22 |

நிதியியல் உளவறிதல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 17. | வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களை அறிக்கையிடல் | 01/15 | 22 |

பொது படுகடன் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 18. | 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க முதனிலை வணிகர் கம்பனிகள் (குறைந்தபட்ச மைய மூலதனம்) பணிப்புரை | | 23 |
| 19. | 2015ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க முதனிலை வணிகர் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் - திருத்தம்) பணிப்புரை | | 23 |

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 20. | 2015 சனவரி 14ஆம் திகதியை அரச மற்றும் வங்கி விடுமுறையாக பிரகடனப்படுத்தல் | **ஆர்ரிஜிஎஸ்/01/201** | 24 |
| 21. | லங்கா செட்டில் முறைமை 2015 மே 08ஆம் நாளன்று அதன் மாற்று அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | **ஆர்ரிஜிஎஸ்/02/2015** | 25 |
| 22. | சவியாபார நேரத்திற்குப் பின்பும் லங்கா செட்டில் முறைமையினை நீடிப்பதற்கான கோரிக்கை | **ஆர்ரிஜிஎஸ்/03/2015** | 25 |
| 23 | கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீதான உயர்ந்தபட்ச வரையறைகள் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிக் கட்டணம் | | 26 |
| 24. | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தின் மீதான உயர்ந்தபட்ச வரையறை | | 26 |
| 25. | லங்கா செட்டில் முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தின் மீதான தொழிற்பாட்டாளர் கட்டணங்களும் உயர்ந்தபட்ச வரையறையும் | | 27 |
| 26. | 2015 ஓகத்து 17ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | | 27 |
| 27. | லங்கா செட்டில் முறைமையின் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்குத் திருத்தம் | | 28 |
| 28. | லங்கா செட்டில் முறைமையில் டிஎவ்சிசி வர்தன வங்கி பிஎல்சி இன் பெயர் மாற்றம் | | 30 |
| 29. | ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாகக் கொடுக்கல்வாங்கல்களை வழிப்படுத்துவதற்கான நடைமுறை | | 30 |
| 30. | பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழி - லங்காபே இற்கான நேரத் தொடர் | | 34 |

பிரதேச அபிவிருத்தி திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 31. | அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 இற்கான திருத்தம் | **ஆர்டிடி/ சிஜிஎஸ்பிஏ/14/1 (ஏ-03)** | 34 |
| 32. | சிறுஉடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஆர்டிடி.்.எஸ்பிசஎன்டிபி.்.2009.்.06 இற்கான திருத்தங்கள் (கடன் இல. 712 எல்கே) | ஆர்டிடி/ எஸ்பிசஎன்டிபி/ 2009/06 | 35 |

| | | | |
|---|---|---|---|
| 33. | சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கு குறுங்கால கொடுகடனை வழங்குவதற்காக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின்கீழ் களஞ்சியசாலை பற்றுச்சீட்டு நிதியிடலை அறிமுகப்படுத்தல். | | 36 |
| 34. | தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம் | ஆர்டிடி/ டபில்யூசிஎல்எஸ்ரிஎப்/ 2015/01 | 39 |
| 35. | தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/ டபில்யூசிஎல்எஸ்ரிஎவ்/ 2015/01 (ஏ-01) | 43 |
| 36. | தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/ டபில்யூசிஎல்எஸ்ரிஎவ்/ 2015/01 (ஏ-02) | 43 |
| 37. | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II<br>வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | | 43 |
| 38. | சுபீட்சக் கடன் திட்டத்தின் (சௌபாக்கியா) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | ஆர்டிடி/பிஆர்/2010/03 (ஏ-04) | 44 |
| 39. | அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாத திட்டத்தின் தொழிற்பாடுகளை முடிவுறுத்தல் | 32/08/003/0014/001 | 45 |

**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 40. | 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி | | 45 |
| 41. | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 2015 இல. 01 | 46 |
| 42. | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 2015 இல. 02 | 46 |
| 43. | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 2015 இல. 01 | 47 |
| 44. | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் | 2015 இல. 02 | 47 |

**2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2015 மாச்சு 31

## பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான திரவத்தன்மை காப்பீடு விகிதம்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் கீழ் விடுக்கப்பட்டது.

நாணயச் சபையானது வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் முறையே 2010 திசெம்பரிலும் 2013 சனவரியிலும் விடுக்கப்பட்ட "பாசல் III: திரவத்தன்மை இடர்நேர்வு அளவீடுகள், நியமங்கள் மற்றும் கண்காணிப்புக்கான பன்னாட்டுக் கட்டமைப்பு" மற்றும் "பாசல் III: திரவத்தன்மை காப்பீடு விகிதம் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு கண்காணிப்புக் கருவிகள்" என்பனவற்றிற்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் திரவத்தன்மை காப்பீடு விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இப்பணிப்புரைகளை விடுத்தது.

1. **வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்**

வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) ஆகிய பிரிவுகளின் நியதிகளில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதாவதொரு வங்கிக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. **குறைந்தபட்சத் திரவத்தன்மை காப்பீடு விகிதத் தேவைப்பாடு**

உள்நாட்டு நாணயத் தொழிற்பாடுகளுக்கான ரூபாய் திரவத்தன்மை குறைந்தபட்சத் தேவைப்பாடு மற்றும் பொதுவான தொழிற்பாடுகளுக்கான அனைத்து நாணயத் திரவத்தன்மை குறைந்தபட்சத் தேவைப்பாடு தொடர்பில் 2015 ஏப்பிறல் 01 தொடக்கம் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் இங்கே இணைப்பு 1இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு திரவத்தன்மை காப்பீடு விகிதத்தினை கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பேணுதல் வேண்டும்.

| நடைமுறைக்குவரும் திகதி | 2015 ஏப்பிறல் 1 | 2016 சனவரி 1 | 2017 சனவரி 1 | 2018 சனவரி 1 | 2019 சனவரி 1 இலிருந்து |
|---|---|---|---|---|---|
| குறைந்தபட்சத் தேவைப்பாடு (சதவீதம்) | 60 | 70 | 80 | 90 | 100 |

3. **பொருத்தமான முறைமைகளை நடைமுறைப்படுத்தல்**

ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் பொருத்தமான முறைமைகளை விருத்தி செய்து நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் மேலேயுள்ள பணிப்புரை 2 இற்கிணங்க திரவத்தன்மை காப்பீடு விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் வழங்குதலும் வேண்டும்.

4. **ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்**

ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் இங்கேயுள்ள இணைப்பு I இற்கான பின்னிணைப்புக்கள் I இலிருந்து III வரை தரப்பட்டுள்ள படிவங்கள் மற்றும் வழிகாட்டல்களில் தரப்பட்டுள்ளவாறு அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ மாதாந்த அடிப்படையில் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைமையினூடாக தனித்தனியாக இரண்டு கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **கண்காணிப்புக் கருவிகள்**

ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் 2013 சனவரியில் விடுக்கப்பட்ட "பாசல் III: திரவத்தன்மை காப்பீடு விகிதம் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு கண்காணிப்புக் கருவிகள்" இல் விதந்துரைக்கப்பட்டவாறான கீழே குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவிகளைப் பயன்படுத்தி திரவத்தன்மை நிலைமையினையும் அத்தகைய கருவிகளின் பிரயோகத்திற்கான ஆவண செயன்முறைகளையும் கண்காணித்தல் வேண்டும். எனினும், இக்கண்காணிப்பு, மேலதிக குறைந்தபட்சத் தேவைப்பாடுகளிற்கானவையாக மாத்திரமே இருக்க வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் அதன் அளவு மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளின் தன்மை என்பனவற்றுடன் தொடர்பான விதத்திலும் திரவத்தன்மை நிலைமையினைக் கண்காணித்தல் வேண்டும்.

(i) **ஒப்பந்த ரீதியான முதிர்ச்சியின் பொருத்தப்பாடின்மை:** ஒப்பந்த ரீதியான முதிர்ச்சிப் பொருத்தப்பாடின்மைத் தோற்றப்பாட்டினை அடையாளம் காண்பதற்கான அளவை முறையொன்றினை விருத்தி செய்தல் வேண்டும், அதாவது சாத்தியமான திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை மதிப்பிடுவதற்கான காலப்பகுதியொன்றினை நிர்ணயிப்பதற்கான ஒப்பந்த ரீதியான உட்பாய்ச்சலுக்கும் வெளிப்பாய்ச்சலுக்குமிடையிலான இடைவெளி.

(ii) **நிதியிடலின் திரட்சி:** குறிப்பிடத்தக்க இணைத்தரப்பினர்கள், கருவிகள்/ சாதனங்கள், நாணயங்கள் போன்றவற்றிலிருந்து தோன்றக்கூடிய நிதியிடல் திரட்சி இடர்நேர்வினைத் தணிப்பதற்கான அளவை முறையொன்றினை விருத்தி செய்தல் வேண்டும்.

(iii) **குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணயத்தின் மூலமான திரவத்தன்மை காப்பீடு விகிதம்:** சாத்தியமான நாணயப் பொருத்தப்பாடின்மைகளைக் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையொன்றில், ஒவ்வொரு குறிப்பிட்ட நாணயத்திலுள்ள திரவத்தன்மை காப்பீடு விகிதத்தினைக் கண்காணிப்பதற்காக அளவை முறையொன்றை விருத்தி செய்தல் வேண்டும். இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக குறிப்பிட்ட நாணயங்கள், அத்தகைய நாணயங்களில் வங்கி மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல்களில் அளவின் அடிப்படையிலும் வெளிநாட்டு நாணயச் சந்தைகளில் நிதிகளைத் திரட்டுவதற்கான இயலாற்றலின் அடிப்படையிலும் உள்ளக ரீதியாக தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(iv) **கிடைக்கத்தக்கதாகவுள்ள தடைகளற்ற சொத்துக்கள்:** இரண்டாந்தரச் சந்தை அத்துடன்/ அல்லது மத்திய வங்கிகளிலிருந்தான மேலதிக நிதிகளைத் திரட்டுவதற்கான பிணையாகப் பயன்படுத்தத்தக்க சாத்தியங்களைக் கொண்டிருக்கின்ற கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்துச் சொத்துக்களினதும் அளவு மற்றும் முக்கிய பண்புகள் தொடர்பான தரவுகளை வழங்குவதற்கான அளவை முறையொன்றினை விருத்தி செய்தல் வேண்டும்.

பி. சமரசிறி
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I**

**திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தின் மீதான பாசல் III திரவத்தன்மை நியமங்கள்**

## 1. அறிமுகம்

1.1. 2007இல் தொடங்கிய அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது, முன்மதியுடைய திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் போதியளவு இல்லாமை காரணமாகவும் சந்தைப் பங்கேற்பாளர்களினால் கொடுகடன் வசதிகள் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாக சந்தையிலிருந்து திரவத்தன்மை திடீரென இல்லாமல் போனமையின் காரணமாகவும் போதுமான மூலதன மட்டங்களைக் கொண்டிருந்த குறிப்பிட்ட சில வங்கிகளும் கூட கடுமையான அழுத்தங்களுக்கு உட்பட்டமையினை எடுத்துக்காட்டியது.

1.2. வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழு, திரவத்தன்மை இடர்நேர்வு அளவீடுகள், நியமங்கள் மற்றும் கண்காணிப்பு மீதான பாசல் III விதிகளை 2010.12.16 அன்று வெளியிட்டது. இரண்டு குறைந்தபட்ச நியமங்களான திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் மற்றும் தேறிய உறுதியான நிதியிடல் விகிதம் என்பன வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விதந்துரைக்கப்பட்டன. 2013 சனவரியில் பாசல் குழுவின் மேற்பார்வைச் சபையான மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் மேற்பார்வைத் தலைவர்களின் குழுவானது திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதம் மீதான பாசல் III திரவத்தன்மை விதியினை திரவத்தன்மை இடர்நேர்விற்கான உலகளாவிய குறைந்தபட்ச நியமமாக அங்கீகரித்திருக்கிறது.

1.3. திரவத்தன்மை காப்பீட்டு விகிதமானது, நிதியியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களிலிருந்து தோன்றுகின்ற அதிர்வுகளை ஈர்த்துக்கொள்ளும் விதத்தில் வங்கித்தொழில் துறையின் இயலாற்றலை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் காரணமாக உண்மைப் பொருளாதாரத்திற்கான நிதியியல் துறையிலிருந்து கசிகின்ற இடர்நேர்வுகளையும் குறைக்கின்றது. திரவத்தன்மை காப்பீட்டு விகிதமானது மிகவும் தாக்குப்பிடிக்கக்கூடிய வங்கித்தொழில் துறையினை ஊக்குவிக்கின்ற இலக்குடன் கூடிய வலுவான உலகளாவிய திரவத்தன்மை ஒழுங்குவிதிகளுக்கான பாசல் குழுவின் முக்கிய சீர்திருத்தங்களிலொன்றாகக் காணப்படுகின்றது.

1.4. பாசல் III திரவத்தன்மை நியமங்கள் பன்னாட்டு ரீதியான நடவடிக்கைகளைக் கொண்ட வங்கிகளின் மீதே முக்கிய கவனத்தினைச் செலுத்துகின்றது. எனினும், திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேலும் வலுப்படுத்துதல், சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் சிறந்த ஒப்பீடுகளை மேற்கொள்ளுதல், நிறுவன தரமிடலை வசதிப்படுத்துதல், நாட்டிற்கான தரமிடல் மற்றும் பன்னாட்டு நிதியினைத் திரட்டும் நடவடிக்கைகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு மற்றைய வங்கிகளுக்காகவும் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் இந்நியமங்களைப் பின்பற்றினர்.

## 2. ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

2.1 **திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தின் குறிக்கோள்:**

திரவத்தன்மை காப்பீட்டு விகிதமானது:

அ) திரவத்தன்மை அழுத்தச் சூழ்நிலையொன்றின் போது 30 கலண்டர் நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கான அவற்றின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக இரண்டாந்தரச் சந்தையில் இலகுவாகவும் உடனடியாகவும் காசாக மாற்றக்கூடிய பொறுப்புக்களற்ற உயர்தரத் திரவத்தன்மைச் சொத்துக்களின் போதுமான இருப்புக்களை உறுதிப்படுத்துகின்ற வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் குறுங்கால தாக்குப்பிடிக்கும் தன்மையினை ஊக்குவிப்பதனையும்; அத்துடன்

ஆ) நிதியியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களிலிருந்து, மூலம் எதுவாக இருப்பினும் அவற்றிலிருந்து தோன்றுகின்ற அதிர்வுகளை ஈர்த்துக் கொள்ளக்கூடிய விதத்தில் வங்கித்தொழில் துறையிலிருந்தான ஆற்றலை மேம்படுத்துவதன் மூலம் உண்மைப் பொருளாதாரத்திற்கான நிதியியல் துறையிலிருந்து கசிகின்ற இடர்நேர்வுகளைக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

2.2 **பிரயோகத்தின் செயற்பரப்பு**

ஆரம்பத்தில், திரவத்தன்மை காப்பீட்டு விகிதக் கட்டமைப்பானது கிளைகளினூடாக வெளிநாட்டுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற வங்கிகள் உட்பட “தனியான” தனித்துவ மட்டங்களைக் கொண்ட வங்கிகளுக்கு ஏற்புடைத்தனவாக இருத்தல் வேண்டும். இதற்குப்பின், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளைப் பொறுத்தவரையில், செயற்பரப்பானது திரட்டப்பட்ட “குழுமம்” மட்டம் வரைக்கும் விரிவாக்கப்படும்.

2.3 **திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தினைக் கணித்தல்**

திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தின் கணிப்பானது பின்வரும் சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

$$\text{திரவத்தன்மை காப்பீடு விகிதம்} = \frac{\text{உயர்தரத் திரவச் சொத்துக்களின் இருப்பு}}{\text{அடுத்த 30 கலண்டர் நாட்களின் போது மொத்தத் தேறிய காசின் வெளிப்பாய்ச்சல்}} * 100$$

2.4 **உயர்தர திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்**

2.4.1. **உயர்தர திரவச் சொத்துக்களென்பது பின்வரும் நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் சொத்துக்களாகும்.**

அ) பெறுமதியில் சிறிய அல்லது எவ்வித இழப்புக்களுமின்றி இலகுவாகவும் உடனடியாகவும் காசாக மாற்றக்கூடியதன்மை

ஆ) அழுத்தச் சூழ்நிலையொன்றின் போது நிதியினைப் பெறுவதற்காக உடனடியாக விற்கக்கூடிய அல்லது பிணையாகப் பயன்படுத்தக்கூடிய தன்மை, அத்துடன்

இ) பொறுப்புக்களற்றவை அதாவது சட்ட, ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது தொழிற்பாட்டு ரீதியான தடைகள் இல்லாதவை.

2.4.2. **உயர்தர திரவச் சொத்துக்களின் பண்புகள்**

உயர்தர திரவச் சொத்துக்களின் பண்புகளைத் தீர்மானிக்கும் பொழுது, வங்கிகள் அத்தகைய சொத்துக்களின் அடிப்படைப் பண்புகளையும் சந்தையுடன் தொடர்பான பண்புகளையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

**அ) அடிப்படைப் பண்புகள்**

(i) **குறைந்த கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வு:** குறைந்த இடர்நேர்வுகளைக் கொண்ட சொத்துக்கள் உயர் திரவத்தன்மைக்கு வழிவகுக்கும். வழங்குநரின் உயர் கொடுகடன் தரமும் கீழ்நிலையின் குறைந்த அளவும் சொத்துக்களின் திரவத்தன்மையினை அதிகரிக்கின்றன. குறைந்த காலம், குறைந்த தளம்பல்கள், குறைந்த பணவீக்க இடர்நேர்வு மற்றும் குறைந்த வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுடன் கூடிய மாற்றத்தக்க நாணயமொன்றின் நாணய இனங்கள் என்பன சொத்துக்களின் திரவத்தன்மையினை உயர்த்தும்.

(ii) **மதிப்பீட்டின் எளிமையான மற்றும் நிச்சயமான தன்மை:** சந்தைப் பங்கேற்பாளர்கள் அதன் பெறுமதியின் மீது மிகக் கூடுதலாக இணங்கக்கூடியவர்கள் போல் தோன்றுமிடத்து சொத்தொன்றின் திரவத்தன்மை அதிகரிக்கிறது. உயர்தர திரவச் சொத்துக்களின் விலையிடல் சூத்திரம் கணிப்பதற்குச் சுலபமானதொன்றாக இருக்க வேண்டியதுடன் வலுவான எடுகோள்களின் மீது தங்கியிருத்தலும் கூடாது. விலையிடல் சூத்திரத்திற்குள்ளான உள்ளீடுகள் பகிரங்கமாக கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும். நடைமுறையில், மிகுந்த அமைப்பியலைக் கொண்ட அல்லது சிக்கல்வாய்ந்த சாதனங்களை உள்ளடக்குவதனை இது நிராகரிக்கிறது.

(iii) **இடர்நேர்வுச் சொத்துக்களுடனான குறைந்தளவு தொடர்பு:** உயர்தர திரவச் சொத்துக்களின் இருப்பு உயர்ந்தளவிற்குத் தொடர்புபட்ட இடர்நேர்வு நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கக்கூடாது. உதாரணமாக, வங்கித்தொழில் துறையில் திரவத்தன்மை அழுத்தம் காணப்படும் நேரங்களில் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சொத்துக்கள் மிகக்கூடியளவிற்கு திரவத்தன்மையற்றனவாக இருக்கும் போல் தோன்றுகின்றது.

(iv) **அபிவிருத்தியடைந்த மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைச் சந்தையில் பட்டியலிடப்பட்டவை:** பட்டியலிடப்படுகின்றமையானது சொத்துக்களின் வெளிப்படையான தன்மையினை அதிகரிக்கிறது.

**ஆ) சந்தையுடன் தொடர்புபட்ட பண்புகள்**

(i) **தீவிரமான மற்றும் அளவில் பெரிய சந்தை:** சொத்தானது எல்லா நேரங்களிலும் தீவிரமான உடனடி விற்பனைச் சந்தையினை அல்லது மீள்கொள்வனவு உடன்படிக்கைச் சந்தையினைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது பாரிய எண்ணிக்கையான சந்தைப் பங்கேற்பாளர்களையும் உயர்ந்த வர்த்தகப்படுத்தல் அளவினையும் கொண்டிருத்தல் வேண்டும். திரவத்தன்மை அலகொன்றிற்கான விலையின் தாக்கம் போன்ற சந்தை அகலம் மற்றும் தரப்பட்ட விலைத் தாக்கத்திற்கு வர்த்தகப்படுத்தக் கூடிய சொத்துக்களின் அலகுகள் போன்ற சந்தை ஆழம் போன்றவற்றின் வரலாற்று ரீதியான சான்றுகள் இருத்தல் வேண்டும்.

(ii) **அர்ப்பணிப்பு மிக்க சந்தை உருவாக்குநர்களின் பிரசன்னம்:** உயர்தர திரவச் சொத்துக்களின் வாங்கல் அத்துடன்/ அல்லது விற்றலுக்கான விலைக்குறிப்பீடுகள் கிடைக்கத்தக்கனவாக இருத்தல் வேண்டும்.

(iii) **குறைந்த சந்தைத் திரட்சி:** சொத்துச் சந்தையொன்றிலுள்ள வாங்குநர்கள் மற்றும் விற்பவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட குழுமம் அதன் திரவத்தன்மையின் நம்பகத்தன்மையினை அதிகரிக்கிறது.

(iv) **தரமான சொத்துக்களை நோக்கிய மூலதனத்தின் அசைவு:** வரலாற்று ரீதியாக, சந்தையானது, முறையியல் நெருக்கடிகளின் போது இவ்வகைச் சொத்துக்களை நோக்கி அசைகின்ற போக்கொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.5 **உயர்தர திரவச் சொத்துக்களின் வகைகள்**

உயர்தர திரவச் சொத்துக்கள் இரண்டு பரந்த வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகையிலும் உள்ளடக்கப்படவுள்ள சொத்துக்கள் அழுத்த காலப்பகுதியின் முதல் நாளன்று வங்கி வைத்திருந்த வகையினதாக இருக்குமேயன்றி எஞ்சிய முதிர்ச்சிக் காலத்தினைக் கருத்திற்கொள்ளாது.

(அ) **படிநிலை 1 சொத்துக்கள்:** கையிலுள்ள பணம், தகைமை வாய்ந்த மத்திய வங்கி ஒதுக்குகள் மற்றும் பாசல் II மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் கீழ் 0 சதவீத இடர்நேர்வு நிறையினைக் கவர்கின்ற தகைமை வாய்ந்த சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

(ஆ) **படிநிலை 2 சொத்துக்கள்:** உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்தத்தில் உயர்ந்தபட்சம் 40 சதவீதம் வரையான 2ஏ சொத்துக்களையும் 2பீ சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

(i) **படிநிலை 2ஏ சொத்துக்கள்:** பாசல் II மூலதனப் போதுமை கட்டமைப்பின் கீழ் 20 சதவீதம் இடர்நேர்வு நிறையினைக் கவர்கின்ற தன்மை வாய்ந்த சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் மற்றும் தகைமை வாய்ந்த நிதியியலல்லாக் கம்பனிப் படுகடன் பிணையங்களையும் உயர்ந்தபட்சம் 15 சதவீதம் என்ற நிபந்தனைக்குட்பட்டு நிறைகாப்புடைய கூறு நம்பிக்கைகளில் செய்யப்பட்ட தகைமை வாய்ந்த முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

(ii) **படிநிலை 2பீ சொத்துக்கள்:** ஏ+ இற்கும் பீபீபீ- இற்குமிடைப்பட்ட வெளிநாட்டு கொடுகடன் தரமிடலுடன் கூடிய தகைமை பெற்ற நிதியியலல்லாக் கம்பனிப் படுகடன் பிணையங்களையும் உயர்ந்தபட்சம் 50 சதவீதம் என்ற நிபந்தனைக்குட்பட்டு தகைமை பெற்ற நிதியியலல்லா பொதுவான பங்குரிமை மூலதனப் பங்குகளையும் உள்ளடக்குகிறது. படிநிலை 2பீ சொத்துக்கள் உயர்தர திரவத்தன்மை சொத்துக்களின் மொத்தத்தில் உயர்ந்தபட்சம் 15 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்புடைத்தான காரணிகள் மற்றும் வரையறைகளுடன் கூடிய ஒவ்வொரு வகையிலும் உள்ளடக்கப்படவிருக்கும் சொத்துக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | விடயம் | காரணி |
|---|---|---|
| | **உயர்தர திரவச் சொத்துக்களின் இருப்பு** | |
| **அ.** | **படிநிலை 1 சொத்துக்கள்** | |
| • | கையிலுள்ள பணம் | 100% |
| • | நியதி ஒதுக்கு விகிதத்திற்கு மேலதிகமாகவுள்ள தகைமை வாய்ந்த மத்திய வங்கி மீதிகளும் ஒதுக்கங்களும் | |
| • | 0% இடர்நேர்வு நிறையுடன் கூடிய தகைமை வாய்ந்த சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் | |
| **ஆ.** | **படிநிலை 2 சொத்துக்கள்** ***(உயர்தர திரவச் சொத்துக்களில் உயர்ந்தபட்சம் 40 சதவீதம்)*** | |
| **படிநிலை 2ஏ சொத்துக்கள்** | | |
| • | 20% இடர்நேர்வு நிறையுடன் தகைமை வாய்ந்த சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் | 85% |
| • | தகைமை வாய்ந்த நிதியியலல்லா கம்பனிப் படுகடன் பிணையங்கள் (வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் உட்பட) | |
| • | இலங்கை அரச பிணையங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட நிறைகாப்புடைய கூறு நம்பிக்கைகளிலுள்ள தகைமை பெற்ற முதலீடுகள் | |
| **படிநிலை 2பீ சொத்துக்கள்** ***(உயர்தர திரவச் சொத்துக்களில் உயர்ந்தபட்சம் 15 சதவீதம்)*** | | |
| • | வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலில் ஏ+ இலிருந்து பீபீபீ- வரையிலான தரமிடலுடன் கூடிய தகைமை வாய்ந்த நிதியியலல்லா கம்பனிப் படுகடன் பிணையங்கள் (வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் உட்பட) | 50% |
| • | தகைமை வாய்ந்த நிதியியலல்லா பொதுவான பங்குரிமை மூலதனப் பங்குகள் | |
| | **உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி** | |

2.6 **மொத்தத் தேறிய காசின் வெளிப்பாய்ச்சல்**

2.6.1 மொத்தத் தேறிய காசின் வெளிப்பாய்ச்சல் என்பது அடுத்துவரும் 30 கலண்டர் நாட்களுக்கான மொத்த எதிர்பார்க்கப்பட்ட காசின் உட்பாய்ச்சலைக் கழித்த மொத்த எதிர்பார்க்கப்பட்ட காசின் வெளிப்பாய்ச்சல் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. மொத்த எதிர்பார்க்கப்பட்ட காசின் வெளிப்பாய்ச்சல்கள், பொறுப்புக்களின் பல்வேறு வகைகள் அல்லது தன்மைகளின் வெளிநின்ற நிலுவைகளையும் ஐந்தொகைக்கு வெளியேயான நிச்சயமற்ற பொறுப்புக்களை அவற்றைத் தொழிற்படுத்த அல்லது எடுப்பனவு செய்ய எதிர்பார்க்கின்ற வீதங்களினால் பெருக்குவதன் மூலம் கணிக்கப்படுகின்றது. மொத்த எதிர்பார்க்கப்பட்ட காசு உட்பாய்ச்சல்கள் ஒப்பந்த ரீதியான பெறுகைகளின் பல்வேறுபட்ட வகைகளின் வெளிநின்ற நிலுவைகளை மொத்த எதிர்பார்க்கப்பட்ட காசின் வெளிப்பாய்ச்சலின் 75% வரையிலான சராசரி உச்ச அளவு வரை பாய்ச்சுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வீதத்தினால் பெருக்குவதன் மூலம் கணிக்கப்படுகிறது.

2.6.2 வங்கிகள் விடயங்களை இரண்டு தடவை கணக்கிட முடியாது, அதாவது சொத்தொன்று "உயர்தர திரவச் சொத்துக்களின் இருப்புக்களின்" பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டிருக்குமிடத்து (அதாவது தொகுதி எண்) அதனுடன் சேர்ந்த காசின் உட்பாய்ச்சல் "காசின் உட்பாய்ச்சல்" (அதாவது வகுதி எண்ணின் பாகம்) ஆக கணக்கிடமுடியாது.

2.7. **பின்னிணைப்புக்கள்**

ரூபா திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் (பீஎஸ்டி-எம்எவ்-19-ஆர்ஆர்) மற்றும் அனைத்து நாணயத் திரவத்தன்மை தேவைப்பாடுகள் (பீஎஸ்டி-எம்எவ்-19-ஏஆர்) என்பனவற்றிற்கான அறிக்கையிடல் படிவங்கள் திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தினைக் கணிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தினைக் கணிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்திற்கான சொத்துக்களின் பகுப்பாய்விற்கான கொடுகடன் தரமிடல் முகவர்களின் எண் குறியீடுகளைத் திட்டமிடுதல் என்பன பின்வருமாறு இணைக்கப்பட்டுள்ளன.

2.7.1 பின்னிணைப்பு I - ரூபாத் திரவத்தன்மைத் தேவைப்பாடு மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மைத் தேவைப்பாடு இரண்டிற்குமான அறிக்கையிடல் படிவம்.

2.7.2 பின்னிணைப்பு II - திரவத்தன்மை காப்பீட்டு விகிதக் கணிப்பிற்கான வழிகாட்டல்கள்.

2.7.3 பின்னிணைப்பு III - திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்திற்கான சொத்துக்களின் பகுப்பாய்விற்கான கொடுகடன் தரமிடல் முகவர்களின் எண் குறியீடுகளைத் திட்டமிடுதல்

பின்னிணைப்பு I

## ரூபாத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளுக்கான அறிக்கையிடும் படிவங்கள் (பீஎஸ்டி-எம்எவ்-19-ஆர்ஆர்)
## அனைத்து நாணய திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கான அறிக்கையிடும் படிவங்கள் (பீஎஸ்டி-எம்எவ்-19-ஏஆர்)
## மாதாந்த நிதியியல் கூற்றுக்கள் (இலங்கை ரூபா ’000)

வங்கியின் பெயர் :

..............ஆம் திகதியிலுள்ளவாறு :

பகுதி I - திரவ காப்பீட்டு விகிதத்தின் கணிப்பு

| வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் | தொகை |
|---|---|---|
| 19.1.1.0.0.0 | உயர்தரத் திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு = பகுதி II இன் 19.2.0.0.0.0 | |
| 19.1.2.0.0.0 | மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் = பகுதி III இன் 19.3.0.0.0.0 | |
| 19.1.3.0.0.0 | மொத்தக் காசு உட்பாய்ச்சல் = பகுதி IV இன் 19.4.0.0.0.0 | |
| 19.1.4.0.0.0 | தேறிய காசு வெளிப்பாய்ச்சல் = 19.1.2.0.0.0 - குறைந்தது (19.1.3.0.0.0, 75% *19.1.2.0.0.0) | |
| 19.1.5.0.0.0 | திரவத்தன்மை உள்ளடக்க விகிதம்,% = (19.1.1.0.0.0/19.1.4.0.0.0)*100 | |

பகுதி II - உயர்தரத் திரவச்சொத்துக்களின் கணிப்பு

| வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | சொத்துக்கள் | தொகை | காரணி | நிறையேற்றப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 19.2.0.0.0.0 | **உயர்தர திரவச்சொத்துக்களின் மொத்த இருப்பு** | | | |
| 19.2.1.0.0.0 | **மொத்தச் சீராக்கப்பட்ட படிநிலை 1 சொத்துக்கள்** | | | |
| 19.2.1.1.0.0 | **படிநிலை 1 சொத்துக்கள்** | | | |
| 19.2.1.1.1.0 | கையிலுள்ள பணம் | | 100% | |
| 19.2.1.1.2.0 | தகைமை பெற்ற மத்திய வங்கி நிலுவைகளும் நியதி ஒதுக்கு விகிதத்திற்கு மேலதிகமானவைகளும் | | 100% | |
| 19.2.1.1.3.0 | 0% இடர்நேர்வு நிறையுடன் கூடிய தகைமை பெற்ற சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் | | | |
| 19.2.1.1.3.1 | அரசாங்கங்களினால் வழங்கப்பட்டவை | | 100% | |
| 19.2.1.1.3.2 | அரசாங்கங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 100% | |
| 19.2.1.1.3.3 | மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 100% | |
| 19.2.1.1.3.4 | ப.தீ.வங்கி, ப.நா. நிதியம், ஐ.ச.வங்கி மற்றும் ஐரோப்பிய சமூகம் அல்லது பல்புடை அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதமளிக்கப்பட்டவை | | 100% | |
| 19.2.1.2.0.0 | **சீராக்கங்கள்** | | | |
| 19.2.1.2.1.0 | கூட்டுக: பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக வாக்குறுதியளிக்கப்பட்ட படிநிலை 1 பிணையங்களின் சந்தைப் பெறுமதி | | 100% | |
| 19.2.1.2.2.0 | கூட்டுக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை | | 100% | |
| 19.2.1.2.3.0 | கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட படிநிலை 1 பிணையங்களின் சந்தைப் பெறுமதி | | 100% | |
| 19.2.1.2.4.0 | கழிக்குக: பிணையிடப்பட்ட நிதியினூடாகத் திரட்டப்பட்ட தொகை | | 100% | |
| 19.2.2.0.0.0 | **மொத்தச் சீராக்கப்பட்ட படிநிலை 2ஏ சொத்துக்கள்** | | | |
| 19.2.2.1.0.0 | **படிநிலை 2ஏ சொத்துக்கள்** | | | |
| 19.2.2.1.1.0 | 20% இடர்நேர்வு நிறையுடன் கூடிய தகைமை பெற்ற சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் | | | |
| 19.2.2.1.1.1 | அரசாங்கங்களினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 85% | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.2.2.1.1.2 | மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 85% | |
| 19.2.2.1.1.3 | அரச துறை தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 85% | |
| 19.2.2.1.1.4 | பல்புடை அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 85% | |
| 19.2.2.1.2.0 | தகைமை பெற்ற நிதியல்லா கம்பனி படுகடன் பிணையங்கள் (வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் உட்பட) | | 85% | |
| 19.2.2.1.3.0 | இலங்கை அரசாங்கப் பிணையங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட நிறைகாப்புடைய கூறு நம்பிக்கையிலுள்ள தகைமை பெற்ற முதலீடுகள் | | 85% | |
| 19.2.2.2.0.0 | **சீராக்கங்கள்** | | | |
| 19.2.2.2.1.0 | கூட்டுக: பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக படிநிலை2ஏ பிணையங்களின் சந்தைப் பெறுமதி | | 85% | |
| 19.2.2.2.2.0 | கூட்டுக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை | | 85% | |
| 19.2.2.2.3.0 | கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட படிநிலை 2ஏ பிணையங்களின் சந்தைப் பெறுமதி | | 85% | |
| 19.2.2.2.4.0 | கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாகத் திரட்டப்பட்ட தொகை | | 85% | |
| 19.2.3.0.0.0 | **மொத்தச் சீராக்கப்பட்ட படிநிலை 2பீ சொத்துக்கள்** | | | |
| 19.2.3.1.0.0 | **படிநிலை 2பீ சொத்துக்கள்** | | | |
| 19.2.3.1.1.0 | வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடல் ஏ+ இற்கும் பீபீபீ- இற்குமிடைப்பட்ட தரத்தினைக் கொண்ட தகைமைபெற்ற நிதியல்லாக் கம்பனிப் படுகடன் பிணைங்கள் | | 50% | |
| 19.2.3.1.2.0 | தகைமைபெற்ற நிதியல்லா பொதுப் பங்குரிமை மூலதனப் பங்குகள் | | 50% | |
| 19.2.3.2.0.0 | **சீராக்கங்கள்** | | | |
| 19.2.3.2.1.0 | கூட்டுக: பிணையிடப்பட்ட நிதியிடலுக்கான படிநிலை 2பீ பிணையங்களின் சந்தைப் பெறுமதி | | 50% | |
| 19.2.3.2.2.0 | கூட்டுக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை | | 50% | |
| 19.2.3.2.3.0 | கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட படிநிலை 2பீ இன் சந்தைப் பெறுமதி | | 50% | |
| 19.2.3.2.4.0 | கழிக்குக: பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை | | 50% | |

பகுதி **III** - மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்களின் கணிப்பு

| வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் | தொகை | காரணி | நிறையேற்றப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 19.3.0.0.0.0 | **மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்** | | | |
| 19.3.1.0.0.0 | **வைப்புக்கள்** | | | |
| 19.3.1.1.0.0 | கேள்வி வைப்புக்கள், சேமிப்பு மற்றும் கால வைப்புக்கள் (30 நாட்களுக்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்டவை) | | | |
| 19.3.1.1.1.0 | சில்லறை வாடிக்கையாளர்கள் | | 10% | |
| 19.3.1.1.2.0 | சிறிய வியாபார வாடிக்கையாளர்கள் | | 10% | |
| 19.3.1.2.0.0 | எஞ்சிய முதிர்ச்சிக் காலம் 30 நாட்களுக்கும் கூடுதலாகக் கொண்ட கால வைப்புக்கள் | | 0% | |
| 19.3.2.0.0.0 | **பிணையிடப்படாத மொத்த விற்பனை நிதியம்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3.2.1.0.0 | தீர்ப்பனவுகள், கட்டுக்காப்பு மற்றும் காசு முகாமைத்துவ நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட தொழிற்பாட்டு ரீதியான வைப்புக்கள் | | 25% | |
| 19.3.2.2.0.0 | நிறுவன ரீதியான வலையமைப்பொன்றிலுள்ள கூட்டுறவு வங்கிகள் (மையப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றிலுள்ள தகைமை வாய்ந்த வைப்புக்கள்) | | 25% | |
| 19.3.2.3.0.0 | நிதியல்லாக் கம்பனிகள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், பல்புடை அபிவிருத்தி வங்கி மற்றும் அரச துறை தொழில்முயற்சிகள் | | 40% | |
| 19.3.2.4.0.0 | ஏனைய சட்ட ரீதியான நிறுவன வாடிக்கையாளர்கள் | | 100% | |
| 19.3.3.0.0.0 | **பிணையிடப்பட்ட நிதியிடல் கொடுக்கல்வாங்கல்கள்** | | | |
| 19.3.3.1.0.0 | படிநிலை 1 சொத்துக்களினால் உத்தரவாதப் படுத்தப்பட்டவை | | 0% | |
| 19.3.3.2.0.0 | படிநிலை 2ஏ சொத்துக்களினால் உத்தரவாதப் படுத்தப்பட்டவை | | 15% | |
| 19.3.3.3.0.0 | படிநிலை 2பீ சொத்துக்களினால் உத்தரவாதப் படுத்தப்பட்டவை | | 50% | |
| 19.3.3.4.0.0 | மற்றைய அனைத்துச் சொத்துக்களினாலும் உத்தரவாதப்படுத்தப்பட்டவை | | 100% | |
| 19.3.4.0.0.0 | **உத்தரவாதமளிக்கப்பட்ட பொறுப்பு வசதிகளின் (திரும்பப் பெறமுடியாதவை) எடுப்பனவு செய்யப்படாத பங்கு மற்றும் ஏனைய எதிர்பாராத நிதியிடல் கடப்பாடுகள்** | | | |
| 19.3.4.1.0.0 | பொறுப்பளிக்கப்பட்ட (திரும்பப் பெறமுடியாதவை) வரவுகள் மற்றும் திரவத்தன்மை வசதிகள் | | | |
| 19.3.4.1.1.0 | சில்லறை மற்றும் சிறிய வியாபார வாடிக்கையாளர்களின் எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட வரவுகள் மற்றும் திரவத்தன்மை வசதிகள் | | 5% | |
| 19.3.4.1.2.0 | நிதியல்லாக் கம்பனிகள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், அரச துறைத் தொழில்முயற்சிகள் மற்றும் பல்புடை அபிவிருத்தி வங்கிகள் என்பனவற்றிற்கான எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் | | 10% | |
| 19.3.4.1.3.0 | நிதியியலல்லாக் கம்பனிகள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், அரச துறை தொழில்முயற்சிகள் மற்றும் பல்புடை அபிவிருத்தி வங்கி என்பனவற்றிற்கான எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட திரவத்தன்மை வசதிகள் | | 30% | |
| 19.3.4.1.4.0 | முன்மதியுடைய மேற்பார்வைக்குட்பட்டு வங்கிகளுக்கான எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட திரவத்தன்மை | | 40% | |
| 19.3.4.1.5.0 | ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் | | 40% | |
| 19.3.4.1.6.0 | ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் | | 100% | |
| 19.3.4.1.7.0 | ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத உத்தரவாதமளிக்கப்பட்ட கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் | | 100% | |
| 19.3.4.2.0.0 | ஏனைய எதிர்பாராத நிதியிடல் கடப்பாடுகள் | | | |
| 19.3.4.2.1.0 | நிபந்தனையற்ற முறையில் மாற்றக்கூடிய பொறுப்பளிக்கப்படாத கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் | | 0% | |
| 19.3.4.2.2.0 | வர்த்தக நிதியுடன் தொடர்புபட்ட கடப்பாடுகள் (உத்தரவாதங்கள் மற்றும் நாணயக் கடிதம் உட்பட) | | 5% | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3.4.2.3.0 | வர்த்தக நிதிக் கடப்பாடுகளுடன் தொடர்புபடாத உத்தரவாதங்கள் | | 0% | |
| 19.3.4.2.4.0 | ஏனைய ஒப்பந்த ரீதியான காசு வெளிப்பாய்ச்சல்கள் | | 100% | |
| 19.3.5.0.0.0 | **மேலதிகத் தேவைப்பாடுகள்** | | | |
| 19.3.5.1.0.0 | தேறிய பெறுமதிக் காசு வெளிப்பாய்ச்சல்கள் | | 100% | |
| 19.3.5.2.0.0 | வேறு ஏதேனும் ஒப்பந்த ரீதியான காசு வெளிப்பாய்ச்சல்கள் | | 100% | |

பகுதி IV - மொத்தக் காசு உட்பாய்ச்சல்களின் கணிப்பு

| வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் | தொகை | காரணி | நிறையேற்றப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 19.4.0.0.0.0 | **மொத்தக் காசு உட்பாய்ச்சல்கள்** | | | |
| 19.4.1.0.0.0 | **பின்வரும் பிணையங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன் வழங்கல்கள் கொடுக்கல்வாங்கல்கள்** | | | |
| 19.4.1.1.0.0 | படிநிலை 1 சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப் பட்டவை | | 0% | |
| 19.4.1.2.0.0 | படிநிலை 2ஏ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப் பட்டவை | | 15% | |
| 19.4.1.3.0.0 | படிநிலை 2பீ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப் பட்டவை | | 50% | |
| 19.4.1.4.0.0 | படிநிலை 1 அல்லது படிநிலை 2 அல்லாத பிணையங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட அளவுக் கடன் வழங்கல் | | 50% | |
| 19.4.1.5.0.0 | மற்றைய ஏனைய சொத்துக்களினால் உத்தரவாதப் படுத்தப்பட்டவை | | 100% | |
| 19.4.2.0.0.0 | **உத்தரவாதமளிக்கப்பட்ட பொறுப்பு வசதிகள்** | | | |
| 19.4.2.1.0.0 | கொடுகடன் வசதிகள் | | 0% | |
| 19.4.2.2.0.0 | திரவத்தன்மை வசதிகள் | | 0% | |
| 19.4.2.3.0.0 | ஏனைய எதிர்பாராத நிதியிடல் வசதிகள் | | 0% | |
| 19.4.3.0.0.0 | **30 நாட்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற இணைத்தரப்பினரின் ஏனைய உட்பாய்ச்சல்கள்** | | | |
| 19.4.3.1.0.0 | சில்லறை மற்றும் சிறிய வியாபார வாடிக்கையாளர்கள் | | 50% | |
| 19.4.3.2.0.0 | நிதியல்லா மொத்த விற்பனை இணைத்தரப்பினர்கள் | | 50% | |
| 19.4.3.3.0.0 | மத்திய வங்கிகள், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | | 100% | |
| 19.4.4.0.0.0 | **தொழிற்படுகின்ற வைப்புக்கள்** | | 0% | |
| 19.4.5.0.0.0 | **ஏனைய காசு உட்பாய்ச்சல்கள்** | | | |
| 19.4.5.1.0.0 | தேறிய பெறுதிக் காசு உட்பாய்ச்சல்கள் | | 100% | |
| 19.4.5.2.0.0 | ஏனைய ஒப்பந்த ரீதியான காசு உட்பாய்ச்சல்கள் | | 50% | |

**பின்னிணைப்பு II**

## திரவக் காப்பீட்டு விகிதத்தினைக் கணிப்பதற்கான வழிகாட்டல்கள்

| வெப்பினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | விடயம் |
|---|---|
| 19.2.0.0.0.0 | **உயர்தரத் திரவச் சொத்துக்களின் மொத்த இருப்பு** |
| 19.2.1.0.0.0 | **மொத்தச் சீராக்கப்பட்ட படிநிலை 1 சொத்துக்கள்** |
| 19.2.1.1.0.0 | **படிநிலை 1 சொத்துக்கள்** |
| 19.2.1.1.1.0 | **கையிலுள்ள பணம்**<br>கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு உடனடியாகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வங்கிகள் வசமுள்ள அனைத்துக் காசுகளும் (நாணயக் குத்திகள் மற்றும் வங்கித் தாள்கள்) |

| | |
|---|---|
| 19.2.1.1.2.0 | **நியதி ஒதுக்கு விகிதத்திற்கு மேலதிகமாகவுள்ள தகைமை வாய்ந்த மத்திய வங்கி நிலுவைகளும் ஒதுக்குகளும்**<br>பேணப்பட்டு வருகின்ற நியதி ஒதுக்கு விகிதத்திற்கு மேலதிகமாகவுள்ள மத்திய வங்கி நிலுவைகளையும் ஒதுக்குகளையும் அழுத்த காலங்களில் எடுப்பனவு செய்து கொள்ளமுடியும். வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கப்படுகின்ற மூலதனத்தின் ஒரு பகுதியைப் பிரசன்னப்படுத்துகின்ற இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் நிலுவை மூலதனத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால் அதனை உள்ளடக்கக்கூடாது. |
| 19.2.1.1.3.0 | **0% இடர்நேர்வு நிறையுடன் கூடிய தகைமைபெற்ற சந்தைப்படுத்தத்தக்க பிணையங்கள் பின்வரும் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்** |
| (i) | குறைந்த மட்ட திரட்டல்களின் மூலம் பாரியளவில், ஆழமான விதத்தில் வர்த்தகப்படுத்தப்பட்ட தீவிரமான மேற்கொள்வனவு அல்லது காசுச் சந்தைகளை பண்பாகக் கொண்டிருத்தல்; |
| (ii) | அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளிலும் கூட (மீள்கொள்வனவு அல்லது விற்பனை) சந்தைகளில் நம்பகமான திரவத்தன்மை மூலமொன்றாக நிரூபிக்கப்பட்ட பதிவுகளைக் கொண்டிருத்தல்; |
| (iii) | நிதியியல் நிறுவனமொன்றின் அல்லது வேறு அதன் இணைந்த நிறுவனங்களின் கடப்பாடொன்றினைக் கொண்டிருக்காமை; |
| (iv) | சந்தைப்படியான பெறுமதிகளில்; |
| (v) | பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதி வழங்கப்பட்ட முதிர்ச்சியைக் கவனத்தில் கொள்ளாத பிணையங்கள்/ மீள்கொள்வனவுகள் நீங்கலானவை; |
| (vi) | பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காக பெறப்பட்ட 30 நாட்களுக்குக் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்கள்/ நேர்மாற்று மீள்கொள்வனவுகள். |
| 19.2.1.1.3.1 | **அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவை**<br>இலங்கை அரசாங்கம் - அனைத்துக் கோரல்கள். வெளிநாட்டு அரசாங்கங்கள் - இறைமைகள் ஏஏஏ இலிருந்து ஏஏ- இற்கிடையிலான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடல்களைப் பெறுமிடத்து |
| 19.2.1.1.3.2 | **அரசாங்கங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>இலங்கை அரசாங்கம் - அனைத்துக் கோரல்கள். வெளிநாட்டு அரசாங்கங்கள் - இறைமைகள் ஏஏஏ இலிருந்து ஏஏ- இற்கிடையிலான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடல்களைப் பெறுமிடத்து |
| 19.2.1.1.3.3 | **மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>இலங்கை மத்திய வங்கி - அனைத்துக் கோரல்கள். வெளிநாட்டு மத்திய வங்கிகள் - இறைமைகள் ஏஏஏ இலிருந்து ஏஏ- இற்கிடையிலான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடல்களைப் பெறுமிடத்து |
| 19.2.1.1.3.4 | **பன்னாட்டுத் தீர்ப்பனவு வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய சமூகம் அல்லது பல்புடை அபிவிருத்தி வங்கிகள் என்பனவற்றினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>பன்னாட்டுத் தீர்ப்பனவு வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி, ஐரோப்பிய சமூகம் மற்றும் பின்வரும் தகைமையுடைய பல்புடைய அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்டவை |
| * | உலக வங்கிக் குழுமமானது, புத்தாக்கம் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கான பன்னாட்டு வங்கியையும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தினையும் உள்ளடக்குகிறது. |
| * | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| * | ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி |
| * | மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான ஐரோப்பிய வங்கி |
| * | உள்ளக அமெரிக்க அபிவிருத்தி வங்கி |
| * | ஐரோப்பிய முதலீட்டு வங்கி |
| * | ஐரோப்பிய முதலீட்டு நிதியம் |
| * | நோர்டிக் முதலீட்டு வங்கி |
| * | கரிபியன் அபிவிருத்தி வங்கி |
| * | இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி |
| * | ஐரோப்பிய அபிவிருத்தி வங்கிச் சபை |
| * | நோய்த் தடுப்பிற்கான பன்னாட்டு நிதிய வசதிகள் |
| 19.2.1.2.0.0 | **சீராக்கங்கள்** |
| 19.2.1.2.1.0 | **கூட்டுக: பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதியளிக்கப்பட்ட படிநிலை 1 பிணையங்களின் சந்தைப் பெறுமதி**<br>படிநிலை 1 சொத்தின் சந்தைப் பெறுமதியின் 30 நாட்களுக்குட்பட்ட முதிர்ச்சியைக் கொண்ட பிணைகள், பிணையிடப்பட்ட நிதியம் அல்லது மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீது வழங்கப்பட்டது. |
| 19.2.1.2.2.0 | **கூட்டுக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன் வழங்கல் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை. இதில் வங்கிக் காசினை வழங்கியதுடன் படிநிலை 1 வடிவத்தில் பிணைகளைப் பெற்றுக்கொண்டது (பெறப்பட்ட பிணைகள் மீளப் பயன்படுத்தப்படாதவிடத்து) |

| | |
|---|---|
| 19.2.1.2.3.0 | **கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட படிநிலை 1 பிணையங்களின் சந்தைப் பெறுமதி**<br>30 நாட்களுக்குள்ளான முதிர்ச்சியைக் கொண்ட பிணையிடப்பட்ட கடன் வழங்கல் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீது பெறப்பட்ட படிநிலை 1 சொத்துப் பிணையங்களின் சந்தைப் பெறுமதி. இதில் வங்கிக் காசினை வழங்கியதுடன் படிநிலை 1 வடிவத்தில் பிணையியினையும் பெற்றுக் கொண்டுள்ளன. |
| 19.2.1.2.4.0 | **கழிக்குக: பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை**<br>30 நாட்களுக்குள்ளான முதிர்ச்சியைக் கொண்ட பிணையிடப்பட்ட நிதியிடலினூடாக அல்லது நடத்தப்பட்ட மீள்கொள்வனவுகளினூடாகத் திரட்டப்பட்ட தொகையும் படிநிலை 1 சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவையும் |
| 19.2.2.0.0.0 | **மொத்த சீராக்கப்பட்ட படிநிலை 2ஏ சொத்துக்கள்** |
| 19.2.2.1.0.0 | **படிநிலை 2ஏ சொத்துக்கள்** |
| 19.2.2.1.1.0 | **20% இடர்நேர்வு நிறையுடன் கூடிய தகைமைபெற்ற சந்தைப்படுத்தத்தக்கப் பிணையங்களும் பின்வரும் அனைத்தையும் பூர்த்தி செய்ய வேண்டியவையும்:** |
| (i) | குறைந்த மட்ட திரட்டல்களின் மூலம் பாரியளவில், ஆழமான விதத்தில் வர்த்தகப்படுத்தப்பட்ட தீவிரமான மேற்கொள்வனவு அல்லது காசுச் சந்தைகளை பண்பாகக் கொண்டிருத்தல்; |
| (ii) | அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளிலும் கூட (மீள்கொள்வனவு அல்லது விற்பனை) சந்தைகளில் நம்பகமான திரவத்தன்மை மூலமொன்றாக நிரூபிக்கப்பட்ட பதிவுகளைக் கொண்டிருத்தல் (அதாவது குறிப்பிடத்தக்க திரவத்தன்மை அழுத்தத்தினைக் கொண்ட 30 நாள் காலப்பகுதியில் 10 சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் விலைகளின் உயர்ந்தபட்ச வீழ்ச்சி அல்லது உச்ச விலையில் அதிகரிப்பு); |
| (iii) | நிதியியல் நிறுவனமொன்றின் அல்லது வேறு அதன் இணைந்த நிறுவனங்களின் கடப்பாடொன்றினைக் கொண்டிருக்காமை; |
| (iv) | சந்தைப்படியான பெறுமதிகளில்; |
| (v) | பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதி வழங்கப்பட்ட முதிர்ச்சியைக் கவனத்தில் கொள்ளாத பிணையங்கள்/ மீள்கொள்வனவுகள் நீங்கலானவை; |
| (vi) | பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காக பெறப்பட்ட 30 நாட்களுக்குக் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்கள்/ நேர்மாற்று மீள்கொள்வனவுகள். |
| 19.2.2.1.1.1 | **அரசுகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதமளிக்கப்பட்டவை**<br>வெளிநாட்டு அரசுகள் - அரசுகள் ஏ+ இலிருந்து ஏ- வரையான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலொன்றைக் பெற்றிருக்குமிடத்து |
| 19.2.2.1.1.2 | **மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதமளிக்கப்பட்டவை**<br>வெளிநாட்டு மத்திய வங்கிகள் - அரசுகள் ஏ+ இலிருந்து ஏ- வரையான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலொன்றைக் பெற்றிருக்குமிடத்து |
| 19.2.2.1.1.3 | **அரச துறை தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதமளிக்கப் பட்டவை**<br>உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச துறை தொழில்முயற்சிகள் - அரச துறை தொழில்முயற்சிகள் ஏஏஏ இலிருந்து ஏஏ- வரையான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலைப் பெற்றிருக்குமிடத்து |
| 19.2.2.1.1.4 | **பல்புடை அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்டவை அல்லது உத்தரவாதமளிக்கப்பட்டவை**<br>பல்புடை அபிவிருத்தி வங்கி ஏஏஏ இலிருந்து ஏஏ- வரையான வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலொன்றைக் பெற்றிருக்குமிடத்து மேலே 19.2.1.1.3.4 இல் பட்டியலிடப்பட்ட பல்புடை அபிவிருத்தி வங்கிகள் தவிர்ந்த பல்புடை அபிவிருத்தி வங்கிகள். |
| 19.2.2.1.2.0 | **பின்வரும் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்கின்ற தகைமை வாய்ந்த நிதியியலல்லாத கம்பனிப் படுகடன் பிணையங்கள் (வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் உட்பட):** |
| (i) | நிதியியல் நிறுவனமொன்றினால் அல்லது அதன் வேறு ஏதேனும் இணைந்த நிறுவனங்களினால் வழங்கப்படாதவை; |
| (ii) | குறைந்தபட்சம் ஏஏ- வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலுடன் கூடியவை; |
| (iii) | குறைந்த மட்ட திரட்டல்களின் மூலம் பாரியளவில், ஆழமான விதத்தில் வர்த்தகப்படுத்தப்பட்ட தீவிரமான மேற்கொள்வனவு அல்லது காசுச் சந்தைகளை பண்பாகக் கொண்டிருத்தல்; |
| (iv) | அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளிலும் கூட (மீள்கொள்வனவு அல்லது விற்பனை) சந்தைகளில் நம்பகமான திரவத்தன்மை மூலமொன்றாக நிரூபிக்கப்பட்ட பதிவுகளைக் கொண்டவை (அதாவது குறிப்பிடத்தக்க திரவத்தன்மை அழுத்தத்தினைக் கொண்ட 30 நாள் காலப்பகுதியில் 10 சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் விலைகளின் உயர்ந்தபட்ச வீழ்ச்சி அல்லது உச்ச விலையில் அதிகரிப்பு); |
| (v) | சந்தைப்படியான பெறுமதிகளில்; |
| (vi) | பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதி வழங்கப்பட்ட முதிர்ச்சியைக் கவனத்தில் கொள்ளாத பிணையங்கள்/ மீள்கொள்வனவுகள் நீங்கலாக; |
| (vii) | பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட 30 நாட்களுக்கும் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்கள்/ நேர்மாற்று மீள்கொள்வனவுகள் உட்பட. |
| | **வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில்** |
| (i) | வழங்குநர் நிதி நிறுவனமொன்றல்லாதவராக இருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| (ii) | முதலீட்டினை ஏற்றுக்கொள்கின்ற வங்கிகளிலிருந்து வழங்குநரால் பெறப்பட்ட தற்போதுள்ள அனைத்து வசதிகளும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு, வருமானத்தினை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்கள் என்பன மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகளில் "செயற்படுமொன்றாக" இருத்தல் வேண்டும். |
| (iii) | இன்னொரு உரிமம் பெற்ற வங்கியிலிருந்து இவ்வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்களின் முழுமையான மீட்புப் பெறுமதியிற்கு ஆதரவளிக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் கொடுகடன் தொடரினால் இவை உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். |
| 19.2.2.1.3.0 | **பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட நிறைகாப்புடைய கூறு நம்பிக்கைகளிலுள்ள தகைமை பெறுகின்ற முதலீடுகள்:** |
| (i) | நிறைகாப்புடைய கூறு நம்பிக்கையானது மட்டுப்படுத்தப்படாத சமவாய நிதியாக இருத்தல் வேண்டும்; |
| (ii) | நிறைகாப்புடைய கூறு நம்பிக்கையின் முக்கியமான முதலீட்டுச் சொத்துப்பட்டியல் எப்பொழுதும் இலங்கை அரசாங்கப் பிணையங்களாக இருத்தல் வேண்டும். |
| 19.2.2.2.0.0 | **சீராக்கங்கள்** |
| 19.2.2.2.1.0 | **கூட்டுக: பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதியளிக்கப்பட்ட படிநிலை 2ஏ பிணையங்களின் சந்தைப் பெறுமதி**<br>படிநிலை 2ஏ சொத்தின் சந்தைப் பெறுமதியின் 30 நாட்களுக்குட்பட்ட முதிர்ச்சியைக் கொண்ட பிணைகள் பிணையிடப்பட்ட நிதியம் அல்லது மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீது வழங்கப்பட்டது. |
| 19.2.2.2.2.0 | **கூட்டுக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன் வழங்கல் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை. இதில் வங்கிக் காசினை வழங்கியதுடன் படிநிலை 2ஏ வடிவத்தில் பிணைகளைப் பெற்றுக்கொண்டது (பெறப்பட்ட பிணைகள் மீளப் பயன்படுத்தப்படாதவிடத்து) |
| 19.2.2.2.3.0 | **கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட படிநிலை 2ஏ பிணையங்களின் சந்தைப் பெறுமதி**<br>30 நாட்களுக்குள்ளான முதிர்ச்சியைக் கொண்ட பிணையிடப்பட்ட கடன் வழங்கல் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீது பெறப்பட்ட படிநிலை 2ஏ சொத்துப் பிணையங்களின் சந்தைப் பெறுமதி. இதில் வங்கிக் காசினை வழங்கியதுடன் படிநிலை 2ஏ வடிவத்தில் பிணையினையும் பெற்றுக் கொண்டுள்ளன. |
| 19.2.2.2.4.0 | **கழிக்குக: பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை**<br>30 நாட்களுக்குள்ளான முதிர்ச்சியைக் கொண்ட பிணையிடப்பட்ட நிதியிடலினூடாக அல்லது நடத்தப்பட்ட மீள்கொள்வனவுகளினூடாகத் திரட்டப்பட்ட தொகையும் படிநிலை 2ஏ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவையும் |
| 19.2.3.0.0.0 | **மொத்தச் சீராக்கப்பட்ட படிநிலை 2பீ சொத்துக்கள்** |
| 19.2.3.1.0.0 | **படிநிலை 2பீ சொத்துக்கள்** |
| 19.2.3.1.1.0 | **பின்வரும் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்கின்ற தகைமை வாய்ந்த நிதியல்லாத கம்பனிப் படுகடன் பிணையங்கள் (வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் உட்பட):** |
| (i) | நிதியியல் நிறுவனமொன்றினால் அல்லது அதன் வேறு ஏதேனும் இணைந்த நிறுவனங்களினால் வழங்கப்படாதவை; |
| (ii) | குறைந்தபட்சம் ஏஏ- வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலுடன் கூடியவை; |
| (iii) | குறைந்த மட்ட திரட்டல்களின் மூலம் பாரியளவில், ஆழமான விதத்தில் வர்த்தகப்படுத்தப்பட்ட தீவிரமான மேற்கொள்வனவு அல்லது காசுச் சந்தைகளை பண்பாகக் கொண்டிருத்தல்; |
| (iv) | அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளிலும் கூட (மீள்கொள்வனவு அல்லது விற்பனை) சந்தைகளில் நம்பகமான திரவத்தன்மை மூலமொன்றாக நிரூபிக்கப்பட்ட பதிவுகளைக் கொண்டவை (அதாவது குறிப்பிடத்தக்க திரவத்தன்மை அழுத்தத்தினைக் கொண்ட 30 நாள் காலப்பகுதியில் 10 சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் விலைகளின் உயர்ந்தபட்ச வீழ்ச்சி அல்லது உச்ச விலையில் அதிகரிப்பு); |
| (v) | சந்தைப்படியான பெறுமதிகளில்; |
| (vi) | பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதி வழங்கப்பட்ட முதிர்ச்சியைக் கவனத்தில் கொள்ளாத பிணையங்கள்/ மீள்கொள்வனவுகள் நீங்கலாக; |
| (vii) | பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட 30 நாட்களுக்கும் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்கள்/ நேர்மாற்று மீள்கொள்வனவுகள் உட்பட. |
| | **வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில்** |
| (i) | வழங்குநர் நிதி நிறுவனமொன்றல்லாதவராக இருத்தல் வேண்டும். |
| (ii) | முதலீட்டினை ஏற்றுக்கொள்கின்ற வங்கிகளிலிருந்து வழங்குநரால் பெறப்பட்ட தற்போதுள்ள அனைத்து வசதிகளும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு, வருமானத்தினை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்கள் என்பன மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகளில் "செயற்படுமொன்றாக" இருத்தல் வேண்டும். |
| (iii) | இன்னொரு உரிமம் பெற்ற வங்கியிலிருந்து இவ்வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்களின் முழுமையான மீட்புப் பெறுமதியிற்கு ஆதரவளிக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் கொடுகடன் தொடரினால் இவை உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். |
| 19.2.3.1.2.0 | **பின்வரும் நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கின்ற தகைமைபெற்ற நிதியல்லாப் பொதுப் பங்குரிமை மூலதனப் பங்குகள்** |
| (i) | நிதியியல் நிறுவனமொன்றினால் அல்லது அதன் வேறு ஏதேனும் இணைந்த நிறுவனங்களினால் வழங்கப்படாதவை; |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் வர்த்தகப்படுத்தப்பட்டு மைய ரீதியாக தீர்ப்பனவு செய்யப்பட்டவை |

| | |
|---|---|
| (iii) | குறைந்த மட்ட திரட்டல்களின் மூலம் பாரியளவில், ஆழமான விதத்தில் வர்த்தகப்படுத்தப்பட்ட தீவிரமான மேற்கொள்வனவு அல்லது காசுச் சந்தைகளை பண்பாகக் கொண்டிருத்தல்; |
| (iv) | அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளிலும் கூட (மீள்கொள்வனவு அல்லது விற்பனை) சந்தைகளில் நம்பகமான திரவத்தன்மை மூலமொன்றாக நிரூபிக்கப்பட்ட பதிவுகளைக் கொண்டவை (அதாவது குறிப்பிடத்தக்க திரவத்தன்மை அழுத்தத்தினைக் கொண்ட 30 நாள் காலப்பகுதியில் 40 சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் விலைகளின் உயர்ந்தபட்ச வீழ்ச்சி அல்லது உச்ச விலையில் அதிகரிப்பு); |
| (v) | பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதி வழங்கப்பட்ட முதிர்ச்சியைக் கவனத்தில் கொள்ளாத பிணையங்கள்/ மீள்கொள்வனவுகள் நீங்கலாக; |
| (vi) | பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட 30 நாட்களுக்கும் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்கள்/ நேர்மாற்று மீள்கொள்வனவுகள் உட்பட. |
| 19.2.3.2.0.0 | **சீராக்கங்கள்** |
| 19.2.1.3.2.1.0 | **கூட்டுக: பிணையிடப்பட்ட நிதியிடலுக்காக உறுதியளிக்கப்பட்ட படிநிலை 2பீ பிணையங்களின் சந்தைப் பெறுமதி**<br>படிநிலை 2பீ சொத்தின் சந்தைப் பெறுமதியின் 30 நாட்களுக்குட்பட்ட முதிர்ச்சியைக் கொண்ட பிணையங்கள் பிணையிடப்பட்ட நிதியம் அல்லது மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீது வழங்கப்பட்டது. |
| 19.2.3.2.2.0 | **கூட்டுக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன் வழங்கல் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கலினூடாக வழங்கப்பட்ட தொகை. இதில் வங்கிக் காசினை வழங்கியதுடன் படிநிலை 2பீ வடிவத்தில் பிணைகளைப் பெற்றுக்கொண்டது (பெறப்பட்ட பிணைகள் மீளப் பயன்படுத்தப்படாதவிடத்து) |
| 19.2.3.2.3.0 | **கழிக்குக: பிணையிடப்பட்ட கடன் வழங்கலுக்காகப் பெறப்பட்ட படிநிலை 2பீ பிணையங்களின் சந்தைப் பெறுமதி**<br>30 நாட்களுக்குள்ளான முதிர்ச்சியைக் கொண்ட பிணையிடப்பட்ட கடன் வழங்கல் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீது பெறப்பட்ட படிநிலை 2பீ சொத்துப் பிணையங்களின் சந்தைப் பெறுமதி. இதில் வங்கிக் காசினை வழங்கியதுடன் படிநிலை 2பீ வடிவத்தில் பிணையினையும் பெற்றுக் கொண்டுள்ளன. |
| 19.2.3.2.4.0 | **கழிக்குக: பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை**<br>30 நாட்களுக்குள்ளான முதிர்ச்சியைக் கொண்ட பிணையிடப்பட்ட நிதியிடலினூடாக அல்லது நடத்தப்பட்ட மீள்கொள்வனவுகளினூடாகத் திரட்டப்பட்ட தொகையும் படிநிலை 2பீ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவையும் |
| 19.3.0.0.0.0 | **மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் (மூலதனமும் அட்டுறு வட்டி ஏதேனும் இருப்பின் அதுவும்)** |
| 19.3.1.0.0.0 | **வைப்புக்கள்** (செயற்படாத வைப்புக்கள், கடன் வழங்கலுக்கெதிரான பிணையமயப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் வைப்புக்கள், எல்லை வைப்புக்கள் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள்) |
| 19.3.1.1.0.0 | **கேள்வி, சேமிப்பு மற்றும் கால வைப்புக்கள் (30 நாள் முதிர்ச்சிக்கும் குறைவானவை)** |
| 19.3.1.1.1.0 | **சில்லறை வாடிக்கையாளர்கள்**<br>இயல்பான நபரினால் வங்கியில் செய்யப்பட்ட வைப்புக்கள் |
| 19.3.1.1.2.0 | **சில்லறை வியாபார வாடிக்கையாளர்கள்**<br>இயல்பற்ற நபரினால் (அதாவது ஏக உரிமையாளர்கள் பங்குடமையாளர்கள், களரிகள் மற்றும் சங்கங்களின் சட்ட ரீதியான நிறுவனங்கள்) வங்கியொன்றில் செய்யப்பட்ட வைப்புக்கள் |
| 19.3.1.2.0.0 | **30 நாட்களுக்கும் கூடுதலான எஞ்சிய முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட கால வைப்புக்கள்**<br>வைப்பாளர்கள் 30 நாட்களுக்குள் வைப்புக்களை மீளப்பெறுவதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருக்காதுவிடின் அல்லது உரிய காலத்திற்கு முன்னரான மீளப்பெறுகையின் விளைவாக ஏற்படும் குறிப்பிடத்தக்க தண்டம் வட்டி இழப்பினைவிட அளவில் கூடுதலானதாக இருப்பின் எஞ்சிய முதிர்ச்சியுடன் கூடிய சில்லறை கால வைப்புக்களுடன் தொடர்பான அல்லது 30 நாட்களுக்கும் கூடுதலான மீளப்பெறுகை அறிவித்தல் காலத்துடன் காசுப்பாய்ச்சல்கள் மொத்த எதிர்பார்க்கப்பட்ட காசுவெளிப்பாய்ச்சல்களிலிருந்து நீக்கப்படும்.<br>வங்கியொன்று தொடர்பான தண்டத்தினை பிரயோகிக்காமல் அத்தகைய வைப்புக்களை மீளப்பெறுவதற்கு வைப்புச் செய்தவரை அனுமதிக்குமாயின் அல்லது வைப்பாளர் மீளப்பெறுவதற்கு சட்ட ரீதியான உரிமை எதுவுமில்லையென கிளை வாசகம் தெரிவிக்குமாயினும் முழு வகையும் எஞ்சியுள்ள முதிர்ச்சிக் காலத்தினைக் கருத்திற் கொள்ளாது கேள்வி வைப்புக்களாகக் கருதப்படும். |
| 19.3.2.0.0.0 | **பிணையிடப்படாத மொத்த விற்பனை நிதியிடல்**<br>சட்டபூர்வமான நிறுவனங்களிடமிருந்து (கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்) திரட்டப்படுகின்ற மொத்த விற்பனை வைப்புக்களும் ஏனைய பொதுவான கடப்பாடுகள். மொத்த விற்பனை வைப்புக்களில் செயற்படாத வைப்புக்கள், கடன் வழங்கலுக்கெதிரான பிணையமயப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் வைப்புக்கள், எல்லை வைப்புக்கள் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதியின் கீழான காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. மற்றைய பொதுக் கடப்பாடுகளைப் பொறுத்தவரை, இவை வங்குரோத்துமை நிலைமை, கடன் தீராற்றலற்றதன்மை, ஒடுக்குதல் அல்லது தீர்மானம் என்பனவற்றைப் பொறுத்தவரை கடன்படுகின்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான குறிப்பாக குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களுக்கான சட்ட உரிமைகளினால் பிணையிடப்படக்கூடாது. பெறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்பான கடப்பாடுகள் இவ்வரைவிலக்கணங்களிலிருந்து வெளிப்படையான முறையில் நீக்கப்படுகின்றன. |

| | |
|---|---|
| 19.3.2.1.0.0 | **தீர்ப்பனவு செய்தல், கட்டுக்காப்பு மற்றும் காசு முகாமைத்துவ நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட தொழிற்பாட்டு வைப்புக்கள்**<br>வாடிக்கையாளர் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளைப் பயன்படுத்துவதற்கு அல்லது கொடுப்பனவுகளைச் செய்வதற்கான இயலளவுகளுக்கும் வசதியளிக்கும் பொருட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதியியல் மற்றும் நிதியியலல்லா வாடிக்கையாளர் வைப்புக்கள். இப்பணிகள் நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களுக்கான (உ-ம்: வொஸ்ரோ கணக்குகள் மற்றும் சேகரிப்புக் கணக்குகள்) கணக்குகளின் பணிப்பாணைக்குப் புறம்பாக, சட்ட ரீதியாக பிணிக்கப்பட்ட உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படுதல் வேண்டும். |
| 19.3.2.2.0.0 | **நிறுவன ரீதியான வலையமைப்பொன்றிலுள்ள (ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களிலுள்ள தகைமைவாய்ந்த வைப்புக்கள்) கூட்டுறவு வங்கிகள்**<br>குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகள் மத்திய நிறுவனங்களினால் ஆற்றல்படுகின்றவிடத்து பொதுவான வர்த்தகப் பெயர் மற்றும் உபாய நோக்கில் கவனம் செலுத்துகின்ற சட்ட ரீதியான ஒத்துழைப்பு கட்டமைப்புடன் கூடிய சட்ட ரீதியான சுயாதீனமான வங்கிகள் (உ-ம்: சமுர்த்தி வங்கிகள், கிராமிய வங்கிகள், சனச சேமிப்புச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள்) |
| 19.3.2.3.0.0 | **நிதியல்லாக் கம்பனிகள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், பல்புடை அபிவிருத்தி வங்கிகள் மற்றும் அரச துறை தொழில்முயற்சிகள்**<br>குறிப்பாக தொழிற்பாட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படாத நிதியியல்லா கம்பனி வாடிக்கையாளர்கள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், பல்புடை அபிவிருத்தி வங்கிகள் மற்றும் அரச துறை தொழில்முயற்சிகளிலிருந்தான அனைத்து வைப்புக்கள் மற்றும் பிணையிடப்படாத நிதியிடல்களின் ஏனைய விரிவாக்கங்கள் |
| 19.3.2.4.0.0 | **ஏனைய சட்ட ரீதியான நிறுவன வாடிக்கையாளர்கள்**<br>ஏனைய நிறுவனங்கள் (வங்கிகள், பிணை நிறுவனங்கள், காப்புறுதிக் கம்பனிகள் போன்றவை உட்பட) பொறுப்பாண்மைகள், நன்மைபெறுநர்கள், நிதியியல் இணைப்புக்கள், சிறப்பு நோக்கங்களுக்கான நிறுவனங்கள், வங்கிகள் தொடர்பான நிறுவனங்கள் மற்றும் தொழிற்பாட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படாத குறிப்பிட்டுச் சொல்லப்படாத ஏனைய நிறுவனங்களும் முன்னைய வகைகளுக்குள் உள்ளடக்கப்படாதவையும் |
| 19.3.3.0.0.0 | **பிணையிடப்பட்ட நிதியிடல் கொடுக்கல்வாங்கல்கள்** |
| 19.3.3.1.0.0 | **படிநிலை 1 சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடையக்கூடிய பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை அல்லது வங்கியின் உள்நாட்டு மத்திய வங்கியுடன் நடத்தப்படாத மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவும் படிநிலை 1 சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்படுகின்றவையும் |
| 19.3.3.2.0.0 | **படிநிலை 2ஏ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடையக்கூடிய பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை அல்லது வங்கியின் உள்நாட்டு மத்திய வங்கியுடன் நடத்தப்படாத மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவும் படிநிலை 2ஏ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்படுகின்றவையும் |
| 19.3.3.3.0.0 | **படிநிலை 2பீ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடையக்கூடிய பிணையிடப்பட்ட நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை அல்லது வங்கியின் உள்நாட்டு மத்திய வங்கியுடன் நடத்தப்படாத மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவும் படிநிலை 2பீ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்படுகின்றவையும் |
| 19.3.3.4.0.0 | **மற்றைய அனைத்துச் சொத்துக்களினாலும் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களில் முதிர்ச்சியடையக்கூடிய பிணையிடப்படாத நிதியிடலினூடாகத் திரட்டப்பட்ட தொகை அல்லது வங்கியின் உள்நாட்டு மத்திய வங்கியுடன் நடத்தப்படாத மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் என்பனவும் மற்றைய சொத்துக்களினால் (உயர்தரத் திரவத்தன்மைச் சொத்துக்கள் அல்லாதவை) உத்தரவாதப்படுத்தப்படுகின்றவையும் |
| 19.3.4.0.0.0 | **உத்தரவாதமளிக்கப்பட்ட (மீளப்பெறமுடியாத) வசதிகளின் எடுப்பனவு செய்யப்படாத பகுதி மற்றும் எதிர்பாராத நிதியிடல் கடப்பாடுகள்** |
| 19.3.4.1.0.0 | **பொறுப்பளிக்கப்பட்ட (மீளப்பெறமுடியாத) கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள்** |
| 19.3.4.1.1.0 | சில்லறை மற்றும் சிறிய வியாபாரங்களைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் |
| 19.3.4.1.2.0 | நிதியியல்லாக் கம்பனிகள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், அரச துறைத் தொழில்முயற்சிகள் மற்றும் பல்புடை அபிவிருத்தி வங்கிகளுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் |
| 19.3.4.1.3.0 | நிதியியல்லாக் கம்பனிகள், அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், அரச துறைத் தொழில்முயற்சிகள் மற்றும் பல்புடை அபிவிருத்தி வங்கிகளுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட திரவத்தன்மை வசதிகள் |
| 19.3.4.1.4.0 | முன்மதியுடைய மேற்பார்வைக்குட்படுத்தப்பட்ட வங்கிகளுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் |
| 19.3.4.1.5.0 | ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் |
| 19.3.4.1.6.0 | நிதியியல் நிறுவனங்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட திரவத்தன்மை வசதிகள் |
| 19.3.4.1.7.0 | ஏனைய சட்ட ரீதியான நிறுவனங்களுக்கான எடுப்பனவு செய்யப்படாத பொறுப்பளிக்கப்பட்ட கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் |

| | |
|---|---|
| 19.3.4.2.0.0 | **ஏனைய எதிர்பாராத நிதியிடல் கடப்பாடுகள்**<br>உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்கள், அறவிடத்தக்க கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள் போன்ற ஏனைய எதிர்பாராத நிதியிடல் பொறுப்புக்கள் |
| 19.3.4.2.1.0 | **நிபந்தனையின்றி மாற்றப்படக்கூடிய "கடப்பாடில்லாத" கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகள்**<br>கொடுகடன் மற்றும் திரவத்தன்மை வசதிகளின் எடுப்பனவு செய்யப்படாத பங்கினை (உ-ம்: மேலதிகப் பற்றுக்கள் மற்றும் கொடுகடன் அட்டையின் எடுப்பனவு செய்யப்படாத பகுதி) நிபந்தனையின்றி மாற்றக்கூடிய உரிமையினைக் கொண்டுள்ளவிடத்து அவ்வசதிகளின் எடுப்பனவு செய்யப்படாத மீதி. |
| 19.3.4.2.2.0 | **வர்த்தக நிதியுடன் தொடர்புபட்ட கடப்பாடுகள் (உத்தரவாதங்கள் மற்றும் நாணயக் கடிதங்கள் உட்பட)**<br>வர்த்தக நிதிச் சாதனங்கள், பொருட்களின் அசைவுகள் அல்லது பணிகளின் வழங்கல்களை நேரடியாக பக்கபலமாகக் கொண்ட வர்த்தகத்துடன் தொடர்புபட்ட (இறக்குமதிகள் - ஏற்றுமதிகள் தொடர்பானவை) கடப்பாடுகள் உள்ளடங்குகின்றன. |
| 19.3.4.2.3.0 | **வர்த்தக நிதிக் கடப்பாடுகளுடன் தொடர்புபடாத உத்தரவாதங்கள்**<br>வர்த்தக நிதிக் கடப்பாடுகளுடன் தொடர்புபடாத உத்தரவாதங்களின் வெளிநின்ற தொகை |
| 19.3.4.2.4.0 | **ஏனைய ஒப்பந்த ரீதியான காசு வெளிப்பாய்ச்சல்**<br>இவ்வகையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகள் எவற்றை உள்ளடக்குகின்றதோ அதன்படி, பிணையிடப்படாத பிணையக் கடன்பாடுகளை குறுங்கால நிலைமைகளை உள்ளடக்காதவை, பங்கிலாபங்கள் அல்லது ஒப்பந்த ரீதியான வட்டிக் கொடுப்பனவுகள் போன்றவற்றை உள்ளடக்குவதற்கான வெளிப்பாய்ச்சல் அடுத்த 30 கலண்டர் நாட்களுக்குள்ளான வேறு ஏதேனும் ஒப்பந்த ரீதியான காசு வெளிப்பாய்ச்சல்கள் இந்நியமத்திற்குள் காட்டப்படல் வேண்டும். |
| 19.3.5.0.0.0 | **மேலதிகத் தேவைப்பாடுகள்** |
| 19.3.5.1.0.0 | **தேறிய பெறுதிக் காசு வெளிப்பாய்ச்சல்கள்**<br>வங்கிகள் அவற்றின் தற்போதுள்ள மதிப்பீட்டு முறையியல்களின்படி, ஒப்பந்த ரீதியான பெறுதி காசு உட்பாய்ச்சல்களையும் வெளிப்பாய்ச்சல்களையும் கணித்தல் வேண்டும். ஒவ்வொரு இணைத்தரப்பினரின் காசுப்பாய்ச்சல்கள் தேறிய அடிப்படையில் (அதாவது உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களை எதிரீடு செய்யமுடியும்) கணிக்கப்பட்ட முடியும். அனைத்து தேறிய காசு வெளிப்பாய்ச்சல்களின் தொகையும் இங்கே அறிக்கையிடப்படல் வேண்டும். அனைத்துத் தேறிய காசு உட்பாய்ச்சல்களினதும் தொகையும் தேறிய பெறுதிக் காசு உட்பாய்ச்சல்களில் அறிக்கையிடப்படல் வேண்டும். பெறுதிக் கொடுப்பனவுகள் உயர்தரத் திரவச் சொத்துக்களினால் பிணையிடப்பட்டிருக்கின்றவிடத்து, காசுப்பாய்ச்சல்கள், ஏதேனும் தொடர்பான காசு அல்லது ஏற்படக்கூடிய பிணைகளின் உட்பாய்ச்சல்கள் இருப்பின் அவற்றினைக் கழித்து கணிக்கப்படுதல் வேண்டும். பிணைகள் பெறப்பட்டதும் புதிய காசினைத் திரட்டுகின்ற கொடுக்கல்வாங்கல்களில் பிணைகளை மீளப் பயன்படுத்தக்கூடிய விதத்தில் சட்ட ரீதியான உரித்தினையும் தொழிற்பாட்டு இயலாற்றலையும் வங்கி கொண்டிருக்குமிடத்து, வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய காசிற்கான ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் அல்லது பிணையங்களிலிருந்தான ஏனைய அனைத்து விடயங்களும் சமமானவைகளாக இருக்கும். இது வங்கிகள் திரவத்தன்மை உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் பற்றி இரண்டு தடவைகள் எண்ணிகையிடக்கூடாது என்ற கோட்பாட்டிற்கு இசைந்ததொன்றாகும். |
| 19.3.5.2.0.0 | **வேறு ஏதேனும் ஒப்பந்த ரீதியான காசு வெளிப்பாய்ச்சல்கள்**<br>30 நாட்களுக்குள் மத்திய வங்கியின் ஒதுக்குகளில் வைக்கப்படுவதற்குத் தேவையான ஏதேனும் தொகை, வேறு ஏதேனும் ஒப்பந்த ரீதியான காசு வெளிப்பாய்ச்சல் உட்பட |
| 19.4.0.0.0.0 | **மொத்தக் காசு உட்பாய்ச்சல்கள்** |
| 19.4.1.0.0.0 | **பின்வரும் பிணைகளின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்ட முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன் வழங்கல் கொடுக்கல்வாங்கல்கள்** |
| 19.4.1.1.0.0 | **படிநிலை 1 சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன்வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகைகள் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள், பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கிக் காசினை வழங்கி படிநிலை 1 வடிவத்தில் காணப்படும் பிணைகள் (இங்கு பெறப்பட்ட பிணைகள் மீளப் பயன்படுத்தப்படுவதில்லை). |
| 19.4.1.2.0.0 | **படிநிலை 2ஏ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன்வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகைகள் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள், பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கிக் காசினை வழங்கி படிநிலை 2ஏ வடிவத்தில் காணப்படும் பிணைகள் (இங்கு பெறப்பட்ட பிணைகள் மீளப் பயன்படுத்தப்படுவதில்லை). |
| 19.4.1.3.0.0 | **படிநிலை 2பீ சொத்துக்களினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை**<br>30 நாட்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற பிணையிடப்பட்ட கடன்வழங்கலினூடாக வழங்கப்பட்ட தொகைகள் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள், பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கிக் காசினை வழங்கி படிநிலை 2பீ வடிவத்தில் காணப்படும் பிணைகள் (இங்கு பெறப்பட்ட பிணைகள் மீளப் பயன்படுத்தப்படுவதில்லை). |
| 19.4.1.1.4.0.0 | **படிநிலை 1 அல்லா அல்லது படிநிலை 2 அல்லா பிணையங்களின் மூலம் பிணையிடப்பட்ட அளவுக் கடன் வழங்கல்கள்**<br>உயர்தர திரவத்தன்மை சொத்தல்லாப் பிணைகளுக்கெதிராகச் செய்யப்பட்ட வலுவூட்டப்பட்ட வர்த்தக நிலைமைகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட பிணையிடப்பட்ட கடன்களினூடாக வழங்கப்பட்ட தொகை (அளவுக் கடன்கள்). |

| | |
|---|---|
| 19.4.1.5.0.0 | **மற்றைய அனைத்துச் சொத்துக்களினாலும் பிணையிடப்பட்டவை**<br>அத்தகைய கொடுக்கல்வாங்கல்களினூடாக வழங்கப்பட்ட தொகைகள் (19.4.1.4.0.0 இல் அறிக்கையிடப்பட்டவை தவிர்ந்தவை) இதில் வங்கியானது படிநிலை 1 அல்லது படிநிலை 2 சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய வடிவத்தில் பெற்றுக்கொண்ட பிணைகள். |
| 19.4.2.0.0.0 | **கடப்பாடு கொண்ட வசதிகள்**<br>வங்கிகள் அதன் சொந்த நோக்கத்திற்காக மற்றைய நிறுவனங்களில் வைத்திருக்கின்ற கடப்பாடு கொண்ட கொடுகடன், திரவத்தன்மை அல்லது ஏனைய எதிர்பாராத நிதியிடல் வசதிகள். |
| 19.4.2.1.0.0 | கொடுகடன் வசதிகள் |
| 19.4.2.2.0.0 | திரவத்தன்மை வசதிகள் |
| 19.4.2.3.0.0 | **ஏனைய எதிர்பாராத நிதியிடல் வசதிகள்** |
| 19.4.3.0.0.0 | **30 நாட்களுக்குள் முதிர்ச்சியடைகின்ற இணைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய உட்பாய்ச்சல்கள்** |
| 19.4.3.1.0.0 | **சில்லறை மற்றும் சிறிய வியாபார வாடிக்கையாளர்கள்**<br>30 நாள் காலப்பகுதிக்குள் வரவேண்டிய ஒப்பந்த ரீதியாகச் செயற்படுகின்ற வசதிகளின் மீது சில்லறை வாடிக்கையாளர்களிடமிருந்தான அனைத்துக் கொடுப்பனவுகளும் (வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் தவணைக் கொடுப்பனவுகள் உட்பட) |
| 19.4.3.2.0.0 | **நிதியல்லா மொத்த விற்பனை இணைத்தரப்பினர்கள்**<br>30 நாள் காலப்பகுதிக்குள் வரவேண்டிய ஒப்பந்த ரீதியில் செயற்படுகின்ற வசதிகளின் மீது நிதியல்லா மொத்த விற்பனை இணைத்தரப்பினரிடமிருந்தான அனைத்துக் கொடுப்பனவுகளும் (வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் தவணைக் கொடுப்பனவுகள் உட்பட) |
| 19.4.3.3.0.0 | **மத்திய வங்கிகள், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்**<br>30 நாள் காலப்பகுதிக்குள் வரவேண்டிய ஒப்பந்த ரீதியில் செயற்படுகின்ற வசதிகளின் மீதான மத்திய வங்கிகள், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலிருந்தான அனைத்துக் கொடுப்பனவுகளும் (வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் தவணைக் கொடுப்பனவுகள் உட்பட) |
| 19.4.4.0.0.0 | **தொழிற்பாட்டு ரீதியான வைப்புக்கள்**<br>தீர்ப்பனவுகள், கட்டுக்காப்பு மற்றும் காசு முகாமைத்துவ நோக்கங்கள் போன்ற தொழிற்பாட்டு ரீதியிலான நோக்கங்களுக்காக மற்றைய நிதியியல் நிறுவனங்களில் வைத்திருக்கப்படுகின்ற வைப்புக்கள். கூட்டுறவு வங்கிகளின் வலையமைப்பிலுள்ள மையப்படுத்தப்பட்ட நிறுவனத்தில் வைத்திருக்கப்படும் வைப்புக்களையும் உள்ளடக்குகிறது. இப்பணிகள் நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களுடனான சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகளின் கீழ் வழங்கப்படுதல் வேண்டும் (உ-ம்: நொஸ்ரோ கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள்) |
| 19.4.5.0.0.0 | **ஏனைய காசு உட்பாய்ச்சல்கள்** |
| 19.4.5.1.0.0 | **தேறிய பெறுதிக் காசு உட்பாய்ச்சல்கள்**<br>வங்கிகள் எதிர்பார்க்கின்ற ஒப்பந்த ரீதியான பெறுதிக் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை அவற்றின் தற்போதுள்ள மதிப்பீட்டு முறையியல்களுக்கு இணங்க கணித்தல் வேண்டும். ஒவ்வொரு இணைத்தரப்பினரின் காசுப்பாய்ச்சல்கள் தேறிய அடிப்படையில் (அதாவது உட்பாய்ச்சல்கள், வெளிப்பாய்ச்சல்களை எதிரீடு செய்யமுடியும்) கணிக்கப்பட முடியும். தேறிய அனைத்துக் காசு உட்பாய்ச்சல்களினதும் தொகை இங்கே அறிக்கையிடப்படல் வேண்டும். தேறிய அனைத்துக் காசு வெளிப்பாய்ச்சல்களினதும் தொகை தேறிய பெறுதி காசு வெளிப்பாய்ச்சல்களில் அறிக்கையிடப்படல் வேண்டும். இவ்வொப்பந்த ரீதியான கடப்பாடுகள் உயர்தரத் திரவத்தன்மைச் சொத்துக்களைக் குறைக்கும் என்பதனைக் கவனத்தில் கொள்கையில் பெறுதிகள் உயர்தரத் திரவத்தன்மைச் சொத்துக்களினால் பிணையமயப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, காசு உட்பாய்ச்சல்கள் ஏதேனும் தொடர்பான காசு அல்லது ஒப்பந்த ரீதியாக ஏற்படக்கூடிய பிணைய வெளிப்பாய்ச்சல்களைத் தவிர்த்து கணிக்கப்பட வேண்டியதுடன், வங்கிகளினால் அனுப்பப்படக்கூடிய காசு அல்லது பிணைகளுக்கான ஒப்பந்த ரீதியான கடப்பாடுகளிலிருந்தான மற்றைய அனைத்து விடயங்களும் சமமானதாக இருக்கும். |
| 19.4.5.2.0.0 | **ஏனைய ஒப்பந்த ரீதியான காசு உட்பாய்ச்சல்கள்**<br>காட்டப்பட்ட வேண்டிய வேறுஏதேனும் ஒப்பந்த ரீதியான காசு உட்பாய்ச்சல்கள் |

**பின்னிணைப்பு III**

**திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்திற்கான சொத்துக்களை வகைப்படுத்துவதற்கான கொடுகடன் தரமிடல் முகவர்களின் குறியீடுகளைத் தயாரித்தல்**

| பிட்ஜ் ரேடிங் லங்கா | ராம் ரேடிங்ஸ் (லங்கா) லிமிடெட் | ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட் | ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் | மூடிஸ் | பிட்ஜ் ரேடிங்ஸ் | திரவ உள்ளடக்க விகிதத்திற்கான தரமிடல் அளவுமுறை |
|---|---|---|---|---|---|---|
| AAA (lka) | AAA | (SL) AAA | AAA | Aaa | AAA | AAA |
| AA+ (lka) | AA+ | (SL) AA+ | AA+ | Aa1 | AA+ | AA+ |
| AA (lka) | AA | (SL) AA | AA | Aa2 | AA | AA |
| AA- (lka) | AA- | (SL) AA- | AA- | Aa3 | AA- | AA- |
| A+ (lka) | A+ | (SL) A+ | A+ | A1 | A+ | A+ |
| A (lka) | A | (SL) A | A | A2 | A | A |
| A- (lka) | A- | (SL) A- | A- | A3 | A- | A- |
| BBB+ (lka) | BBB+ | (SL) BBB+ | BBB+ | Baa1 | BBB+ | BBB+ |
| BBB (lka) | BBB | (SL) BBB | BBB | Baa2 | BBB | BBB |
| BBB- (lka) | BBB- | (SL) BBB- | BBB- | Baa3 | BBB- | BBB- |
| BB+ (lka) | BB+ | (SL) BB+ | BB+ | Ba1 | BB+ | BB+ |
| BB (lka) | BB | (SL) BB | BB | Ba2 | BB | BB |
| BB- (lka) | BB- | (SL) BB- | BB- | Ba3 | BB- | BB- |
| B+ (lka) | B+ | (SL) B+ | B+ | B1 | B+ | B+ |
| B (lka) | B | (SL) B | B | B2 | B | B |
| B- (lka) மற்றும் அதற்கு குறைவானவை | B- மற்றும் அதற்கு குறைவானவை | (SL) B- மற்றும் அதற்கு குறைவானவை | B- மற்றும் அதற்கு குறைவானவை | B3 மற்றும் அதற்கு குறைவானவை | B- மற்றும் அதற்கு குறைவானவை | B- மற்றும் அதற்கு குறைவானவை |

**தொடர்பு எண்: 02/04/002/0015/002** 2015 ஏப்பிறல் 15

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வங்கித்தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வசதியை விரிவுபடுத்துதல்**

கீழே சுருக்கித் தரப்பட்டவாறு வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுக்கொள்வதனை அதிகரிக்கின்ற பல்வேறு வழிகளைத் தெரிவிக்கின்ற இடைக்கால வரவு செலவுத்திட்டம் - 2015இன்பால் தங்களின் கவனத்தினை ஈர்க்க விரும்புகின்றோம்.

(i) வர்த்தக வங்கிகள் தமது கிளைகளை பின்தங்கிய தூரஇடங்களில் திறப்பது.

(ii) குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தேவைப்பாடு இல்லாமல் புதிய வாடிக்கையாளர்கள் கணக்குகளைத் திறப்பது.

(iii) அனைத்துப் பிரசைகளும் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அண்மைய எதிர்காலத்தில் அவர்களுக்கு செலுத்தப்படக்கூடிய அனைத்துக் கொடைகளையும் படிகளையும் வங்கித்தொழில் முறைகளினூடாக அனுப்பி வைக்கப்படுவது.

(iv) கடன்பாட்டாளர்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் குறிப்பாக கடன்வழங்கல் தொழிற்பாடுகள் பற்றிய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் இலகுபடுத்துவது மற்றும் புதிய இலகுபடுத்தப்பட்ட முறைமைகளை 2015 செத்தெம்பரிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவது.

2. மேலே குறிப்பிடப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளை எடுக்குமாறு நாங்கள் தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

தொடர்பு எண்: 02/17/600/0002/002 2015 மே 28

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களின் அறவிடல்**

பின்வரும் விடயங்களை அறியத் தருவதற்காக இதனை எழுதுகின்றோம்.

அ. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான 2014 ஒத்தோபர் 16ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது; அத்துடன்

ஆ. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான 2001 சனவரி 22, 2001 சனவரி 29, 2001 பெப்புருவரி 16 மற்றும் 2001 மாச்சு 30 ஆகிய திகதிகளைக் கொண்ட சுற்றறிக்கைகள், சொல்லப்பட்ட அச்சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் 1,000 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 500 அடிப்படைப் புள்ளிகளுக்குக் குறைக்கப்படுகின்ற திருத்தமொன்றுடன் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

இச்சுற்றறிக்கை 2015 யூன் 01ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும் என்பதுடன் இச்சுற்றறிக்கையின் பிரயோகம் பற்றி தொடர்பான வாடிக்கையாளர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படுவதனை வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
(திருமதி) ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

தொடர்பு எண்: 02/17/600/0002/002 2015 ஓகத்து 03

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களின் அறவிடல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான 2015 மே 28ஆம் திகதியிடப்பட்ட எமது சுற்றறிக்கைக்கு மேலதிகமாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்குப் பின்வரும் விடயம் அறிவிக்கப்படுகிறது.

1. இலங்கையிலிருந்து தேயிலை உற்பத்தியை இறக்குமதி செய்கின்ற நாடுகளினால் எதிர்நோக்கப்படுகின்ற புவிசார் அரசியல் காரணிகளின் காரணமாக ஏற்றுமதிப் பெறுகைகள் தொடர்பான பணவனுப்பல்களைப் பெறுவதில் காணப்படும் தாமதங்கள் பற்றி தேயிலை ஏற்றுமதியாளர் பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை பரிசீலனையில் கொண்ட பின்னர் இலங்கை மத்திய வங்கி, தேயிலை ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பில் கப்பற்படுத்தப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் ஏற்றுமதிக் கொடுகடனைத் தீர்ப்பதற்கு வழங்கப்பட்ட காலத்தினை அதிகரிப்பதற்கு தமது நியாயப்பூர்வத் தன்மையினையும் தற்றுணிபினையும் பயன்படுத்தமுடியும் எனவும் அத்தகைய தீர்மானமானது தொடர்பான வங்கியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற சரியான முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டுமெனவும் மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.
2. இச்சுற்றறிக்கை 2015 யூன் 01ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
(திருமதி) ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

தொடர்பு எண்: 02/01/006/0200/002 2015 ஓகத்து 03

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த
வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வங்கித்தொழில் கிளைகளின் தொழிற்பாடுகள் மீதான வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்களின் அறிமுகம்**

எமது 2012.01.18ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் அட்டவணை II, III மற்றும் IV இன்படி மின்னஞ்சல் மூலம் தற்பொழுது காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுவரும் வங்கித்தொழில் கிளைகளின் தொழிற்பாடுகள் மீதான தகவல்களுக்குப் பதிலாக பின்வரும் புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

i. பீஎஸ்டி-கியூஎவ்-16-பீடி - கிளை விநியோகம்

ii. பீஎஸ்டி-கியூஎவ்-16-ரிஎம் - தன்னியக்கக் கூற்றுப் பொறிகள்

iii. பீஎஸ்டி-கியூஎவ்-16-எஸ்யூ - மாணவர் சேமிப்பு அலகுகள்

iv. பீஎஸ்டி-கியூஎவ்-16-பீபி - கிளை செயலாற்றம்

தொடர்ச்சியான தன்மையினைப் பேணும் நோக்கத்திற்காக, வங்கிகள் 2014.12.31, 2015.03.31 மற்றும் 2015.06.30 ஆகிய திகதிகளில் முடிவடைந்த காலாண்டுகளுடன் தொடர்பான தகவல்களை 2015.08.31 அளவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. அதன் பின்னர், இக்கூற்றுக்கள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த 21 நாட்களுக்குள் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலேயுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை 1இன் கீழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்ட தகவல்கள் அவை நிகழ்ந்த 7 நாட்களுக்குள் banksup@cbsl.lk இற்கு மின்னஞ்சல் செய்யப்படுல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
(திருமதி) ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/500/0063/001** 2015 ஓகத்து 03

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**கொடுகடன் தரமிடல் முகவரொருவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட லங்கா றேடிங் முகவர் லிமிடெட்டினை இடைநிறுத்துதல்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுடன் தொடர்பாக ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்காக கொடுகடன் தரமிடல் முகவரொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட லங்கா றேட்டிங் ஏஜென்சியை 2015 யூலை 01ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்துவதற்கு நாணயச் சபை தீர்மானித்திருக்கிறது. இதற்கு கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் லங்கா றேடிங் ஏஜென்சி லிமிடெட்டிற்கு வழங்கப்பட்ட பதிவு புதுப்பிக்கப்படாமையே காரணமாகும்.

இதன்படி, இது தொடர்பில் பொருத்தமான வழிமுறைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
(திருமதி) ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

2015 செத்தெம்பர் 14

**2015ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்**

**உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதி விகித அடிப்படையில் கடன்வழங்கல்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1)இன் கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களிற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் வழங்கப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் பெறுமதி விகித அடிப்படையில் கடன்களை நடைமுறைப்படுத்துவதற்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல் | 1.1 | வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1)இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அனைத்திற்கும் அல்லது ஏதேனும் வங்கிக்கு எந்தவொரு வியாபார விடயத்திலும் அத்தகைய வங்கிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அவ்வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. |
| 2. | உயர்ந்தபட்சப் பெறுமதி விகிதக் கடன்கள் | 2.1 | 2015 செத்தெம்பர் 15 தொடக்கம் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்கான கடன்களையும் முற்பணங்களையும் ஊர்தியின் பெறுமதியில் 70 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் (பெறுமதியில் 70 சதவீத விகிதக் கடன்) வழங்கக்கூடாது. |
| | | 2.2 | மேலேயுள்ள பணிப்புரை 2.1 இற்கிணங்க வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தவிர, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கக்கூடாது. |

3. விளக்கவுரை 3.1 இப்பணிப்புரையில்

(அ) கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக வழங்கப்படும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) உந்து ஊர்திகளின் பெறுமதி, கடன்களும் முற்பணங்களும் வழங்கப்படுகின்ற நேரத்தில் நிலவுகின்ற நடைமுறைகளுக்கிணங்க தொழில்சார் நிபுணத்துவ மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட சந்தைப் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

அர்ஜுன மகேந்திரன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

2015 ஒத்தோபர் 29

**2015ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்**

**உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதி விகித அடிப்படையில் கடன்வழங்கல்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1)இன் கீழ் விடுக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான 2015 செத்தெம்பர் 14ஆம் திகதியிடப்பட்ட 2015ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பணிப்புரை, 2015 திசெம்பர் 01 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

அர்ஜுன மகேந்திரன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**தொடர்பு எண்: 02/17/550/0002/003** 2015 திசெம்பர் 02

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**கம்பனி ஆளுகை தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்**

இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பில் 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் என்பது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் நிறைவேற்று தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவது பற்றிய 2010ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நிறைவேற்று தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் எனப்பொருள்படும் என்பதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள,
(செல்வி) எஸ்.எச். குணவர்த்தன
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/550/0002/003** 2015 திசெம்பர் 02

சேரல்: உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**கம்பனி ஆளுகை தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மீதான வழிகாட்டல்கள்**

இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பில் 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையிலுள்ள முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் என்பது, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் நிறைவேற்று தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவது பற்றிய 2010ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்கள் எனப் பொருள்படும் என்பதனைத் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள,
(செல்வி) எஸ்.எச். குணவர்த்தன
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 35/01/005/0006/35** 2015 பெப்புருவரி 27

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் பற்றிய 2014 செத்தெம்பர் 23ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 35/01/005/0006/34 தொடர்பானது. குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 5 சதவீத சிறப்பு துணைநில் வைப்பு வசதி வீதம் 2015 மாச்சு 2ஆம் நாளிலிருந்து புறக்கீடு செய்யப்படுவது பற்றி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இதன்படி, துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் முறையே 6.50 சதவீதமாகவும் 8.00 சதவீதமாகவும் இருக்கும்.

**(ஒப்பம்) பி.டபிள்யூ.டி.என்.ஆர். றொட்றிகோ**
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/19** 2015 ஒத்தோபர் 29

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

**உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகின்ற நேரத்தில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட குறைந்தபட்சக் காசு, இறக்குமதிப் பெறுமதியின் 100 சதவீத அளவினை உள்ளடக்கியிருந்தாலொழிய, 2015 ஒத்தோபர் 30ஆம் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 01ஆம் திகதி வரை அட்டவணை அ இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்காக வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதம் திறக்கப்படக்கூடாது என வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும்.

1. அட்டவணை அ இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதியினை உள்ளடக்கிய ஏற்கனவேயுள்ள நாணயக் கடிதத்தினைப் பொறுத்தவரை மேலேயுள்ள பந்தியில் விபரிக்கப்பட்ட நியதிகள் தவிர அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் வங்கிகள் அதிகரிப்பு எதனையும் செய்யக்கூடாது.
2. இச்சுற்றறிக்கையில் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவுத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு வாடிக்கையாளர்களை இயலச்செய்யும் நோக்கத்திற்காக அத்தகைய இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் எந்தவொரு முற்பணத்தினையும் வழங்கக்கூடாது.
3. இச்சுற்றறிக்கையின்படி அளவுத் தேவைப்பாடுகள் பெறப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தொடர்பான பொருட்பட்டியல் வங்கிகளினால் புறக்குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/09** 2015 திசெம்பர் 31

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட அறிவித்தலின்பாலும் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2015 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளியிடப்பட்ட இலக்கம் 1947/39 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின்பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தில் ஏழு புள்ளி ஐந்து சதவீதத்திற்கு (7.5%) சமமான தொகையொன்றினை ஒதுக்காகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட திருத்தம் 2015 சனவரி 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் நாளிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றைய அனைத்து அறிவுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடைத்தனவாக இருக்கும்.

ஒப்பம்
பி.டபிள்யூ.டி.என்.ஆர். றொட்றிகோ
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

1947/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 17இன் துணைப் பிரிவுகள் (1) மற்றும் (2)இன் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் பின்வருமாறு கட்டளையிடுகின்றேன்.

(1) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளைப் பேணும் இலங்கையில் வதியும் நபர்களுக்கு மேலேயுள்ள கணக்குகளிலுள்ள நிலுவைத் தொகையினைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட பிணையங்களைக் கையேற்பதற்கும் வைத்திருப்பதற்கும் கைமாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

(2) மேலே பந்தி (1)இல் குறிப்பிடப்பட்ட இலங்கையில் வதியும் நபர்களுக்கு ஒதுக்கங்களை அல்லது பங்குகள் மீதான நன்மையொன்றாக நடப்பாண்டு இலாபங்களை மூலதனமாக்குவதன் மூலம், அல்லது இத்தால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் முன்னர் கையேற்கப்பட்ட பங்குகளின் துணைப்பிரிவு அல்லது பிரிப்பின் மூலம் வழங்கப்பட்ட பங்குகளை கையேற்பதற்கும் வைத்திருப்பதற்கும் கைமாற்றுவதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது, மற்றும்

(3) இதற்கு மேலதிகமாக இத்தால் வழங்கப்பட்டுள்ள அனுமதியானது 01.01.2011இன் 1686/50ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விதிமுறைகளில் கூறப்பட்ட ஏற்பாட்டு நியதிகளுக்கு மேலதிகமானதாகும்.

ரவி கருணாநாயக்க
**நிதி அமைச்சர்**

நிதி அமைச்சு
கொழும்பு
2015 திசெம்பர் 21

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

1947/14 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் நியதிகளிலான அனுமதி

1. குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளைப் பராமரிக்கும் இலங்கையில் வதியும் நபர்களுக்கு மேலேயுள்ள கணக்குகளிலுள்ள நிலுவைகளிலிருந்து பின்வருவனவற்றிற்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

   (i) 2015.12.29 ஆந் திகதியிடப்பட்ட 1947/13ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் நிதி அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட பிணையங்களை கையேற்பதற்கு் அத்துடன்

   (ii) நடைமுறை (மூலதனமல்லாத) பரிமாற்றங்களின் மீதான செலாவணிக் கட்டுப்பாட்டு வரையறைகளின் தளர்த்தல் மீது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு வழங்கப்பட்ட இல. EC/06/94 இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும்

18.03.1994 ஆந் திகதியிடப்பட்ட இல. EC/D/GL/1994/2 இலக்க வழிகாட்டல்களின்படி நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களுக்காக, அல்லது மூலதனப் பண்புகளைக் கொண்ட வேறு ஏதேனும் சொத்துக்களைக் கையேற்பதற்கு.

திருமதி ரி.எம்.ஜே.வை.பி.பர்னாந்து
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2015 திசெம்பர் 21

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

1947/15 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 44 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அஆ இன் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இலங்கையில் வதியும் நபர்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அஆ இன் கீழான தேவைப்பாடுகளின் பிரயோகத்திலிருந்து பின்வரும் அளவிற்கு விலக்களிக்கப்படுவது தொடர்பாக பின்வருமாறு கட்டளையிடுகின்றேன்:

அ. 29.12.2015இன் 1947/13ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்பட்ட, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் நிதி அமைச்சரினால் வழங்கப்பட்ட அனுமதியினடிப்படையில் கையேற்கப்பட்ட, வைத்திருக்கப்பட்ட மற்றும் கைமாற்றப்பட்ட பிணையங்கள், மற்றும்

ஆ. 29.12.2015இன் 1947/14ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்பட்ட, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் கையேற்கப்பட்ட மூலதனப் பண்புகளைக் கொண்ட வேறு ஏதேனும் சொத்துக்கள்.

ரவி கருணாநாயக்க
**நிதி அமைச்சர்**

நிதி அமைச்சு
கொழும்பு
2015 திசெம்பர் 21

**சுற்றறிக்கை எண். 01/15** 2015 ஏப்பிறல் 06

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களை அறிக்கையிடல்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் பற்றிய 2014 திசெம்பர் 27ஆம் நாள் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை எண் 05/14 தொடர்பானது.

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச் செய்யப்படுகின்றமை பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது. எனினும், தனிப்பட்டவர்களினாலும் அரசு சார்பற்ற நிறுவனங்களினாலும் பெறப்படுகின்ற வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் பற்றித் தொடர்ந்தும் கண்காணிக்குமாறும் ஐயத்திற்குரிய மாற்றல்கள் ஏதுமிருப்பின் அது பற்றி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு உரிய முறையில் அறிவிக்குமாறும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

எச். அமரதுங்க
**பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு**

## 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க முதனிலை வணிகர் கம்பனிகள் (குறைந்தபட்ச மைய மூலதனம்) பணிப்புரை

இப்பணிப்புரையானது முறையே 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட 2009.06.24ஆம் நாளிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1)(0) ஒழுங்குவிதி மற்றும் 2009.06.24ஆம் நாளிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1)(0)ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் கீழ் விடுக்கப்படுவதுடன் இது 2015.10.28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

லக்ஷ்மன் அர்ஜுன மகேந்திரன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு

திகதி: 2015.10.28

1. ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் எல்லா நேரங்களிலும் ரூ.1,000 மில்லியனுக்குக் (ஓராயிரம் மில்லியன் ரூபாய்) குறையாத பெறுமதி இழக்காத மைய மூலதனத்தினைப் பேணுதல் வேண்டும்.

2. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக, "குறைந்தபட்ச மைய மூலதனம்" என்பது 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதி என்பனவற்றில் விரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு அடுக்கு 1 மூலதனம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

3. இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் நாளன்று ரூ.1,000 மில்லியன் குறைந்தபட்ச மைய மூலதனத்தினைப் பூர்த்தி செய்யாத ஏற்கனவேயுள்ள முதனிலை வணிகர் கம்பனியொன்று அதன் மைய மூலதனத்தினைப் பின்வரும் விதத்தில் அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும்:

   (அ) இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் நாளன்று, மைய மூலதனத்தில் குறைகின்ற தொகையில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினை 2016 மாச்சு 31 அளவில் அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

   (ஆ) குறைகின்ற மீதித் தொகை 2016 ஒத்தோபர் 01ஆம் நாளளவில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

4. ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கொன்றினைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வோராண்டினதும் வரிக் கொடுப்பனவுகளுக்குப் பின்னரான தேறிய இலாபங்களிலிருந்து பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் அத்தகைய இலாபங்களில் 10 சதவீதத்திற்குக் குறையாத தொகையொன்றினை சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கிற்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

5. இப்பணிப்புரையில் சூழ்நிலை வேறுவிதமாக தேவைப்படுத்தினாலன்றி

   "முதனிலை வணிகர் கம்பனி" என்பது முதனிலை வணிகரொருவராக நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கி நீங்கலாக, 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் நியமிக்கப்பட்டதொரு கம்பனி எனப் பொருள்படும்.

6. 2005ஆம் ஆண்டு ஏப்பிறல் 18ஆம் நாளிடப்பட்ட முதனிலை வணிகர்களினால் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல், பங்கிலாபங்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அடுக்கு II மூலதனத்தினைப் பேணுதல் என்பன தொடர்பான பணிப்புரை 2015.10.28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச் செய்யப்படுகிறது.

## 2015ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க முதனிலை வணிகர் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் - திருத்தம்) பணிப்புரை

இப்பணிப்புரையானது முறையே 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட 2009.06.24ஆம் நாளிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1)(0) ஒழுங்குவிதி மற்றும் 2009.06.24ஆம் நாளிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1)(0)ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் கீழ் விடுக்கப்படுவதுடன் இது 2015.10.28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

லக்ஷ்மன் அர்ஜுன மகேந்திரன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு

திகதி: 2015.10.28

1. இப்பணிப்புரையானது 2015ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க முதனிலை வணிகர் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் - திருத்தம்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.
2. 2006.06.22 நாளிடப்பட்ட முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் மீதான பணிப்புரையின் (இதனகத்துப் பின்னர் "பணிப்புரை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படுகிறது.
   (i) பந்தி 1 (அ):
   "ரூ.300 மில்லியனுக்கும் கூடுதலான" என்ற சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "ரூ.1,000 மில்லியனுக்கும் கூடுதலான" என்ற சொற்களை இடுவதன் மூலமும்
   (ii) பந்தி 1 (இ):
   "8 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்" என்ற சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்" இனை இடுவதன் மூலமும்
3. பணிப்புரையின் பந்தி 3 இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:
   (i) பந்தி 3.3:
   "குறைந்தபட்ச மூலதனமான ரூ.300 மில்லியன்" என்ற சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக" "குறைந்தபட்ச மூலதனமான ரூ.1,000 மிலலியன்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்
   (ii) பந்தி 3.4:
   "ரூ.300 மில்லியனுக்கும் கூடுதலான" என்ற சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "ரூ.1,000 மில்லியனுக்கும் கூடுதலான" என்ற சொற்களை இடுவதன் மூலமும்
   பின்வரும் பந்தி இப்பணிப்புரையின் பந்தி 3.6 இனை உடனடுத்துப் புகுத்தப்பட்டு 4ஆவது பந்தியாக வாசிக்கப்படுதல் வேண்டும்.
4. வரைவிலக்கணங்கள்
   (i) "இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிக்கின்ற நோக்கத்திற்காக, மூலதனத்தின் கூறுகள் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளிலும் 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளிலும் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு அடுக்கு I மூலதனத்தினையும் அடுக்கு II மூலதனத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்."
   (ii) "இப்பணிப்புரையில் சூழ்நிலைகள் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி:
   "முதனிலை வணிகர் கம்பனி" என்பது முதனிலை வணிகரொருவராக நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கி நீங்கலாக, 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் நியமிக்கப்பட்டதொரு கம்பனி எனப் பொருள்படும்.

2015 சனவரி 12

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**
**சுற்றிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/01/2015**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

### 2015 சனவரி 14ஆம் திகதியை அரச மற்றும் வங்கி விடுமுறையாக பிரகடனப்படுத்தல்

மேதகு புனித பாப்பாண்டர் பிரான்சிஸ்ஸின் வருகையின் ஞாபகார்த்தமாக அந்நாளினை அரசாங்கம் அரச மற்றும் வங்கி விடுமுறைத் தினமாக பிரகடனப்படுத்தியிருப்பதன் காரணமாக லங்கா செட்டில் முறைமை 2015 சனவரி 14ஆம் நாளன்று (புதன்கிழமை) வியாபாரத்திற்காக திறக்கப்படமாட்டாது என்பது பற்றி தங்களுக்கு அறியத் தருகின்றோம். 2015 சனவரி 14ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கலையும் முறைமையில் பதிவுசெய்ய வேண்டாமென அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. 2015 சனவரி 14ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை நீங்கள் ஏற்கனவே பதிவுசெய்திருப்பின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் 2015 சனவரி 15ஆம் திகதி விடுமுறையாக இருப்பதால் 2015 சனவரி 16ஆம் திகதியினைப் பெறுமதியாகக் கொண்டு மீண்டும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(திருமதி) ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

(திருமதி) யு எல் முத்துகல
**மேலதிகக் கண்காணிப்பாளர், பொதுப்படுகடன்**

2015 ஏப்பிறல் 30

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**
**சுற்றிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/02/2015**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமை 2015 மே 08ஆம் நாளன்று அதன் மாற்று அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய முறைமைகளின் தொழிற்பாடுகளை **2015 மே 08ஆம் நாளன்று** அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், ஆயத்தநிலையினை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் 2015 மே 08ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினைத் தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- திரு. லசித் பர்னாந்து - 2477124 (lasith@cbsl.lk)
- திரு. றுசிறு பொறலுகொட - 2398617 (rusiru@cbsl.lk)

| | |
|---|---|
| (திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன | (திருமதி) சி எம் டி என் கே செனிவிரத்ன |
| **கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்** | **கண்காணிப்பாளர், பொதுப்படுகடன்** |

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**
**சுற்றறிக்கை எண். ஆர்ரிஜிஎஸ்/03/2015**

2015 யூலை 02

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**வியாபார நேரத்திற்குப் பின்பும் லங்கா செட்டில் முறைமையினை நீடிப்பதற்கான கோரிக்கை**

நீங்கள் அறிந்தவாறு, 2013 ஓகத்தில் வெளியிடப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளின் பதிப்பு 2.1இன் தொகுதி 4 இலுள்ள விதிகள் 1.2 மற்றும் 1.3 இன் நியதிகளுக்கிணங்க, நிலையான வியாபார அட்டவணையொன்றின் அடிப்படையில் லங்கா செட்டில் முறைமை இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கமைய, பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு வியாபார நாளன்றும் பி.ப. 4.30 மணியளவில் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் நிறைவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், தொழிற்பாட்டு நாளொன்றினை நீடிப்பதற்கான கோரிக்கையினை லங்கா செட்டில் பங்கேற்பாளரொருவர் நெருக்கடியான சூழ்நிலையொன்றில் மாத்திரமே மேற்கொள்ளமுடியும்.

எனினும், கடந்த ஒரு சில மாதங்களாக சில பங்கேற்பாளர்கள் முறைமை விதிகளைப் பின்பற்றாமல், முறைமையை மூடுவதற்கான அட்டவணையிடப்பட்ட நேரத்திற்கு, குறிப்பாக சற்று முன்னதாக லங்கா செட்டில் முறைமை மூடப்படும் நேரத்தினை நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினை பல தடவைகள் கோரியுள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நடைமுறைகள் இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்களுக்கு மட்டுமன்றி மற்றைய லங்கா செட்டில் பங்கேற்பாளர்களுக்கும் பெருமளவு வசதியீனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்கள் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் நிறைவுபெறும் வரை அவற்றின் முறைமைகளை தொழிற்பாட்டில் வைத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

ஆகவே, எதிர்பாராத நெருக்கடியான சந்தர்ப்பங்களைத் தவிர, நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையிலுள்ள குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கு அப்பால் லங்கா செட்டில் முறைமையின் வியாபார நேரத்தினை நீடிப்பதற்கான கோரிக்கையினை மேற்கொள்ள வேண்டாமென உங்களுக்கு இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. அத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பங்கேற்கும் நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவ அலுவலரொருவர் தொடர்பான வியாபார நாளன்று பி.ப. 4.00 மணிக்கு முன்னதாக கோரிக்கையினை நியாயப்படுத்தக்கூடிய பொருத்தமான விபரங்களுடன் பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன | (திருமதி) சி எம் டி என் கே செனவிரத்ன |
| **பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு** | **கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்** |

2015 யூலை 28

**2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சுற்றறிக்கை**

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீதான உயர்ந்தபட்ச வரையறைகள் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிக் கட்டணம்**

பெருமளவு வாடிக்கையாளர்களைப் பங்கேற்கச் செய்வதனூடாகப் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியை ஊக்குவித்து வசதிப்படுத்துவதற்காக 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சட்டத்தின் 4ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இச்சுற்றறிக்கை விடுக்கப்படுகிறது.

2. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் அனைத்து உறுப்பினர்களும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினூடாக சொந்த வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் மீது பின்வரும் உயர்ந்தபட்ச வரையறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

   2.1 நிதிய மாற்றல்களின் உயர்ந்தபட்சப் பெறுமதி ரூ.5 மில்லியனை விஞ்சக்கூடாது.

   2.2 கொடுக்கல்வாங்கல் ஒன்றின் மீது விதிக்கப்படும் உயர்ந்தபட்சக் கட்டணம் பின்வருவனவற்றை விஞ்சக்கூடாது:

      (அ) பின்வருவனவற்றினூடாக மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல்களைப் பொறுத்தவரை கொடுக்கல்வாங்கல் ஒவ்வொன்றிற்குமான கட்டணம் ரூ.50 இனை விஞ்சக்கூடாது

         i. இணையத்தள வங்கித்தொழில்;

         ii. செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில்; மற்றும்

         iii. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொடர்பான உறுப்பினரின் தன்னியக்கக் கூற்றுப்பொறி

      (ஆ) கருமபீடத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிதிய மாற்றல்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களுக்கும் ரூ.100.

      (இ) பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் மற்றைய உறுப்பினர்களது தன்னியக்கக் கூற்றுப் பொறிகளினூடாக மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களுக்கும் ரூ.100.

3. இச்சுற்றிக்கையானது, 2015 ஓகத்து 01இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிப்பாளர்**

2015 ஓகத்து 06

**2015ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சுற்றறிக்கை**

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தின் மீதான உயர்ந்தபட்ச வரையறை**

பொதுமக்களுக்கு செலவுச் சிக்கனமான வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவு வசதிகளை வழங்குவதன் மூலம் இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் மீது விதிக்கப்படுகின்ற வாடிக்கையாளர் கட்டணத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் இச்சுற்றறிக்கை விடுக்கப்படுகிறது.

2. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற நிதிய மாற்றல்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்சக் கட்டணம் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50 இனை விஞ்சக்கூடாது.

3. இச்சுற்றிக்கையானது, 2015ஆம் ஆண்டு செத்தெம்பர் 01ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிப்பாளர்**

2015 ஓகத்து 7

**2015ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சுற்றறிக்கை**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**லங்கா செட்டில் முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தின் மீதான தொழிற்பாட்டாளர் கட்டணங்களும் உயர்ந்தபட்ச வரையறையும்**

பொதுமக்களுக்கு செலவுச் சிக்கனமான வங்கித்தொழில் மற்றும் கொடுப்பனவு வசதிகளை வழங்குவதன் மூலம் இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு லங்கா செட்டில் முறைமையினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்படுகின்ற கட்டணங்களையும் விதிப்புக்களையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் இப்பணிப்புரை விடுக்கப்படுகிறது.

2. லங்கா செட்டில் முறைமையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற நிதிய மாற்றல்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து பங்கேற்கும் நிறுவனங்களினால் விதிக்கப்படும் உயர்ந்தபட்சக் கட்டணம், கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.1,000 இனை விஞ்சக்கூடாது.

3. தற்பொழுது ரூ.600 ஆக இருக்கும் பங்கேற்கும் நிறுவனங்களின் மீது மத்திய வங்கியினால் விதிக்கப்படும் தொழிற்பாட்டாளர் கட்டணம் ரூ.450 இற்குக் குறைக்கப்பட்டுள்ளதுடன் லங்கா செட்டில் முறைமை விதி - பதிப்பு 2.1இன் தொகுதி 4இன் 7ஆம் விதி மற்றும் விஞ்ஞாபன உடன்படிக்கையின் கிளைவாசகம் 4 என்பன இங்கேயுள்ள அட்டவணையின்படி திருத்தப்பட்டுள்ளன.

4. இச்சுற்றறிக்கையானது, 2012 ஏப்பிறல் 26ஆம் நாளிடப்பட்ட எண் ஆர்ரிஜிஎஸ்/07/2012 கொண்ட சுற்றறிக்கைக்குப் பதிலாக 2015 செத்தெம்பர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிப்பாளர்**

**லங்கா செட்டில் முறைமையின் கட்டணம் மற்றும் விதிப்புக்களின் அட்டவணை**

இலங்கை மத்திய வங்கி 2015 செத்தெம்பர் 1ஆம் நாளிலிருந்து அனைத்து லங்கா செட்டில் பங்கேற்பாளர்களிடமிருந்தும் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய கட்டணமாக இலங்கை ரூ.450/- இனை விதிக்கும்.

கட்டணம் மற்றும் விதிப்புக்களின் நோக்கத்திற்காக “கொடுக்கல்வாங்கல்” என்பது பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

1. பின்வரும் செய்திகளைப் பயன்படுத்துவதன் மூலமாக லங்கா செட்டிலிலுள்ள பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் அவர்களது சொந்தத் தீர்ப்பனவுக் கணக்கிற்காக தீர்ப்பனவு செய்யப்பட்ட எந்தவொரு பற்றிற்கும்:

   அ. எம்ரி 102 - பல்வாடிக்கையாளர் வரவு மாற்றல்

   ஆ. எம்ரி 103 - தனியொரு வாடிக்கையாளர் வரவு மாற்றல்

   இ. எம்ரி 202 - பொதுவான நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்

   ஈ. எம்ரி 205 - நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்களை நிறைவேற்றல்

   உ. எம்ரி 541 - கொடுப்பனவிற்கெதிராக பெறப்படுபவை

2. எம்ரி 540 இனைப் பயன்படுத்துவதனூடாக லங்கா செட்டில் பங்கேற்பாளர்களினால் முன்னெடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட எந்தவொரு பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களும் - இலவசமாகச் செய்திகளைப் பெறுதல்.

மேலே குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணத்திற்குப் புறம்பாக, பங்கேற்பாளர்கள் சுவிப்ற் தகவல்களை அனுப்புவதுடன் தொடர்பான கட்டணங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இவை சுவிப்ற்றினால் சுயாதீனமான முறையில் பட்டியலிடப்படுவதுடன் பங்கேற்பாளர்களினால் சுவிப்ற்றிற்கு நேரடியாகச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

2015 ஓகத்து 11

**2015ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சுற்றறிக்கை**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**2015 ஓகத்து 17ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

இலங்கை மத்திய வங்கி நாடாளுமன்ற தேர்தலின் காரணமாக 2015 ஓகத்து 17ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களினது கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக நேரத்தினைக் கருத்திற் கொண்டு 2015 ஓகத்து 17ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய 2015 ஓகத்து 17ஆம்

நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | வழமையான நேரம் | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 1.00 | பி.ப. 12.45 |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | பி.ப. 2.45 | பி.ப. 2.00 |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 3.00 | பி.ப. 2.15 |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (சுற்று 2) | பி.ப. 3.00 | பி.ப. 2.15 |
| பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி (சுற்று 2) | பி.ப. 3.00 | பி.ப. 2.30 |
| துணைநில் வைப்பு வசதி தீர்ப்பனவு | பி.ப. 4.00 | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி | பி.ப. 4.15 | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 4.30 | பி.ப. 3.00 |
| நாள் முடிவிலான செயன்முறைப்படுத்தல் | பி.ப. 4.30 - பி.ப. 5.00 | பி.ப. 3.00 - பி.ப. 3.30 |
| முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 5.00 | பி.ப. 3.30 |

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

(திருமதி) சி எம் டி என் கே செனிவிரத்ன
**கண்காணிப்பாளர், பொதுப்படுகடன்**

2015 ஒகத்து 14

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கை**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்கள்

**லங்கா செட்டில் முறைமையின் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்குத் திருத்தம்**

1. லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டின் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி 2015 ஒகத்து 07ஆம் நாளிலிருந்து நேரடியாகத் தொழிற்படுவதற்குத் திட்டமிட்டுள்ளது. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் நிதியத் தீர்ப்பனவு இரண்டு தீர்ப்பனவுச் சுற்றுக்களில் பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்படும்:

   அ தீர்ப்பனவுச் சுற்று 1: மு.ப. 9.00 மணிக்கு ஆர்ரிஜிஎஸ் தீர்ப்பனவு (ரி+1)
   ஆ தீர்ப்பனவுச் சுற்று 2: பி.ப. 3.15 மணிக்கு ஆர்ரிஜிஎஸ் தீர்ப்பனவு (ரி+0)

   - ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினது உறுப்பினர்களும் 2014 செத்தெம்பர் 01ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள் மீதான 2014ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரையினைப் பின்பற்றுதல் வேண்டும்.
   - பங்கேற்பாளர்கள் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியில் கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கான உயர்ந்தபட்சப் பெறுமதி ரூ.5 மில்லியனில் (ரூபா ஐந்து மில்லியன்) நிர்ணயிக்கப்பட்டிருப்பது பற்றியும் கொடுகடன் கொடுக்கல்வாங்கல்கள் இக்கட்டத்தில் மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்பதனையும் கவனித்தல் வேண்டும்.
   - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி பிரயோகத்தின் மீதான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

2. இதன்படி, நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை மீதான லங்கா செட்டில் முறைமையின் விதிகள் வாசகம் 2.1 - ஒகத்து 2013இன் தொகுதி 4இன் கிளை வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையானது **2015 ஒகத்து 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்படும்.**

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 6.30 | முறைமை ஆரம்பித்தல் | ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ் பிரயோகங்களைத் தொடங்குதல் |
| மு.ப. 7.30 இலிருந்து மு.ப. 8.00 மணி வரை | நாளாந்தச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை இற்றைப்படுத்தல், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளுக்கான பிணையங்களை நிர்ணயித்தல் |
| மு.ப. 8.00 | வியாபாரத்திற்காக லங்கா செட்டில் முறைமை திறக்கப்படுகிறது | காத்திரமான கொடுக்கல்வாங்கல்களுக்காக முறைமை திறக்கப்படுகிறது. |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ தன்னியக்கமான நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வைப்பு வசதி | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்கல் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வைப்பு வசதியின் இரண்டாம் பிரிவினைத் தீர்த்தல் |

| | | |
|---|---|---|
| மு.ப. 8.15 | நாளொன்றின் முதிர்ச்சிகள்/ வட்டிக் கொடுப்பனவுகள் ஆரம்பமாகின்றன | முதிர்ச்சிப் பெறுகைகள்/ பிணையங்களின் நறுக்கு கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தல், லங்கா செட்டில் விதிப்புக்கள்/ தண்டங்களை மேற்கொள்ளுதல் |
| மு.ப. 8.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைச் சுற்று 1/ காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையினை முக்கியமாகத் தீர்ப்பனவு செய்தல் |
| மு.ப. 8.30 | உடனடி விற்பனை/ கொள்வனவு | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் உடனடி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளைத் தீர்த்தல் |
| மு.ப. 8.45 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி சுற்று 1 |
| மு.ப.. 9.00 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி சுற்று 1 |
| மு.ப. 11.00 | நேர்மாற்று மீள்கொள்வனவினை மாற்றுதல் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பனவற்றின் கீழ் இரண்டாவது பிரிவின் தீர்ப்பனவு |
| மு.ப. 11.45 | நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 12.45 | மீள்கொள்வனவு (ஏலம்) | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 1.00 | முதலாந்தர ஏல தீர்ப்பனவினை மூடிவிடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழான பிணையங்களின் தீர்ப்பனவு |
| பி.ப. 2.45 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | கொடுத்துத் தீர்த்தல் மற்றும் சீரமைப்புத் தீர்ப்பனவு |
| பி.ப. 3.00 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி<br>மூன்றாந்தரப்பு கொடுக்கல்வாங்கல்களுக்கான முதன்மை வெட்டு நேரம் | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை சுற்று 2<br>பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி சுற்று 2<br>வங்கிக்கு வங்கி (எம்ரி2எக்ஸ்எக்ஸ் தொடர்கள்) நீங்கலாக மூன்றாந்தரப்பினரின் சார்பில் புதிய கொடுக்கல்வாங்கல்களுக்காக (ரி+0 இற்காக) மூடிவிடுதல் |
| பி.ப. 3.15 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி சுற்று 2 |
| பி.ப. 3.45 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவு உருவாக்கத்தினை முகாமைப்படுத்தும் பங்கேற்பாளருக்கான வெட்டு நேரம் | பங்கேற்பாளர்கள் பி.ப. 3.45 இற்குப் பின்னர் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொள்வனவுகளை ஆரம்பிக்கக்கூடாது |
| பி.ப. 4.00 | துணைநில் வைப்பு வசதி | துணைநில் வைப்பு வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | துணைநில் கடன்வழங்கல் வசதி | துணைநில் கடன்வழங்கல் வசதியின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொடுப்பனவு | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு |
| பி.ப. 4.30 | இறுதி வெட்டு நேரம்<br>வியாபாரத்தினை மூடிவிடுதல் | மேலும் உள்ளீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. முறைமையானது வியாபாரத்திற்காக மூடப்படுவதன் காரணமாக நீண்ட வரிசை/ தீர்ப்பனவுச் செயன்முறை முடிவுறுத்தப்படுவதுடன் இன்னமும் வரிசையிலுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் முறைமையினால் நிராகரிக்கப்படும் |
| பி.ப. 4.30 மணியிலிருந்து பி.ப. 5.00 மணி வரை | நாள் மூடிவிடுதல்<br>செயன்முறைப்படுத்தல் | நாள் முடிவின் செயன்முறைகள் உ-ம்: அறிக்கைகள்/ பொதுப் பேரேடு, ஏற்றுமதி கோப்புக்களைத் தயாரித்தல், பட்டியற்படுத்தல்/ கூற்று அச்சிடல் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| பி.ப. 5.00 | முறைமையினை மூடிவிடுதல் | ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ் பிரயோக மென்பொருளினை மூடிவிடத் தொடங்குதல், தலத்திற்கு வெளியேயான பின்னூட்டல்களைப் பெறுதல் |

3. பங்கேற்பாளர்கள் இணைய உலாவி பணி நிலையங்களூடாக அவற்றின் தீர்ப்பனவுகள் கணக்குகளைக் கண்காணிக்குமாறு ஆர்ரிஜிஎஸ் முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினைத் தீர்ப்பனவு செய்யும் நேரத்தில் அவற்றின் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதுமான நிதியத்தினை வைத்திருப்பதனை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறார்கள்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன

**பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு**

2015 செத்தெம்பர் 29

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் 2015ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கை**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமையில் டிஎவ்சிசி வர்தன வங்கி பிஎல்சி இன் பெயர் மாற்றம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2015 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் டிஎவ்சிசி வர்தன வங்கி பிஎல்சியை டிஎவ்சிசி வங்கி பிஎல்சியுடன் இணைப்பதற்கான தற்காலிக ஒப்புதல் வழங்கியிருக்கிறது என்பது பற்றியும் புதிய நிறுவனம் இதன் பின்னர் டிஎவ்சிசி வங்கி பிஎல்சி என அழைக்கப்படும் என்பது பற்றியும் அறியத் தரப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்களை கூட்டிணைக்கும் பொருட்டு 2015 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவுகள் கீழே காட்டப்பட்டவாறு திருத்தம் செய்யப்படும்.

(i) பங்கேற்கும் நிறுவனமான டிஎவ்சிசி வர்தன வங்கியின் பெயரை டிஎவ்சிசி வங்கி பிஎல்சி என மாற்றுதல்; அத்துடன்

(ii) டிஎவ்சிசி வர்தன வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கின் பெயரை டிஎவ்சிசி வங்கி பிஎல்சி என மாற்றுதல்

டிஎவ்சிசி வர்தன வங்கியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சுவிப்ற் முறைமையின் வங்கி அடையாளக் குறியீடு 2015 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து டிஎவ்சிசி வங்கியினால் பயன்படுத்தப்படும் என்பது அறியத் தரப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையானது 2015 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

2015 நவெம்பர் 27

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்: பிஎஸ்டி/ஏசியு/01/2015**

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாகக் கொடுக்கல்வாங்கல்களை வழிப்படுத்துவதற்கான நடைமுறை**

**1.** 2013 செத்தெம்பர் 25ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் பிஎஸ்டி/ஏசியு/01/2013 இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை பற்றியும் எண் பிஎஸ்டி/ஏசியு/01/2015 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2015 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் ஆளுகை செய்யும் என்பது பற்றியும் இலங்கையிலுள்ள அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் அறிவிக்கப்படுகிறது.

**2.** ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் நடைமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறிமுறையினூடாக (கொடுக்கல்வாங்கல்கள்) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதிகளுக்கு நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலை தடைசெய்யும் சட்டம், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது மற்றைய ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளினால் காலத்திற்குக் காலம் விடுக்கப்பட்ட ஏதேனும் தொடர்பான சட்டங்கள் ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகார், விதிகள் மற்றும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

3. நொஸ்ரோ கணக்குகளைத் திறந்து பேணி வருதல்

3.1 செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர் நாடுகளிலுள்ள வர்த்தக வங்கிகளுடன் (தொடர்பு வங்கிகள்) ஐ.அ.டொலர்களில் அத்துடன்/ அல்லது யூரோவில் குறித்துரைக்கப்பட்ட நொஸ்ரோ கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டதுடன் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளிடையேயான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொடுக்கல்வாங்கல்கள் இரண்டினதும் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு குறிப்பிடப்பட்ட நொஸ்ரோ கணக்கினைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

3.2 தகைமை வாய்ந்த நிதிய மாற்றல்கள் மீதான அனைத்தக் கொடுக்கல்வாங்கல்களும் (வர்த்தகம் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் எழுகின்ற கொடுப்பனவுகள்) கையளிக்கப்படுகின்ற மிகை நிதியங்களும் கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட நாணயத்தினைப் (உ-ம்: ஐ.அ.டொலர் அல்லது யூரோ) பொறுத்து ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நொஸ்ரோ கணக்குகளூடாக வழிப்படுத்தப்படல் வேண்டும்.

3.3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொடர்பு வங்கிகளுடன் புதிய நொஸ்ரோ கணக்குகளைத் திறக்கும் பொழுது அல்லது ஏற்கனவேயுள்ள நொஸ்ரோ கணக்குகளை மூடும் பொழுது அவை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்கள பணிப்பாளருக்கு கணக்கு இலக்கம், வங்கி அடையாளக் குறியீடு மற்றும் தொடர்பு வங்கியின் பெயர் என்பனவற்றை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

3.4 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நியூயோர்க், ஐக்கிய அமெரிக்கா, அத்துடன்/ அல்லது பிராங்போட் சேர்மனி ஆகிய இடங்களிலுள்ள தொடர்பு வங்கிகளிலுள்ள அவற்றின் நொஸ்ரோ கணக்குகளில் செய்கின்ற ஏதேனும் மாற்றங்களை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

3.5 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடன் மாத்திரம் தகைமையுடைய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற ஒரே நோக்கத்திற்காக அத்தகைய நொஸ்ரோக் கணக்குகளைத் தொழிற்படுத்துதல் வேண்டும்.

3.6 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நொஸ்ரோ கொடுக்கல்வாங்கல்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளே ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறிமுறையினூடான மேற்கொள்ளும் அவற்றின் சொந்தக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏகப் பொறுப்பாகவுள்ளன.

3.7 இந்நொஸ்ரோ கணக்குகளூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கு அவசியமான ஆவணச் சான்றுகளைப் பேணுவதற்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளே ஏகப் பொறுப்பாகவுள்ளன.

3.8 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணி கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவை வசதிப்படுத்துவது மட்டுமேயாகும்.

4. நொஸ்ரோ கணக்குகளுக்கு நிதியிடல் மற்றும் மிகை நிதியத்தினை அனுப்புதல்

4.1 அனைத்துக் கொடுப்பனவுச் சாதனங்களும் ஒன்றில் ஐ.அ.டொலரில் அல்லது யூரோவில் இருத்தல் வேண்டும்.

4.2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொடர்பு வங்கிகளுடன் தாம் வைத்திருக்கும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் அல்லது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய யூரோக் கணக்குகளுக்கு நிதியிட விரும்பும் பொழுது ஐ.அ.டொலர் அல்லது யூரோவில் அத்தகைய தொகை தொடர்பான பெறுமதித் திகதிகளில் இலங்கை மத்திய வங்கியில் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

4.3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொடர்பு வங்கிகளுடன் வைத்திருக்கும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் அல்லது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய யூரோக் கணக்குகளிலுள்ள அவற்றின் மிகையான நிதியத்தினை தாய் நாட்டிற்கு திருப்பியனுப்ப விரும்புமிடத்து அவை தொடர்பு வங்கிகளை அத்தகைய நிதிய மாற்றல்களை அவற்றின் தொடர்பான மத்திய வங்கிகள் அல்லது நாணய அதிகாரசபைகளினூடாக மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

4.4 தொடர்பான மத்திய வங்கிகள் அல்லது நாணய அதிகாரசபைகளிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டதும் இலங்கை மத்திய வங்கி பெறுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்குத் தொடர்பான மத்திய வங்கிகளினால் அல்லது நாணய அதிகாரசபைகளினால் வழங்கப்பட்ட தீர்ப்பனவு அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐ.அ.டொலரில் அல்லது யூரோவில் நிதிகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4.5 பெறுமதித் திகதி நாளைய பெறுமதித் திகதியாக அல்லது உடன் பெறுமதித் திகதியாக இருத்தல் வேண்டும்.

4.6 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நொஸ்ரோ நிதியிடலினை பெடரல் றிசேர்வ் வங்கி நியூயோர்க், டியூச் புண்டஸ் வங்கி, பிராங்போர்ட்; உறுப்பினர் நாடுகள் மற்றும் இலங்கை ஆகியவற்றின் விடுமுறை நாட்களில் மேற்கொள்ள முடியாது.

4.7 உறுப்பினர் மத்திய வங்கிகள் அல்லது நாணய அதிகாரசபைகளினூடாக வழிப்படுத்தப்படக்கூடிய நொஸ்ரோ நிதியிடலின் குறைந்தபட்சத் தொகை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் அல்லது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய யூரோ 500 ஆக இருத்தல் வேண்டும்.

4.8 தொடர்பு வங்கி, கணக்கு இலக்கம் மற்றும் பெறுமதித் திகதி ஆகியன முழுமையாக ஒரே மாதிரியாக இருக்குமிடத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தனியொரு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நொஸ்ரோ கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.

5. தொடர்பு வங்கிகளினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் வைத்திருக்கப்படும் நொஸ்ரோ கணக்குகளிலுள்ள மிகை நிதியத்தினை நிதியிடல் மற்றும் அனுப்புதல் (வொஸ்ரோ கணக்குகள்)

5.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் வைத்திருக்கப்படும் தொடர்பு வங்கிகளின் நொஸ்ரோ கணக்குகளுக்கு நிதிகளை வரவு வைப்பதற்கு ஏனைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர் நாடுகளின் மத்திய வங்கிகள் அல்லது நாணய அதிகாரசபைகளிடமிருந்து ஆலோசனையைப் பெறுகின்ற போது, இலங்கை மத்திய வங்கி, பெறுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஆலோசனையின் கீழ் பெறுமதித் திகதியன்று கோரப்பட்டவாறு ஐ.அ.டொலர்களில் அல்லது யூரோவில் அத்தகைய நிதியிடல்கள் கிடைக்கச் செய்யும்.

5.2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் தொடர்பு வங்கிகளினால் இலங்கையில் பேணப்படுகின்ற அவற்றின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் அல்லது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய யூரோக் கணக்குகளிலுள்ள மிகையான நிதிகளை அனுப்புவதற்கு கோரப்படுமிடத்து குறிப்பிட்ட உரிமம் பெற்ற வங்கிகள், தொடர்பான உறுப்பினர் மத்திய வங்கி அல்லது நாணய அதிகாரசபையினூடாக நிதிய மாற்றல்களை மேற்கொள்ளும் பொருட்டு தொடர்பான பெறுமதித் திகதிகளில் தொடர்பான ஐ.அ.டெலர்களை/ யூரோ நாணயத்தினை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

5.3 மிகை நிதியத்தினை அனுப்பும் பொழுது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அத்தகைய நிதிகள் அதே தொடர்பு வங்கிகளிலிருந்து கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பெறப்பட்ட மிகையான நிதிகள் மாத்திரமே என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. நொஸ்ரோ கணக்குகளில் நிதியிடலுக்கான கோரிக்கைகளும் வொஸ்ரோ கணக்குகளிலுள்ள மிகை நிதியத்தினை தம் நாட்டிற்கு அனுப்புதலும்

6.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் தொடர்பு வங்கிகளுடன் தாம் வைத்திருக்கும் நொஸ்ரோ கணக்குகளுக்கு நிதியிடுதல் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் தொடர்பு வங்கிகளினால் வைத்திருக்கப்படும் மிகை நிதியத்தினை தாய் நாட்டிற்கு அனுப்புதலுக்கான கோரிக்கைகள் சுவிப்ற் அல்லது தொலைநகல் போன்ற தொடர்பூட்டல் ஊடகங்களை மட்டும் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் (சுவிப்ற் முறைமை கிடைக்காதவிடத்து மட்டுமே தொலைநகலைப் பயன்படுத்துதல் வேண்டும்).

6.2 நிதிய மாற்றல்களின் விபரங்கள் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பிரிவிற்கு **மின்னஞ்சல்** ஊடாக (acupsd@cbsl.lk) அல்லது தொலைபேசி ஊடாக (மின்னஞ்சல் வசதி கிடைக்காதவிடத்து மட்டும்) **14.00 மணிக்கு** முன்னதாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

6.3 மின்னஞ்சல் உறுதிப்படுத்தலை உடனடுத்து எழுதப்பட்ட தொடர்பூட்டல் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பிரிவினை அடைவதனை இயலச்செய்யும் விதத்தில் அது சுவிப்ற் முறைமையினூடாக (இலவச படிவ செய்தி எம்ரி 199 அல்லது எம்ரி 299 இனைப் பயன்படுத்தி) அல்லது தொலைநகல் மூலமாக இணைக்கப்பட்ட படிவமான “ஏ1 அல்லது ஏ2”/ “பீ1 அல்லது பீ2” இல் பொருத்தமான விதத்தில் அதே வேலை நாளன்று **14.30 மணிக்கோ** அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

6.4 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் நொஸ்ரோ நிதியிடல் மீதான அவற்றின் மின்னஞ்சல் மற்றும் சுவிப்ற் உறுதிப்படுத்தலை வெட்டு நேரத்திற்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கொடுக்கல்வாங்கல் தொடர்பான ஏதேனும் உறுதிப்படுத்தல்கள் வெட்டு நேரத்திற்குப் பின்னதாக பெறப்படுமாயின் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் அடுத்த பெறுமதித் திகதியன்று மேற்கொள்ளப்படும்.

| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் | தொலைநகல் |
|---|---|---|---|
| செல்வி கே ஏ ரி என் சேனரத்ன | மூத்த உதவிப் பணிப்பாளர் | 2477053 | 2422819 |
| செல்வி சி சந்திரவன்ச | உதவிப் பணிப்பாளர் | 2477057 | 2346280 |

மின்னஞ்சல்: acupsd@cbsl.lk

7. இலங்கை மத்திய வங்கியின் கணக்கிற்கான நிதிய மாற்றல்கள்

7.1 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழான தீர்ப்பனவுகளுடன் தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளுக்கான அனைத்து வரவுகளும் தொடர்பான பெறுமதித் திகதிகளில் பின்வரும் கணக்குகளுக்கு செய்யப்படுதல் வேண்டும்.

| நாணயம் | வங்கி | கணக்கு இல. |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | பெடரல் றிசேர்வ் வங்கி, நியூயோர்க் | 021083527 |
| யூரோ | டியூச் புண்டஸ் வங்கி, பிராங்பேர்ட் | 5040040828 |

7.2 தாமதமான/ செலுத்தத் தவறிய கொடுப்பனவுகளைப் பொறுத்தவரை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தாமதமான/ செலுத்தத் தவறுவதற்கான விதிப்புக்களுக்குட்பட்டிருப்பதுடன் தாமதமான/ செலுத்தத் தவறிய காலப்பகுதிக்காக செலுத்தப்பட வேண்டிய தொடர்பான தொகை பெடரல் றிசேர்வ் வங்கி, நியூயோர்க் அல்லது டியூச் புண்டஸ் வங்கி, பிராங்பேர்ட்டினால் வழங்கப்பட்ட ஓரிரவு மீள்கொள்வனவு வட்டி வீதங்களில் ஏற்புடைத்தான விதத்தில் மத்திய வங்கியினால் கணிக்கப்படும்.

8. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் மற்றும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய யூரோக் கணக்குகள் மீதான வட்டி

தொடர்பு வங்கிகளினால் பேணப்படுகின்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் மற்றும் ஆசியத் தீர்ப்பனவு யூரோ கணக்குகள் மீது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பரஸ்பரம் இணைங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி அவற்றின் தற்றுணிபின் அடிப்படையில் வட்டியைச் செலுத்தலாம்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

படிவம் "ஏ1"

<u>நொஸ்ரோ கணக்குகளின் நிதியிடல்</u>

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1

அன்புள்ள ஐயா/ அம்மணி

<u>ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்</u>

எமது **ஐ.அ.டொலர் தொடர்பு வங்கியான ஐக்கிய அமெரிக்காவிலுள்ள** **< ஐ.அ.டொலர் நொஸ்ரோ வங்கி மற்றும் வங்கி அடையாளக் குறியீடு>** < வங்கியின் பெயர்> ஊடாக/ நியூயோர்க்கின் பெடரல் றிசேர்வ் வங்கியுடனான இலங்கை மத்திய வங்கியின் கணக்கு இலக்கம் 021083527 இற்கு பெறுமதி <திகதியில்> ஐ.அ.டொலர் கொண்ட தொகை < தொகை சொற்களில்> வழங்குவதற்கு நாம் < வங்கியின் பெயர்> இத்தால் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

இத்தொகையினை எமது கணக்கு இலக்கம் .............................. வரவு வைப்பதற்கு பங்கேற்கின்ற மத்திய வங்கி மற்றும் அலுவலகத்தின் பெயரூடாக < தொடர்பு வங்கியின் பெயர்> மற்றும் < வங்கி அடையாளக் குறியீட்டுடன்> தயவுசெய்து ஒழுங்குகளைச் செய்துகொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள

............................................ (அ)
............................................ (ஆ)
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

படிவம் "ஏ2"

<u>நொஸ்ரோ கணக்குகளின் நிதியிடல்</u>

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1

அன்புள்ள ஐயா/ அம்மணி

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

எமது **யூரோ தொடர்பு வங்கியான ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள** **< யூரோ நொஸ்ரோ வங்கி மற்றும் வங்கி அடையாளக் குறியீடு>** < வங்கியின் பெயர்> ஊடாக/ பிராங்பேர்ட்டின் டியூச் புண்டெஸ் வங்கியுடனான இலங்கை மத்திய வங்கியின் கணக்கு இலக்கம் 5040040828 இற்குப் பெறுமதி < திகதியில்> யூரோ கொண்ட தொகை < தொகை சொற்களில்> வழங்குவதற்கு நாம் < வங்கியின் பெயர்> இத்தால் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

இத்தொகையினை எமது கணக்கு இலக்கம் .............................. வரவு வைப்பதற்கு பங்கேற்கின்ற மத்திய வங்கி மற்றும் அலுவலகத்தின் பெயரூடாக < தொடர்பு வங்கியின் பெயர்> மற்றும் **< வங்கி அடையாளக் குறியீட்டுடன்>** தயவுசெய்து ஒழுங்குகளைச் செய்துகொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள

............................................ (அ)
............................................ (ஆ)
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

படிவம் "பீ1"

**ஏனைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர் நாடுகளின் வர்த்தக வங்கிகளின் வொஸ்ரோ கணக்குகளிலுள்ள மிகை நிதியத்தினைக் கையளித்தல்**

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1

அன்புள்ள ஐயா/ அம்மணி

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக < பங்கேற்கின்ற நாட்டிலுள்ள வர்த்தக வங்கியின் பெயர் மற்றும் **வங்கி அடையாளக் குறியீடு>** கணக்கிற்கு <பெறுமதித் திகதியன்று> மேற்குறிப்பிட்ட பெயரையுடைய வங்கியினால் எம்முடன் வைத்திருக்கப்படும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் கணக்கிலுள்ள மிகை நிதியத்தின் ஐ.அ.டொலர் தொகையினை < தொகை சொற்களில்> < பங்கேற்கும் மத்திய வங்கிக்கு> செலுத்துவதற்கு தயவுசெய்து ஒழுங்கு செய்யவும்.

மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதித் திகதியில் எமது **ஐ.அ.டொலர் தொடர்பு வங்கி <ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஐ.அ.டொலர் நொஸ்ரோ வங்கி மற்றும் வங்கி அடையாளக் குறியீடு>** இன் ஊடாக நியூயோர்க் பெடரல் றிசேர்வ் வங்கியுடனான தங்களின் கணக்கு இல. 021083527 சிறிலக் இற்கு ஐ.அ.டொலர் **தொகையினை < தொகை சொற்களில்>** வழங்குவதற்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

............................................ (அ)
............................................ (ஆ)
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

படிவம் "பீ2"

**ஏனைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர் நாடுகளின் வர்த்தக வங்கிகளின் வொஸ்ரோ கணக்குகளிலுள்ள மிகை நிதியத்தினைக் கையளித்தல்**

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1

அன்புள்ள ஐயா/ அம்மணி

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக < பங்கேற்கின்ற நாட்டிலுள்ள வர்த்தக வங்கியின் பெயர் மற்றும் **வங்கி அடையாளக் குறியீடு>** கணக்கிற்கு <பெறுமதித் திகதியன்று> மேற்குறிப்பிட்ட பெயரையுடைய வங்கியினால் எம்முடன் வைத்திருக்கப்படும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய யூரோ கணக்கிலுள்ள மிகை நிதியத்தின் யூரோ **தொகையினை < தொகை சொற்களில்>** < பங்கேற்கும் மத்திய வங்கிக்கு> < பெயர்> செலுத்துவதற்கு தயவுசெய்து ஒழுங்கு செய்யவும்.

மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதித் திகதியில் எமது **யூரோ தொடர்பு வங்கி <யூரோ பிராந்தியத்திலுள்ள யூரோ நொஸ்ரோ வங்கி மற்றும் வங்கி அடையாளக் குறியீடு>** இன் ஊடாக பிராங்பேர்ட் டியுச் புண்டஸ் வங்கியுடனான தங்களின் கணக்கு இல. 5040040828 சிறிலக் இற்கு யூரோ **தொகையினை < தொகை சொற்களில்>** வழங்குவதற்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

............................................ (அ)
............................................ (ஆ)
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

2015 நவெம்பர் 30

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் 2015ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சுற்றறிக்கை**

சேரல்: உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

**பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழி - லங்காபே இற்கான நேரத் தொடர்**

இச்சுற்றறிக்கையானது பொதுமக்களுக்கு பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க மற்றும் செலவுச் சிக்கனமான கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் பொருட்டு நாட்டின் தேசிய கொடுப்பனவு முறைமையினை மேம்படுத்துவதற்காக சட்டத்தின் பிரிவு 4 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதற்காக 2015ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டத்தின் 44ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி விடுக்கப்படுகிறது.

2. உரிமம் பெற்ற வங்கிகள் தமது தனிப்பட்ட ஆழிகளை பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியுடன் இணைத்துக் கொண்டு பின்வரும் நேரத் தொடர்களைப் பின்பற்றுவதன் மூலம் தொடர்பான பணிகளை ஆரம்பிக்கலாம்.

2.1 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுக்கான கொடுப்பனவு அட்டைகளை வழங்குகின்ற அத்துடன்/ அல்லது கையேற்பாளர்களாக தொழிற்படுகின்ற மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிகளை சொந்தமாகத் தொழிற்படுத்துகின்ற உரிமம் பெற்ற வங்கிகள் 2016 மாச்சு 31 அளவில் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

2.2 அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியுடன் 2016 செத்தெம்பர் 30ஆம் திகதியளவில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

2.3 விற்பனை மையக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு அட்டைகளை வழங்குபவராக அத்துடன்/ அல்லது கையேற்பாளர்களாகத் தொழிற்படுகின்ற உரிமம் பெற்ற வங்கிகள் பொதுவான விற்பனை மைய ஆழியுடன் 2016 திசெம்பர் 31 அளவில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

2.4 செல்லிடக் கொடுப்பனவுப் பணிகளை வழங்குகின்ற உரிமம் பெற்ற வங்கிகள் பொதுவான செல்லிட ஆழியுடன் 2017 செத்தெம்பர் 30ஆம் திகதியளவில் இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

(திருமதி) ஆர் ஏ எஸ் எம் தயாரத்ன
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்.: ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 (ஏ-03)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2015 யூன் 29

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 இற்கான திருத்தம்**

அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் மேலேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு பின்வரும் திருத்தம் செய்யப்பட்டுள்ளமை பற்றி இத்தால் தங்களுக்கு அறியத்தரப்படுகிறது.

- அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாடுகள் 2015 திசெம்பர் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளன. இதன்படி, 4.3ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகிறது.

"4.3 இவ்வறிவுறுத்தல்களின் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை அல்லது நாணயச் சபையினால் நீடிக்கப்படக்கூடிய மற்றுமொரு திகதிவரை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற அடகுபிடித்தல் முற்பணங்கள் பின்வரும் நியதிகளையும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யுமிடத்து இக்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் நன்மைகளைப் பெற உரித்துடையனவாகும்:

(அ) பெறுமதிக்கான கடன் வழங்கல் விகிதம் குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் நடைமுறை மட்டத்திற்கு மேலாக 15 சதவீதமாகவும் 80 சதவீதத்தினை விஞ்சாததாகவும் இருத்தல் வேண்டும், மொத்த வெளிப்படுத்துகை பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

உதாரணம்

பொறுப்பினைக் கணித்தல்

| விபரம் | அடகுபிடிக்கும் நேரத்தில் குறிப்பிட்ட பொருளின் சந்தைப் பெறுமதி<br>ரூ. | அடகு முற்பணம்<br>ரூ. | ஆண்டிற்கு 12 சதவீதத்தில் வட்டி<br>ரூ. | அடகுபிடிக்கப்பட்ட 12 மாதங்களின் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வெளிப்படுத்துகை<br>ரூ. | அடகுபிடிக்கப்பட்ட 15 மாதங்களின் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வெளிப்படுத்துகை<br>ரூ. |
|---|---|---|---|---|---|
| 80% பெறுமதிக்கான கடன் வழங்கும் விகிதம் | 100.00 | 80.00 | 9.60 | 89.60 | 92.00 |

(ஆ) அடகுபிடித்தல் முற்பணம் மீது விதிக்கப்படும் வட்டி வீதம் அனைத்துக் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் உட்பட ஆண்டிற்கு 12 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல் வேண்டும்;

(இ) இத்திட்டத்திற்கு தகைமை பெறுவதற்கு அடகுபிடித்தல் முற்பணங்கள் மீதான 1 சதவீதமான கொடுகடன் உத்தரவாதக் கட்டணத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செலுத்துதல் வேண்டும்;

(ஈ) உயர்ந்தபட்சக் கடன் வரையறை ஆளொருவருக்கு ரூ.500,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது;"

- அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கின்றன.

**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/எஸ்பிஈஎன்டிபி/2009/06**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெட்டி 590
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2015 யூலை 2

அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சிறுஉடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஆர்டிடி/எஸ்பிஈஎன்டிபி/2009/06 இற்கான திருத்தங்கள் (கடன் இல. 712 எல்கே)**

மேற்குறிப்பிட்ட கடன் திட்டத்தின் 2009 ஒத்தோபர் 20ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஆர்டிடி/எஸ்பிஈஎன்டிபி/2009/06இல் பிரிவுகள் 2.1 மற்றும் 2.12 என்பன 2015 மே 29ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கீழே தரப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளன என்பது தங்களுக்கு அறியத்தரப்படுகிறது.

2. கொடுகடன் திட்டம்

2.1 அறிமுகம்

சிஎஉ 2.6 மில்லியன் கொண்ட நிகழ்ச்சித்திட்ட மூலவளங்களின் ஒருபகுதி "கிராமிய நிதியிடல் மற்றும் கொடுகடன்" கூறின்கீழ் ஒதுக்கப்படும். இது நன்மை பெறுபவர்களினால் அடையாளம் காணப்பட்ட முதலீடுகளுக்கான சலுகை நியதிகள் மீதான கொடுகடன் வடிவில் நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்ட கொடைகள், உள்ளீடுகள் மற்றும் ஏனைய உதவிகளுக்கு துணைநிரப்பியாக இருக்கும்.

2.12 வட்டி வீதம்

(அ) ஆண்டிற்கான கடன் வழங்கல் வட்டி வீதம் ஏழு (7) சதவீதப் புள்ளியாகும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான மீள்நிதியிடலுக்கான ஆண்டு வட்டி வீதம் மூன்று (3) சதவீதப் புள்ளியாக இருக்கும்.

சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

2015 யூலை 06

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கு குறுங்கால கொடுகடனை வழங்குவதற்காக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின்கீழ் களஞ்சியசாலை பற்றுச்சீட்டு நிதியிடலை அறிமுகப்படுத்தல்.**

1. **அறிமுகம்**

சிறு வேளாண்மையாளர்களினால் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதியின் மீது அரசிற்குச் சொந்தமான களஞ்சியசாலைகளினால் வழங்கப்பட்ட களஞ்சியசாலை பற்றுச்சீட்டுகளுக்கு எதிராக பதிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களிலிருந்து குறுங்கால கொடுகடனைப் பெற்றுக் கொள்வதற்கு அத்தகைய வேளாண்மையாளர்களை இயலுமைப்படுத்தக்கூடிய களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டு நிதியிடல் முறைமையொன்றினை வசதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது. இந்நோக்கத்திற்காக, நாட்டின் முக்கிய வேளாண்மை மாவட்டங்களில் மூன்று களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்கு உலக வங்கியின் உதவியுடன் நிதியமைச்சினால் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இம்முயற்சியின் நோக்கம் யாதெனில் சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கு அவர்களின் உற்பத்திகளுக்கு அறுவடைக் காலத்திலிருந்து சந்தையில் விலை அதிகரிப்புக்கள் ஏற்படும் காலம் வரை அவர்களின் உற்பத்தியினை களஞ்சியப்படுத்துவதற்கு தரமான களஞ்சிய வசதிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களின் வருமானத்தினை உயர்த்துவதேயாகும். வேளாண்மையாளர்கள் அறுவடையின் பின்னர் தமது உற்பத்திகளை படிப்படியாக விற்பதற்கான விருப்பத் தேர்வினை கொண்டிருப்பதுடன் களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டினை பிணையமாக வங்கிகளுக்கு வழங்குவதன் மூலம் பதிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களிலிருந்து நிதியியல் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான பிணையாக அத்தகைய உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கும் முறைமை வசதியளிக்கின்றது.

2. **களஞ்சியசாலை வசதிகள்**

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், அனுராதபுரம், மன்னார் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மூன்று களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. மூன்றில் அனுராதபுரம் களஞ்சியசாலையின் நிர்மாண வேலைகள் மார்ச்சில் முடிவடைந்திருப்பதுடன் மற்றைய இரண்டினதும் நிர்மாண வேலைகள் 2015 யூலையில் நிறைவடையவுள்ளன. அனுராதபுரம் களஞ்சியசாலை கலென்பிந்துனுவேவ பிரதேச செயலகப் பகுதியிலுள்ள உபுல்தெனியாவில் அமைந்திருக்கிறது. உபுல்தெனியாவிலுள்ள களஞ்சியசாலையின் மொத்த இயலளவு 5000 மெற்றிக்தொன் என்பதனால் அனுராதபுர மாவட்டத்திலுள்ள கலென்பிந்துனுவேவ செயலகப் பிரதேசத்தின் மிகிந்தலை, ககரகஸ்டிலிய, திறப்பேன், கெக்கிராவ மற்றும் பலுகஸ்வேவா ஆகிய பகுதிகளிலுள்ள ஏறத்தாழ 2500 சிறு வேளாண்மையாளர்களுக்கு வசதிகளை வழங்கும்.

3. **களஞ்சியசாலைகளின் தொழிற்பாடுகள்**

களஞ்சியசாலை இலங்கை அரசாங்கத்தின் சொத்தொன்றாக இருப்பதுடன் இதன் பேணலும் தொழிற்பாடுகளும் தொடர்பான மாவட்டங்களிலுள்ள மாவட்ட செயலகங்களின் அதிகார வரம்பிற்குள் வருகின்றன. இதன்படி, தொடர்பான மாவட்டங்களின் மாவட்ட செயலகங்கள், ஆர்வலர்களின் நன்மை கருதி சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக கிரமமான அடிப்படையில் களஞ்சியசாலைகளின் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கு அமைச்சரவையினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, அனுராதபுர மாவட்ட செயலகம் 2015 மாச்சிலிருந்து தொடங்கும் 5 ஐந்தாண்டு காலப்பகுதிக்கான தொழிற்பாட்டாளராக களஞ்சியசாலையினை தொழிற்படுத்துவதற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட பணி வழங்குனரான பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் முகாமைத்துவப்பணி உடன்படிக்கையொன்றினை செய்திருக்கிறது. கொள்கை விடயங்கள் தொடர்பான பிரச்சனைகளையும் தேவைப்படும் பொழுது வைப்பாளர்/ வேளாண்மையாளர்களின் சார்பில் இருப்புக்களின் விற்பனைகள்/ அகற்றல்களையும் கையாள்வதற்காக மதியுரைக்குழுவொன்றினை நியமிப்பதற்கு நிதியமைச்சின் திறைசேரி செயலாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. குழுவானது நிதியமைச்சு, தொடர்பான மாவட்டங்களின் மாவட்ட செயலாளர், வேளாண்மைப் பணித்திணைக்களம், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பவியல் நிறுவனம், வேளாண்மையாளர் அமைப்புக்கள், களஞ்சியசாலை முகாமைத்துவ கம்பனியிலிருந்தான பிரதிநிதிகள் மற்றும் இவ்விடயத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரையும் உள்ளடக்கியிருக்கும். குழுவிற்கு தொடர்பான மாவட்டங்களின் மாவட்ட செயலாளர் தலைமை தாங்குவார்.

4. **களஞ்சியசாலை தொழிற்பாட்டாளரின் பொறுப்புக்கள்**

அனுராதபுர மாவட்ட செயலகத்திற்கும் தொழிற்பாட்டாளருக்குமிடையில் கையொப்பமான முகாமைத்துவ பணி உடன்படிக்கையின் நியதிகளின்படி, களஞ்சியசாலை முகாமையாளர் வேளாண்மை வைப்பாளர்களிடமிருந்து வேளாண்மை பண்டங்களை பெறுவதற்கும், தரத்தினை பேணும் விதத்தில் பாதுகாப்பான சூழலில் அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும், பதிவேடுகளை பேணுவதற்கும் ஒழுங்குபடுத்துநருக்கு அறிக்கையளிப்பதற்கும், களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டினை வழங்குவதற்கும் வேளாண்மை வைப்பாளர்களின் நன்மைக்காக வாங்குனர்களுக்கு அத்தகைய பண்டங்களை வழங்குவதற்கும் பொறுப்பாக இருக்கின்றார்.பின்வரும் நடவடிக்கைகள் களஞ்சியசாலை முகாமைத்துவத்திற்கு ஒப்படைக்கப்பட்ட முழுமையான தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்குகின்றன.

4.1
- பண்டங்களைப் பெறுதல்
- நிறுத்தல்
- தரத்தினைப் பரிசோதித்தல்
- அறவிடல்
- பதிவுசெய்தல்/ கணக்குகளை பேணுதல்
- களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்
- பற்றுச்சீட்டுக்களை மாவட்ட செயலகங்களுடன் பதிவு செய்தல
- விரும்பத்தக்க தர மட்டங்களில் இருப்புக்களைப் பேணுதல்

- நாளாந்த அடிப்படையில் இருப்பு நிலைமையினை மாவட்ட செயலகத்திற்கு அறிக்கையிடுதல
- தரமுகாமைத்துவம்
- பண்டங்களின் விநியோகம்
- கொடுப்பனவு அட்டவணைகளைத் தயாரித்தல்
- நிதியியல் நிறுவனங்களினூடாக கொடுப்பனவினை மேற்கொள்ளுதல்
- களஞ்சிய சாலைக் கட்டணங்களையும் பைகளுக்கான செலவுகளையும் சேகரித்தல்
- களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டுகளுக்கெதிராக வழங்கப்பட்ட குறுங்கால கொடுகடன்களை அறவிடுவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு உதவிபுரிதல்

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட செயலாளருடன் தொழிற்பாட்டாளரினால் கையொப்பமிடப்பட்ட முகாமைத்துவ பணி உடன்படிக்கையின் ஒருபகுதியாகவுள்ள தொழிற்பாட்டு கைநூலொன்றினால் ஆளப்படுகின்றன.

## 5. களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டுக்கள்

5.1 வேளாண்மையாளர்களின் சொத்துடமையின்கீழ் பண்டங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டதும்.`.வைப்புச் செய்யப்பட்டதும், களஞ்சியசாலை முகாமையாளர், தொடர்பான வைப்பாளர்களுக்கு களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டுக்களை தனித்தனியாக வழங்குவார். பற்றுச்சீட்டானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- பண்டங்களின் உரிமையாளர்/ வைப்பாளர் பெயர், முகவரி, தொடர்புகொள்ளத்தக்க தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்
- வைப்புச் செய்யப்பட்ட பயிர்களின் பெயர்
- கி.கிறாம்களில் அளவு மற்றும் பைகளின் எண்ணிக்கை
- வைப்புச் செய்யப்பட்ட திகதி

5.2 களஞ்சியப்படுத்தலின் ஆரம்பத்தில் வைப்பாளரும் களஞ்சியசாலை முகாமையாளரும் வைப்புச் செய்யப்பட்ட பண்டங்களின் விற்பனை மற்றும் அகற்றல் தொடர்பில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்கிச் செயற்படுவர். இதன்படி, குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் வைப்பாளர்களால் வாங்குனரை கண்டுபிடிக்கமுடியாமல் அல்லது பண்டங்களை அகற்ற முடியாமல் போகுமிடத்து அவர்/ அவள் (வைப்பாளர்) தெரிந்தெடுக்கப்பட்ட வாங்குனருக்கு மாவட்ட செயலாளர் மற்றும் மதியுரைக்குழுவின் மேற்பார்வையின் கீழ், சந்தையில் கிடைக்கத்தக்க சிறந்த விலையில் பண்டங்களை மாற்றல் செய்வதற்கு களஞ்சியசாலை முகாமையாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

5.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் களஞ்சியப்படுத்தப்பட்ட பண்டங்களின் நடைமுறைச்சந்தைப் பெறுமதியில் 50 சதவீதம் வரையிலான தொகையினை வேளாண்மையாளருக்கு குறுங்கால கடனாக வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன.

5.3.1 உயர்ந்தபட்ச களஞ்சியப்படுத்தல் காலம்

| பண்டம் | உயர்ந்தபட்ச களஞ்சியப்படுத்தல் காலம் |
|---|---|
| நெல் (பெரும் போகம்) | 270 நாட்கள் |
| நெல் (சிறு போகம்) | 180 நாட்கள் |
| சோளம் | 270 நாட்கள் |
| உழுந்து | 270 நாட்கள் |
| சோயா அவரை விதை | 270 நாட்கள் |
| எள்ளு | 180 நாட்கள் |

5.3.2 களஞ்சியசாலையில் பண்டங்களை வைத்திருக்கும் ஒரே நோக்கம் தெரிந்தெடுக்கப்பட்ட வாங்குனருக்கு உயர்ந்த விலைகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அல்லது காலமுடிவில் அவற்றை விற்பனை செய்வதேயாகும்.

5.3.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளை முகாமையாளர்கள், அத்தகைய கடன்களை வழங்கிய பின்னர் களஞ்சியசாலை பற்றுச்சீட்டுகளுக்கு எதிராக வங்கி குறுங்கால கொடுகடனை வழங்கியிருப்பது பற்றி களஞ்சியசாலை முகாமையாளருக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலும், கிளை முகாமையாளர்கள் களஞ்சியசாலை வெப்தளத்தினைப் பார்வையிடவும் கடனுக்காக வங்கிக்கு பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படும் பொழுது குறிப்பிட்ட பற்றுச்சீட்டினை சரிபார்க்கவும் முகாமையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

5.3.4 விற்பனை நடைமுறை

தெரிவு செய்யப்பட்ட வாங்குனர் விற்பனைத் தொகையினை தொடர்பான நிதியியல் நிறுவனத்திலுள்ள தொடர்பான வேளாண்மையாளர்கள் கணக்கிற்கு வைப்புச் செய்யுமாறு களஞ்சியசாலை முகாமையாளரினால் கேட்டுக்கொள்ளப்படுவர்.

5.3.5 இது தொடர்பில், களஞ்சியசாலை முகாமையாளர், பின்வருவனவற்றை பரிசீலனையில் கொண்டு வேளாண்மையாளரினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய மொத்தத் தொகையினைக் காட்டும் கொடுப்பனவு அட்டவணையொன்றினைத் தயாரிப்பார்.

வாங்கும் விலையில் விற்பனைத் தொகை

பைகளுக்கான கட்டணம் (பைகளுக்கான செலவு வாங்குனரால் செலுத்தப்படுதல் வேண்டும்)

களஞ்சியசாலைக் கட்டணம் (களஞ்சியசாலைக் கட்டணம் வைப்பாளர்களினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

5.3.6 கொடுப்பனவு அட்டவணைகள் இரண்டு பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டு நிதியியல் நிறுவனத்தின் தொடர்பான கிளைகளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

5.3.7 வாங்குனரொருவர் தொடர்பான கொடுப்பனவினை நிதியியல் நிறுவனத்தினூடாக வேளாண்மை வைப்பாளருக்கு மேற்கொண்டதும் பண்ட இருப்புக்களின் உடமை வாங்குனருக்கு மாற்றமடைகிறது.

5.3.8 தொடர்பான நிதியியல் நிறுவனங்களின் வங்கி முகாமையாளர்களினால் களஞ்சியசாலை பற்றுச்சீட்டுகளுடன் சேர்த்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் கூடிய அட்டவணைகள் பெறப்பட்ட பின்னர் மாத்திரமே களஞ்சியசாலை முகாமையாளர்கள் தொடர்பான பண்ட இருப்புக்களின் சொத்துடைமையினை தொடர்பான வாங்குனருக்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

5.3.9 இதன்படி, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளை முகாமையாளர்கள் வாங்குனர்களிடமிருந்து விற்பனை பெறுகைகள் பெறப்பட்டமையினையும் வைப்பாளர்களின் தொடர்பான கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டமையினையும் உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுவர்.

5.3.10 மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முகாமையாளர்கள் களஞ்சியசாலைகளின் கட்டணங்களும் பைகளின் செலவும் கழிக்கப்பட்டு கொடுப்பனவு அட்டவணையில் காட்டப்பட்டவாறு களஞ்சியசாலைகளின் தொடர்பான கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

5.3.11 குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதிக்குள் செலுத்தவேண்டிய தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு வைப்பாளர்கள் தவறும் சந்தர்ப்பங்களில் வைப்புக்கணக்குகளுக்கு விற்பனை பெறுகைகள் கிடைக்கும் பொழுது/ பெறும் பொழுது களஞ்சியசாலை முகாமையாளரூடாக வைப்பு வேளாண்மையாளர்களின் சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முகாமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## 6. புதிய அனைத்துமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழான வசதிகள்

6.1 களஞ்சியசாலைகளில் தமது உற்பத்திகளை வைப்புச்செய்த சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் உரித்துடைய குறுங்கால பயிர்களின் பயிர் செய்கைக்காக குறுங்கால நிதியினை எதிர்பார்ப்பவர்களுக்கும், அப்பயிர்களின் நாற்று மேடைகளுக்கும் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் களஞ்சியசாலை பற்றுச்சீட்டுக்களை பிணையங்களாகக்கொண்டு புதிய அனைத்தையுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் குறுங்கால கொடுகடன் வசதிகளை வழங்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

6.2 தகுதியுடைய நோக்கம்:

- புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் தகைமையுடைய குறுங்கால பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் அப்பயிர்களின் நாற்றுமேடைகள்

6.3 தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்: இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் அவர்களின் பண்டங்களை வைப்புச் செய்த வேளாண்மையாளர்கள்

6.4 உயர்ந்தபட்ச கடன் தொகை: கடன்பாட்டாளரொருவருக்கான கடன்தொகை பண்டங்களின் சந்தை விலைகள்/ பண்டங்களின் பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படல் வேண்டுமென்பதுடன் களஞ்சியப்படுத்தப்பட்ட பண்டங்களின் நடைமுறை சந்தைப் பெறுமதியில் 50 சதவீதத்தினை வழங்குவதற்கும் கோரப்பட்டது. கிளை முகாமையாளர், வாடிக்கையாளரின் நம்பகத்தன்மையினைப் பொறுத்து பெறுமதியின் 50 சதவீதத்திற்கு கூடுதலான அளவினை வழங்குவதனை பரிசீலிப்பதற்கும் தற்றுணிவுடையவராவார்.

6.5 வட்டிவீதம் மற்றும் கொடுகடன் உத்தரவாதம்: புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு ஏற்புடையதான அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் களஞ்சியசாலை பற்றுச்சீட்டுகளுக்கு எதிராக வழங்கப்பட்ட குறுங்கால கொடுகடன் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வட்டி உதவுதொகையினையும் கொடுகடன் உத்தரவாதத்தினையும் கோருவதற்கும் தகைமையுடையனவாகும்.

6.6 மீள்கொடுப்பனவுக் காலம்: உயர்ந்தபட்சம் 270 நாட்கள்

6.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டுகளுக்கு எதிராக வழங்கப்பட்ட கொடுகடனிலிருந்து புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கை கடன்களை அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

6.8 களஞ்சியசாலைப் பற்றுச்சீட்டுகளுக்கு எதிராக வசதிகளை வழங்குவதற்கு முன்னதாக வைப்பு வேளாண்மையாளர்களிடமிருந்து தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. எனினும், அத்தகைய வசதிகளை வழங்குவதற்காக ஏதேனும் பிணைகள்/ பிணையங்களை சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வேளாண்மையாளர்கள் வைப்பாளர்களைக் கோரக்கூடாது.

6.9 புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

6.10 இத்துறையில் கூடுதலான அளவு சிறிய வேளாண்மையாளர்களை உள்ளடக்கிக் கொள்ளும் நோக்குடன் களஞ்சியசாலைகளிலுள்ள பண்டவைப்புக்கள் தொடர்பில் தனியொரு வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் கீழே காணப்பட்டவாறு உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச மட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

| பயிர் | உயர்ந்தபட்சம் | குறைந்தபட்சம் |
|---|---|---|
| நெல் | 12,000 கி.கி | 500 கி.கி |
| சோளம் | 12,000 கி.கி | 500 கி.கி |
| உழுந்து | 10,000 கி.கி | 500 கி.கி |
| சோயா அவரை | 10,000 கி.கி | 500 கி.கி |
| எள்ளு | 10,000 கி.கி | 100 கி.கி |

6.11 இலங்கை மத்திய வங்கி தேவைப்படுகின்றவிடத்து இவ்வறிவுறுத்தல்களுக்கு திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டிருப்பதுடன் திருத்தங்கள் நிதி அமைச்சு மற்றும் நிதியியல் நிறுவனங்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படும்.

6.12 இவ்வறிவுறுத்தல்கள் 2015 யூலை 6ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

பிரதி: 1. செயலாளர்/ நிதியமைச்சு
2. பிரதேச முகாமையாளர், இலங்கை மத்திய வங்கி - அநுராதபுரம், யாழ்ப்பாணம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை மற்றும் கிளிநொச்சி

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/டபில்யூசிஎல்எஸ்ரிஎப்/2015/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01.
2015 ஓகத்து 7

தொலைபேசி : 2477447, 2477472
தொலைநகல் : 2477734

சேரல்: பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
அமானா வங்கி பிஎல்சி
இலங்கை வங்கி
கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
டிஎவ்சிசி வங்கி பிஎல்சி மற்றும் டிஎவ்சிசி வர்தன வங்கி
அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி பிஎல்சி
பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
மக்கள் வங்கி
சம்பத் வங்கி பிஎல்சி
செலான் வங்கி பிஎல்சி
ஸ்டான்டட் சாா்டட் வங்கி
யூனியன் வங்கி கொழும்பு பிஎல்சி

## தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம்

### 1. அறிமுகம்

அ) தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக பதிவு செய்யப்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் எதிர்நோக்கும் நிதியியல் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்ட இலங்கை அரசாங்கம் அவற்றின் தொழிற்படுகின்ற மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு அவற்றிற்கு உதவுவதற்காக கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், தேயிலைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டனவும் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுகின்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்றனவும் இலங்கை தேயிலைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டனவுமான பதிவுசெய்யப்பட்ட தேயிலை தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கு கடன் வழங்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. சலுகை வட்டி வீதங்களில் வங்கிகள் கடன்கள் வழங்குவதனை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு அரசாங்கம் 2 சதவீத உதவு தொகையினை வழங்கும்.

ஆ) இத்திட்டத்தின் கீழான நன்மைகளை அவர்களாகவே பயன்படுத்திக்கொள்ள விரும்பும் பதிவுசெய்யப்பட்ட தேயிலை தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் அவர்களது விண்ணப்பங்களை இலங்கை தேயிலைச் சபையினூடாக சமா்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனா். (இலங்கை தேயிலைச் சபை இந்நோக்கத்திற்காக வழிகாட்டல்களையும் மாதிரி விண்ணப்பமொன்றினையும் வழங்கும்.

## 2. நடைமுறைப்படுத்தல் பொறிமுறை

இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு.

| நிறுவனத்தின் பெயர் | தொழிற்பாடு |
|---|---|
| இலங்கை தேயிலைச் சபை | • தகைமையுடைய கடன்பாட்டாளர்களை அடையாளம் காண்பதற்கான பிரமாணங்களைக் குறித்துரைக்கும் பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் விடுத்தல்.<br>• பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளிலிருந்து விண்ணப்பங்களைப் பெறுதல், மதிப்பிடுதல் மற்றும் தொடர்பான வங்கிகளுக்கு அவர்களின் விதந்துரைப்புடன் அவற்றை அனுப்பி வைத்தல்<br>• இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு I இன்படி கடன்களுக்கு விண்ணப்பிப்பதற்காக விதந்துரைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளின் பெயர்களை மத்திய வங்கிக்கு அனுப்புதல்<br>• பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளின் சொத்துடமையில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள், இலங்கை தேயிலைச் சபையின் நிபந்தனைகளை/ ஒழுங்குவிதிகளை மீறியமையின் காரணமாக விதிக்கப்பட்ட ஏதேனும் விதிப்பனவுகள் மற்றும் கடன் திட்டங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் என்பன தொடர்பில் தேவையானவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் அறிவித்தல் |
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் | • தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் இலங்கை தேயிலைச் சபையின் பணிப்புரைகள் என்பனவற்றில் குறிப்பிடப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க கடன்களை வழங்குதல்<br>• இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு II இல் உள்ளவாறு வட்டி உதவுதொகையின் பொருட்டு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ தலைமை அலுவலகமூடாக கோரல்களைச் சமா்ப்பித்தல் வேண்டும் |
| இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் | • அவசியமானவிடத்து தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் திருத்தங்களையும் விடுத்தல்.<br>• இலங்கை தேயிலை சபையினால் விதந்துரைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட தேயிலை தொழிற்சாலைகள்/ விண்ணப்பதாரிகளின் பெயர்களைப் பதிவு செய்தல்.<br>• ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளின் பின்னா் நிதியமைச்சிற்கு கோரல்களைச் சமா்ப்பித்தல்.<br>• நிதியமைச்சிலிருந்து பெற்ற வட்டி உதவுதொகையினை தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்துதல்<br>• மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களினூடாக உதவுதொகைத் திட்டங்களின் செயலாற்றத்தினை பின்தொடர்தல் மற்றும் அவசியமான வேளையில் நிதியமைச்சிற்கு அறிக்கையிடுதல் |

## 3. செயற்றிட்டக் காலம்

ஆரம்பம் : 2015 ஓகத்து 14

முடிவுறுத்தல் : 2017 ஓகத்து 14 இற்கு முன்னா் முடிவுறுத்த அல்லது புறக்கீடு செய்ய அல்லது இலங்கை அரசாங்கத்தினால் நீடிக்கப்பட்டாலொழிய 2017 ஓகத்து 14ஆக இருக்கும்.

## 4. வட்டி உதவுதொகையின் அளவு

ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.258 மில்லியனாக இருக்கும்.

## 5. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

அமானா வங்கி பிஎல்சி
இலங்கை வங்கி
கொமா்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
டிஎவ்சிசி வங்கி பிஎல்சி
டிஎவ்சிசி வா்தன வங்கி பிஎல்சி
அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி பிஎல்சி
பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
மக்கள் வங்கி
சம்பத் வங்கி பிஎல்சி
செலான் வங்கி பிஎல்சி
ஸ்டான்டட் சார்டட் வங்கி
யூனியன் வங்கி கொழும்பு பிஎல்சி

**6. தொழிற்படுகின்ற மூலதன கடன்களின் அளவும் மீள்கொடுப்பனவுக் காலமும்**

6.1 2015இன் முதற் காலாண்டிற்கான, தொடர்பான பதிவு செய்யப்பட்ட தேயிலை தொழிற்சாலையின் நிறையேற்றப்பட்ட சராசரி மொத்தப் புள்ளிவிபர அடிப்படையில் ஒருமாத தொழிற்படு மூலதன தேவைப்பாடு.

6.2 மீள்கொடுப்பனவு ஐந்து (05) ஆண்டு காலப்பகுதிக்குள்

**7. பிணையம்**

ஏற்கனவேயுள்ள வசதிகளுக்காக பிணை வைக்கப்பட்ட பிணையங்களை உத்தேச தொழிற்படு மூலதன கூறுக்காகவும் விரிவுபடுத்தமுடியும்

**8. தொழிற்படு மூலதனத்திற்கான வட்டிவீதம்**

வாடிக்கையாளரிடமிருந்து ஆண்டொன்றிற்கு 6.00 சதவீத வட்டி அரசாங்கம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மேலதிகமான 2 சதவீத வட்டியை வழங்கும்.

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

பிரதி: திறைசேரிச் செயலாளர்
நிதியமைச்சு
செயலகம்
கொழும்பு - 1

இணைப்பு I (இ.தே.சபையினால் நிரப்பப்பட்டு இ.ம.வங்கிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்)

**தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம்**
**கடன் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

1) தேயிலைத் தொழிற்சாலையின் பெயர் : ........................................................................................................................

2) தேயிலைத் தொழிற்சாலையின் பதிவு இலக்கம் : ........................................................................................................................

3) தேயிலைத் தொழிற்சாலையின் முகவரி : ........................................................................................................................
........................................................................................................................

4) தொலைபேசி இலக்கம்/ தொலைநகல் : ........................................................................................................................

5) விண்ணப்பதாரரின்/ தாரர்களின் அந்தஸ்து : ☐ பணிப்பாளர்/ கள் ☐ உரிமையாளர்/ பங்காளர் ☐ கம்பனி

6) விண்ணப்பதாரி/ பங்காளர்/ பணிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி :

| | **விண்ணப்பதாரி/ பங்காளர்/ பணிப்பாளரின் பெயர்** | **முகவரி** | **தே.அ.அ.இலக்கம்/ வியாபார பதிவு இலக்கம்** |
|---|---|---|---|
| (i) | | | |
| (ii) | | | |

7) உத்தேச வசதி விண்ணப்பிக்கப்பட்ட வங்கியும் கிளையும் :

வங்கி : ........................................................................

கிளை : ........................................................................

8) விதந்துரைக்கப்பட்ட கடனின் விபரம் :

தொகை : ரூ. ...............................................................
மீள்கொடுப்பனவுக் காலம் : ...............................................................

9) வேறுஏதேனும் தகவல்கள் (நிபந்தனைகள் போன்றவை ஏதேனும் இருப்பின்)

.............................................................................................................................................................................................................

................................................. ................................................................................................

திகதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கையொப்பம்

இணைப்பு II - (பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் சமர்பிக்கப்படவிருக்கும் வங்கி உதவி தொகைக்கான கோரல்படிவம்)

**தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம்**

**...................................... முடிவடைந்த காலாண்டிற்கான வட்டி உதவுதொகைக் கோரல்**

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01

வங்கியின் பெயர் .........................................................................................

| தேயிலை தொழிற்சாலையின் பெயர் | கடன் பதிவு இலக்கம் | கடன்பாட்டாளர்களின் பெயர்/ பெயர்கள் | கிளையின் பெயர் | வழங்கப்பட்ட கடனின் தொகை (ரூ.) | காலாண்டின் ஆரம்பத்தில் வெளிநின்ற தொகை (ரூ.) | வட்டி வீதம் | கோரப்பட்ட உதவுதொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

இப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...............................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரையுடன்)

திகதி : ..................................................

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/டபில்யூசிஎல்எஸ்ரிஎவ்/2015/01 (ஏ-01)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2015 செத்தெம்பர் 3

தொலைபேசி : 2477447, 2477472
தொலைநகல் : 2477734

சேரல்: பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
செலான் வங்கி பிஎல்சி
சம்பத் வங்கி பிஎல்சி
கொமர்ஷல் வங்கி பிஎல்சி
அட்டன் நசனல் வங்கி பிஎல்சி
தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
டிஎவ்சிசி வங்கி பிஎல்சி மற்றும் டிஎவ்சிசி வர்தன வங்கி
நேசனஸ் ரஸ்ட் வங்கி பிஎல்சி
யூனியன் பாங்க் கொழும்பு பிஎல்சி
பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
அமானா வங்கி பிஎல்சி
ஸ்டான்டட் சார்டட் வங்கி

**தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம்**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

2015 ஓகத்து 7ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/டபிள்யூசிஎல்எஸ்ரிஎவ்/2015/01இன் 8ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றமை பற்றி இத்தால் தங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

"8. தொழிற்படு மூலதனக் கூறுக்கான வட்டிவீதம்

வாடிக்கையாளர்களிடமிருந்து ஆண்டொன்றிற்கு 6.00 சதவீத வட்டி. இலங்கை அரசாங்கம், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினூடாக இரண்டாண்டு காலப்பகுதிக்கு மாத்திரம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2 சதவீத வட்டி உதவுதொகையினை வழங்கும். அதன் பின்னர் மொத்த வட்டியும் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படும்"

**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: ஆர்டிடி/டபில்யூசிஎல்எஸ்ரிஎவ்/2015/01 (ஏ-02)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01.
2015 ஒத்தோபர் 12

தொலைபேசி : 2477447, 2477472
தொலைநகல் : 2477734
சேரல்: பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
செலான் வங்கி பிஎல்சி
சம்பத் வங்கி பிஎல்சி
கொமர்ஷல் வங்கி பிஎல்சி
அட்டன் நசனல் வங்கி பிஎல்சி
தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
டிஎவ்சிசி வங்கி பிஎல்சி மற்றும் டிஎவ்சிசி வர்தன வங்கி
நேசன்ஸ் ரஸ்ட் வங்கி பிஎல்சி
யூனியன் பாஸ் கொழும்பு பிஎல்சி
பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
அமானா வங்கி பிஎல்சி
ஸ்டான்டட் சார்டட் வங்கி

**தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம்**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

2015 ஓகத்து 7ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/டபிள்யூசிஎல்எஸ்ரிஎப்/2015/01இன் 8ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றமை பற்றி இத்தால் தங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

8. தொழிற்படு மூலதனக் கூறுக்கான வட்டிவீதம்

வட்டி வீதம் வாடிக்கையாளர் வங்கி உறவுமுறைகளின் அடிப்படையில் வங்கியினால் தீர்மானிக்கப்படும். இலங்கை அரசாங்கம், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினூடாக இரண்டாண்டு காலப்பகுதிற்கு மாத்திரம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2 சதவீத (2%) வட்டி உதவுதொகையினை வழங்கும். அதன் பின்னர் மொத்த வட்டியும் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படும்"

**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

09.11.2015

பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
BOC/PB/RDB/SANASA/HNB

அன்புள்ள ஐயா

**வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II**

**வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம்**

நாங்கள் வட்டி வீதத்தினை ஆண்டொன்றிற்கு 12 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 10 சதவீதத்திற்கு குறைப்பது பற்றி பரிசீலிப்பதற்காக, முறையே 2009.11.26ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஏஎம்பிII/2009/1 கொண்ட வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் பந்தி 2.8இன் "வட்டி வீதங்கள்" 2013.05.10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஏஎம்பிII-ஆர்எப்/2013/2 கொண்ட தொழிற்பாட்டு

அறிவுறுத்தல்களின் பந்தி 12 மற்றும் 2015.03.31 அன்று நடைபெற்ற 13ஆம் இலக்க வழிகாட்டல் குழுக்கூட்டத்தின் 9ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 2015.07.21 அன்று நடைபெற்ற 14ஆம் இலக்க வழிகாட்டல் குழுக்கூட்டத்தின் 1.4ஆம் இலக்கத் தீர்மானம் என்பன பற்றி குறிப்பிடுகிறோம்.

இதன்படி, 2015.07.21ஆம் திகதி நடைபெற்ற வழிகாட்டல் குழுக்கூட்டம் இல.14, வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் என்பனவற்றின்கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட துணைக்கடன்களுக்காக விதிக்கப்படும் வட்டிவீதம் ஆண்டொன்றிற்கு 12 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளமை பற்றி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

ஆகவே, வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் என்பனவற்றை நடைமுறைப்படுத்தும் அனைத்து வங்கிக் கிளைகளுக்கும் வட்டி வீதங்களின் இக்குறைப்பு பற்றி அறிவிக்குமாறு தாங்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/பிஆர்/2010/03 (ஏ-04)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01.
2015 திசம்பர் 11

தொலைபேசி : 2477447, 2477437, 2477472, 2477448
தொலைநகல் : 2477733, 2477734

சேரல்: அனைத்துப் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சுபீட்சக் கடன் திட்டத்தின் (சௌபாக்கியா) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

சௌபாக்கியா கடன் திட்டத்தின் 2011 ஏப்பிறல் 01ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்/2013/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலினாலும் (திருத்தம்) 2013 சனவரி 21ஆம் திகதியிடப்பட்ட இல ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலினாலும் (திருத்தம்) பின்னாலில் திருத்தம் செய்யப்பட்ட 2010 மாச்சு 22 திகதியிடப்பட்ட இல ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவுகள் மற்றும் 3.2, 3.8, 4 மற்றும் 7 என்பன மேலும் பின் திருத்தப்படுகின்றன.

இத்திருத்தங்கள் 2015 திசெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

- **2013.01.21ஆம் திகதியிடப்பட்ட இல.ஆர்டிடி/பிஆர்/2013/03(ஏ02) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கடன் வரையறைதொடர்பான பிரிவு 3 மற்றும் துணைப்பிரிவு 3.2 என்பன பின்வருமாறு திருத்தப்படுகின்றன.**

**3.2 கடன் வரையறை:** விதிவிலக்கான விடயங்களுக்காக சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட கடன்கள் ஒவ்வொரு துணைச் செயற்றிட்டத்திற்கும் மத்திய வங்கியிலிருந்து உயர்ந்தபட்சம் ரூ.25 மில்லியன் வரையிலான மீள்நிதியிடலை பெற உரித்துடையனவாகும். துணைச் செயற்றிட்டமொன்றிற்கு ரூ.1 மில்லியனுக்கு மேற்பட்ட துணைக்கடன் தொகையினை விதந்துரைத்த கிளை முகாமையாளர் பதிவிற்காக அனுப்பப்படும் விண்ணப்பத்துடன் சேர்த்து செயற்றிட்ட மதிப்பீட்டு அறிக்கைகளையும் அனுப்புதல் வேண்டும்.

- **2010.03.22ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் சலுகைக் காலம் தொடர்பான பிரிவு 3இன் துணைப்பிரிவு 3.8 பின்வருமாறு திருத்தப்படுகின்றது.**

**3.8 சலுகைக் காலம்:** துணைச் செயற்றிட்டத்தின் தன்மைக்குட்பட்டு முதல் தவணைப்பணம் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆரம்பித்து உயர்ந்தபட்சம் 6 மாதங்களாக இருக்கும். செயற்றிட்டத்தின் தன்மைக்குட்பட்டு பாசன் பழம் போன்ற நீண்டகால பயிர்களின் பயிர்ச்செய்கைக்கான திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான சலுகைக் காலம் உயர்ந்தபட்சம் 12 மாதங்கள் வரை நீடிக்கப்பட்டது.

- **பிரிவு 4, தகைமையுடைய துணைச் செயற்றிட்டங்கள் மற்றும் பிரிவு 7, 2011.04.01ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட துணைக் கடன்பாட்டாளரை பதிவு செய்தல் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (திருத்தம்) பின்வருமாறு திருத்தப்படுகின்றன.**

4. தகைமையுடைய துணைச் செயற்றிட்டங்கள் : சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் பின்வரும் தொழில்முயற்சிகள் மாத்திரம் மீள்நிதியிடல் கோரல்களுக்கு தகைமையுடையனவாகும்.

    i. காணி மற்றும் கட்டிடம் நீங்கலாக ரூ.40 மில்லியனுக்கு குறைவான மொத்தச் சொத்துப் பெறுமதியினைக் கொண்டதும் 100 ஆட்களுக்கு குறைவான ஊழியர்களை உடையதுமான சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள்

**7. துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவு செய்தல்**

7.1 கிளை முகாமையாளர், திருத்தப்பட்ட இணைப்பு Iஇல் தரப்பட்டுள்ள பதிவு செய்தல் பின்னிணைப்பினைப் பூர்த்தி செய்து பதிவு செய்தலுக்காக தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

பங்கேற்கும் அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகங்கள் கடன்பதிவு விண்ணப்பங்களின் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் ரூ.1 மில்லியனுக்கு மேற்பட்ட துணைச் செயற்றிட்டங்கள் தொடர்பான கடன் மதிப்பீட்டு அறிக்கைகளையும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

முன்னர் விடுக்கப்பட்ட சௌபாக்கியா கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

இத்திருத்தங்களைக் கொண்ட சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தினைத் தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்கு தயவு செய்து கொண்டு வரவும்.

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

2015 திசெம்பர் 30

தொடர்பு எண் : 32/08/003/0014/001

அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாத திட்டத்தின் தொழிற்பாடுகளை முடிவுறுத்தல்**

அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாத திட்டத்தின்" தொழிற்பாடுகள், அது காலாவதியாகும் 2015 திசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் முடிவுறுத்தப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியின் தொடர்பான கிளைகளுக்கு அறிவிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

பிரதி : பிரதேச முகாமையாளர், வட மத்திய மாகாணம், இலங்கை மத்திய வங்கி
பிரதேச முகாமையாளர், மத்திய மாகாணம், இலங்கை மத்திய வங்கி
பிரதேச முகாமையாளா, தென் மாகாணம், இலங்கை மத்திய வங்கி
பிரதேச முகாமையாளர், வட மாகாணம், இலங்கை மத்திய வங்கி
பிரதேச முகாமையாளர், கிளிநொச்சி, இலங்கை மத்திய வங்கி
பிரதேச முகாமையாளர், திருகோணமலை, இலங்கை மத்திய வங்கி

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட விதி.

அர்ஜுன மகேந்திரன்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

கொழும்பு
2015 யூன் 23

**2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி**

எடுத்துக்காட்டல் — 1. இவ்விதியானது 2015ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

முதல் ஆண்டிற்கான உரிமக் கட்டணம் — 2. இவ்விதியின் திகதியிலிருந்து உரிமத்தினைப் பெறும் ஆண்டிற்காக நிதிக் கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் ரூ.2,000,000 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனை உரிமம் பெறும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதலும் வேண்டும்.

ஆண்டு உரிமக் கட்டணம் — 3. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2016ஆம் ஆண்டிற்கும் அடுத்துவரும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஏற்புடைத்தான ஆண்டு உரிமக் கட்டணத்தினை தொடர்பான ஆண்டின் சனவரி 31 அன்று அல்லது அதற்கு முன்னதாக கீழே குறிப்பிடப்பட்டவாறு, கம்பனியின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

| முன்னைய கலண்டர் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் (ரூ.) |
|---|---|
| ரூ.5 பில்லியன் அல்லது அதற்குக் கீழ் | 1,000,000/- |
| ரூ.5 பில்லியனுக்கு மேல் ரூ.10 பில்லியன் வரை | 1,500,000/- |
| ரூ.10 பில்லியனுக்கு மேல் ரூ.20 பில்லியன் வரை | 2,000,000/- |
| ரூ.20 பில்லியனுக்கு மேல் | 3,000,000/- |

| | | |
|---|---|---|
| விதிப்புக்கள் | 4. | உரிமக் கட்டணத்தினைப் பெறுவதில் காணப்படும் எந்தவொரு தாமதத்திற்காகவும் பணிப்பாளர் ரூ.500,000 இனை தண்டமாக விதித்தல் வேண்டும். அவ்வாறு விதிக்கப்பட்ட தண்டம் “மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட தண்டம்” என்ற தலைப்பில் தனியானதொரு குறிப்பின் கீழ் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். <br><br> தொடர்பான ஆண்டின் பெப்புருவரி 28ஆம் நாளன்று கொடுப்பனவினை செய்வதற்கு நிதிக் கம்பனியொன்று தவறுமிடத்து, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 37(1)(எவ்)ஆம் பிரிவின் கீழ் உரிமத்தினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| இரத்துச்செய்தல் | 5. | 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. |

**2015 இல. 01** 2015 செத்தெம்பர் 14

**உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களிற்காக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நிதித் தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல் | 1.1 | நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 12இன் நியதிகளில், நிதிக் கம்பனிகள் அல்லது நிதிக் கம்பனிகளின் ஏதேனும் குழுமம் அல்லது வகைக்கு அத்தகைய நிதிக் கம்பனிகளின் எந்தவொரு வியாபார விடயத்திலும் கம்பனி விடயங்களிலும் அவை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அவற்றிற்குச் சபையானது பணிப்புரைகளை வழங்கலாம். |
| 2. | உயர்ந்தபட்சப் பெறுமதிக்கான கடன் விகிதம் | 2.1 | 2015 செத்தெம்பர் 15 தொடக்கம் ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்கான கடன்களையும் முற்பணங்களையும் ஊர்தியின் பெறுமதியில் 70 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் (70 சதவீதமான பெறுமதிக்கான கடன் விகிதம்) வழங்கக்கூடாது. |
| | | 2.2 | மேலேயுள்ள பணிப்புரை 2.1 இற்கிணங்க வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தவிர, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக நிதிக் கம்பனியொன்று கடன்களையும் முற்பணங்களையும் வழங்கக்கூடாது. |
| 3. | விளக்கவுரை | 3.1 | இப்பணிப்புரையில் <br><br> (அ) கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக வழங்கப்படும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும். <br><br> (ஆ) உந்து ஊர்திகளின் பெறுமதி, கடன்களும் முற்பணங்களும் வழங்கப்படுகின்ற நேரத்தில் நிலவுகின்ற நடைமுறைகளுக்கிணங்க தொழில்சார் நிபுணத்துவ மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட சந்தைப் பெறுமதியாக இருத்தல் வேண்டும். |

அர்ஜுன மகேந்திரன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2015 இல. 02** 2015 ஒத்தோபர் 29

**உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான 2015 செத்தெம்பர் 14ஆம் திகதியிடப்பட்ட 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் பணிப்புரை 2015 திசெம்பர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

அர்ஜுன மகேந்திரன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2015 இல. 01** 2015 செத்தெம்பர் 14

### உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களிற்காக சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் (இதனகத்துப் பின்னர் பணிப்பாளர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல் | 1.1 | 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு பகிரங்க கம்பனிகளாகவுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு (இதனகத்துப் பின்னர் “சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்” என குறிப்பீடு செய்யப்படும்) பொதுவான பணிப்புரைகளை விடுக்க பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. |
| 2. | உயர்ந்தபட்ச பெறுமதிக்கான கடன் விகிதம் | 2.1 | 2015 செத்தெம்பர் 15 தொடக்கம் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்கான கடன்களையும் முற்பணங்களையும் ஊர்தியின் பெறுமதியில் 70 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் (70 சதவீதமான பெறுமதிக்கான கடன் விகிதம்) வழங்கக்கூடாது. |
| | | 2.2 | மேலேயுள்ள பணிப்புரை 2.1 இற்கிணங்க வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தவிர, உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று கடன்களையும் முற்பணங்களையும் வழங்கக்கூடாது. |
| 3. | விளக்கவுரை | 3.1 | இப்பணிப்புரையில் |

(அ) கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் மற்றும் உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக வழங்கப்படும் ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) உந்து ஊர்திகளின் பெறுமதி, கடன்களும் முற்பணங்களும் வழங்கப்படுகின்ற நேரத்தில் நிலவுகின்ற நடைமுறைகளுக்கிணங்க தொழில்சார் நிபுணத்துவ மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட சந்தைப் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

கே எம் ஏ என் டவுலகல
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**2015 இல. 02** 2015 ஒத்தோபர் 29

### உந்து ஊர்திகள் தொடர்பான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான 2015 செத்தெம்பர் 14ஆம் திகதியிடப்பட்ட 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் பணிப்புரை 2015 திசெம்பர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

யு பி அலவத்தகே
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**